1556

[...தி 18] கார்த்திகைமீ : : November, 1926 [பகுதி 11

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு ...	401
ரிக் வேதம் ...	402
தேவாரமும் அதன் சிறப்பும்	405
சிறுத்தொண்டர்	408
இரஞ்சிதம்—(நாவல்)	414
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ...	427
வர்த்தமானக் குறிப்புகள்	440

OFFICE OF THE REGIST...
22 DEC 19..
MADRA...

சித்திரப் படங்கள்

வஸுதேவர் குழந்தை கிருஷ்ணனுடன் யமுனையைக் கடத்தல் (முகப்புப் படம்.)

(1) ஸ்ரீ கிருஷ்ண ஜனனம். (2) வடபத்ரசாயீ. (3) யசோதை கிருஷ்ணன். (4) கிருஷ்ணன் வாய்திறக்க பிரமாண்டம் காணப்படுதல். (5) ஸ்ரீ கிருஷ்ணன் வேணுகானம். (6) காளிங்கமர்த்தனம். (7) ஸ்ரீ கிருஷ்ணன் ருக்மணியைத் தேறிலேற்றிச் செல்லல், (8) கீதோபதேசம். (9) க்ஷீராப்தி ஸயனம்.

JL
J.M211,N08VB.
N26.18.11.
218384.

குறைக்கப்பட்ட சந்தா (தபால் செலவுடன்):—உள்நாடுகளுக்கு ரூ. 3-8-0 : : வெளிநாடுகளுக்கு ரூ. 4-8-0

நாங்கள் விளம்பரம் செய்துவந்த கஞ்சியை நீங்கள் உபயோகித்தீர்களா?

ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதை சமீபத்தில் உபயோகித்து பலத்தையும் சுகத்தையும் அடைந்திருக்கிறார்கள். இன்புளுயன்ஸா ஜுரத்தில் ஆயிரக்கணக்கான டின்கள் உபயோகமாகி, இப்பொழுது கிடைப்பதற்குள் முதல்தரமான கஞ்சி என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை உபயோகித்த ஒருவரிடமிருந்து வந்த கடிதத்தைக் கீழே எழுதுகிறோம்:—

"நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) பலத்தைத் தரும் கஞ்சியென்று நீங்கள் வெளியிட்டிருக்கும் விளம்பரத்தைப் பார்த்தபோது, அது குழந்தைகளுக்குத்தான் ஏற்பட்ட ஆகாரம் என்று நான் கேள்விப்பட்டிருப்பதால், ஏளனம் செய்தேன். கொஞ்ச நாட்களுக்கு முன்பு எனக்கு இன்புளுயன்ஸா ஜுரம் வந்து நுரையீரல் வீங்கிவிட்டது. வைத்தியர் நொய்க்கஞ்சி, ரொட்டி, தேத்தண்ணீர், ஸோடா, பால் இவைகளை சாப்பிடச் சொன்னார். ஆனால் இவைகளில் ஒன்றாவது, அடிக்கடி உண்டான வாந்தியினால் வயிற்றில் தங்கவில்லை. அந்த சமயத்தில் உங்கள் விளம்பரத்தைப் பார்த்திருந்த என் மனைவி ஒரு டின் நெஸ்லேஸ் பால் ஆகாரம் வாங்கி வந்து எனக்கு ஒரு கோப்பை கொடுத்தாள். ஆ! ஆ! என்ன அற்புதமான குணம் தெரியுமா? நான் பிறகு வாந்தி எடுக்கவேயில்லை. அதுமுதல் இது பரியந்தம் எனது உணவு நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) தான்.

பால் அல்லது கஞ்சியை உணவாகக்கொள்ளும் எல்லா சமயங்களிலும் நெஸ்லேஸ் பால் ஆகாரம் நல்ல பலனைத்தரும்.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS
CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

தமிழ் அபிமானிகளுக்கு

சென்ற **19**-வருஷகாலமாக, தமிழ் அபிவிருத்தியின் பொருட்டு, விவேக போதினி, எவ்வித இடையூறுகளையும் பொருட்படுத்தாமல், எவ்வயதினற்கும் எக்காலத்துக்கும் உபயோகப்படக்கூடிய மிக்க அரிய விஷயங்களையே தாங்கி வெளிவந்துகொண் டிருப்பதை நேயர்கள் நன்கு அறிவர். இதன் உபயோகத்தை இன்னும் அதிகப்படுத்த விரும்பி, சந்தாவை 1927-ம்ஸு ஜனவரி முதல் குறைத்துவிட்டோம். நேயர்களின் பூரண ஆதரவை எதிர்பார்க்கிறேம். சந்தாதார்க்கு மாத்திரமே புத்தகங்கள் குறைந்த விலை.

குறைக்கப்பட்ட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூ.	**3—8—0**	தபால் செலவுடன்
பினுங், சிங்கப்பூர், நேடால், மோரீசு தீவுகள்	,,	**4—8—0**	
தனி சஞ்சிகை	,,	**0—5—0**	

சந்தாவைக் குறைத்தபோதிலும், வழக்கம்போல் இருபாலார்க்கும் உபயோகமான அருமையான விஷயங்களே, விலை யுயர்ந்த கிளேஸ் காகிதத்தில், அழகிய ஆப்டோன் படங்களுடன் வெளியிடப்படுகிறது.

குறிப்பு:— ரு. **1-8-0** விலையுள்ள இனும் புத்தகங்கள் சந்தாதார்க்கு கொடுத்துவந்ததை நிறுத்தி விட்டோம். ஆனல் சந்தாதார்க்கு மாத்திரம் (சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிராதவர்களுக்கு) எங்கள் காரியாலயத்திலுள்ள எவ்விதத் தமிழ்ப் புத்தகங்களும் மிகக் குறைந்த விலைக்கு அனுப்பப்படும்.

சந்தா நேயர்களுக்கு

சந்தாப்பணம், புத்தகங்களுக்கு ஆர்டர் இவைகளை அல்லயன்ஸ் கம்பெனி, "ஷண்முக விலாசம்" மயிலாப்பூர் என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேம். சந்தாப் பணத்தை மணியார்டர் மூலம் அனுப்புவதே மிகவும் லாபகரமானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. சந்தாத் தொகை அனுப்பும்போதும், புத்தகங்களுக்கு ஆர்டர் செய்யும்போதும், சந்தா நேயர்கள் தங்கள் பதிவு இலக்கத்தைக் குறிப்பிடுதல் மிகவும் அவசியம்.

புது வருஷ காலண்டர்

திருப்புகழ் விருத்தியுரை சந்தாதார்க்கும், விவேக போதினி சந்தாதார்க்கும் மாத்திரம் இனமாய்க் கொடுக்கப்படும். மற்றவர்கள் (காலண்டர் 0 3-0 + தபாற் செலவு 0-1-0) ஆக 4 - அணுவுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம் முன் வருஷங்களைக் காட்டிலும் இவ்வருஷம் காலண்டர் மிக்க அழகாய்ப் பிரிண்ட் செய்யப்பட்டிருக்கிறது. எல்லாம் திரு முருகன் படங்கள் கண்ணை கவர்கின்றன. காலண்டருக்கு முந்துங்கள்.—**100**-காலண்டர் ரூ. **15-0-0.**

To Our Friends & Customers

With a view to place the Journal within the easy reach of all classes of people, we have with effect from January 1927 reduced the subscription rates as follows :—

Annual Subscription	(Post Free.)
India, Burma, Ceylon	Rs. **3-8-0**
Strait Settlements, South Africa	,, **4-8-0**
Single Copy	,, **0-5-0**

Note:—The Supply of Free Books for Re. 1-8-0 to subscribers will be discontinued from January 1927. Subscribers not in arrears will however have books at greatly reduced rates.

Contract Advertisement Rates

Rs.	**150-0-0**	per page per annum.	
,,	**80-0-0**	,, ½ page	,,
,,	**45-0-0**	,, ¼ ,,	,,

விளம்பர விகிதம்

முழுப்பக்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு ரூ.	**150**
அரைப்பக்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு ,,	**80**
கால் பக்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு ,,	**45**

குறிப்பு:—அரை வருஷத்துக்கு ஷை விகிதத்தில் பாதி வாங்கப்படும். 6-மாதத்துக்கு குறைந்த காலத்துக்கு விளம்பரங்கள் எற்றுக்கொள்ளப்படமாட்டா.

Address:— The Alliance Co., "Shanmuga Vilas" Mylapore.

A. (No. 963) **letris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு :—தேபிலேக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேபிலேக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தி யடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலேப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை :

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

248384.

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்,

இப்புதிய நாவல் பெயர்பெற்ற துப்பனுன ஷண்முக சுந்தரத்தின் துப்புத் திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஆரம்பத்தில் எவரும் பிரவேசிப்பதற் கரிதான கருங்கற்கோட்டையில் காவற்காரன் எஜமானியைக் கொன்றதாகத் தெரியவருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஷண்முகசுந்தரம் அழைக்கப்பட்டு, அந்த அம்மாள் இறக்கவில்லையென்று அறிந்து அவளை உயிர்ப்பித்து, காவற்காரன் குற்றவாளியல்லவென நிரூபித்து, அப்பிராந்தத்தில் பேர்பெற்ற கொள்ளைக்காரனுன சிங்கமாமுகனைத் தொடர்ந்து, அவன் தாசியை மயக்கி அவனதிருப்பிடத்தையறிந்து, சந்நியாசிவேடம் பூண்டு சிங்கமாமுகனுக்குச் சிகிச்சைசெய்யச் சென்று, அப்போது தன் மந்திர சக்தியால் தீரனுன சிங்கமாமுகனையடக்கி வீழ்த்தி அவனைக் கொல்ல முயன்ற துருக்க சந்நியாசி யொருவனை தன்னுடைய நிகரற்ற மந்திர சக்தியால் அடக்கி, சிங்கமாமுகன்பூண்ட பலவேடங்களையும் துருக்கச் சந்நியாசியின் வேடத்தையும் எளிதில் ஊகித்து, அந்த அம்மாளது கணவனுன துருக்கச் சந்நியாசியையும் சகோதரனுன சிங்கமாமுகனையும் சிநேகப்படுத்தி, கற்பின் அவதாரமான அந்த அம்மாளது கற்பைச் சந்தேகித்து ஆராயாது செய்த செய்கைகளில் யாவருமுற்ற துயரத்தை எடுத்துக்காட்டுகிறுன். மிவுகம் எளியநடையில் எழுதப்பட்டுளது. எடுத்தவர் படித்துமுடிக்காமல் கீழே வைக்கமுடியாது. நான்கு அழகிய சித்திரப்படங்கள் அடங்கியது. விலை ரூ. ஒன்றுதான். விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம், அணு 13.

சந்தாதார்க்கு மாத்திரம் மிகக் குறைந்த விலை

		ரூ.	அ
1.	இராமாயண வினுவிடை	1	8
2.	இராமாயண ஸாரம்	1	0
3.	ஸ்ரீமத் பாரத ஸாரம்	1	2
4.	ஸ்ரீமத் பாகவத ஸாரம்	1	0
5.	ஆரியமத உபாக்கியானம் I	0	8
6.	ஷை 2-ம் பாகம்	0	10
7.	ஸ்ரீமத் பாரத வினுவிடை II	1	4
8.	ஷை III	1	4
9.	ஜகஜ்ஜோதி	0	10
10.	புலவர் சரித்திரத் திரட்டு	0	8
11.	பீமலா அல்லது திவான் மகள்	0	8
12.	ஸ்திரீ ரத்னம்	1	4
13.	ஐரோப்பிய மஹா யுத்தம்	1	4
14.	வியாஸ விதானம்	0	12
15.	ருக்மிணி அல்லது பதி பக்தி	0	8
16.	ஸ்ரீ பால பாரதம்	0	8
17.	ஸ்ரீ பால ராமாயணம்	0	8
18.	நால்வர் சரித்திரம்	0	12
19.	பாண்டவ சரித்திரம்	2	4
20.	திருமூலர் திருமந்திரம்	2	4
21.	தஞ்சாவூர் ஜில்லா வரலாறு	0	8
22.	ஷண்முக விஜயம்	0	12
23.	பால ஷண்முக விஜயம்	0	8
24.	திருப்புகழ் பாராயணத் திருமுறை	1	0
25.	திருப்புகழ் இரத்தினமாலை	0	3
26.	திருஞான சம்பந்தர்	0	2½
27.	மாணிக்க வாசகர்	0	2
28.	சுந்தரர்	0	2
29.	மூர்த்திநாயனுர் சரித்திரம்	0	3
30.	விசாரசன்மர்	0	3
31.	கந்தரலங்காரம், கந்தரனுபூதி	0	3
32.	பஞ்சரத்தினம்	0	12
33.	மரகதவல்லி	0	12
34.	கமலாகாந்தன்	0	2
35.	திருமயிலைச் சிறப்பு	0	2
36.	இயற்கை அற்புதங்கள்	0	10
37.	பூதத்வ போதினி	0	10
38.	ஹனுமப் பிரபாவம்	0	3
39.	தேடாத செல்வம்	0	3
40.	பிரபாவதி	0	3
41.	கிரிஸெல்டா	0	4
42.	பாரதன் (நாடகம்)	0	12
43.	திருக்குறள் நீதிக்கதைகள்	0	10
44.	பாதாள வாசி	0	6
45.	தசகுமார சரித்திரம்	0	6
46.	கன்றுங் கனியுதவும்	0	6
47.	தஞ்சைநாயகர் தாழ்வு	1	0
48.	விஜயபாஸ்கரன்	2	0
49.	ஷண்முகசுந்தரம்	2	0
50.	தனபாக்கியம்	2	0
51.	விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்	1	0
52.	மோகனுங்கி	1	4
53.	சிவகுமாரன்	1	0
54.	மைதிலி	0	12

குறிப்பு:—மேற்கண்ட புத்தகங்கள், சந்தாதார்களுக்கு மாத்திரம், "ரூபாய்க்கு 3 அணு வீதம்" கமிஷன் தள்ளி அனுப்பப்படும். ஒரு ரூபாய்க்குக் குறைந்த புத்தகங்கள் வி. பியில் அனுப்பப்படமாட்டா. புத்தக விலைக்கு தபால் தலைகள் அனுப்பினல் புத்தகங்கள் உடனே அனுப்பப்படும். சந்தாவை பாக்கியில் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, புத்தகங்கள் குறைந்த விலைக்கு அகப்படாதென்பதைக் கவனிக்கவும்.

விலாசம்:— அல்லயன்ஸ் கம்பெனி, "ஷண்முக விலாஸம்" மயிலாப்பூர்.

மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்

திரு. வி. கலியாண சுந்திர முதலியார் எழுதியது.

[இரண்டாம் பதிப்பு]

மிகவிரிவாக எழுதப்பட்டது.

௫௧௨ - 512 பக்கங்கோண்டது.

இந்நூல் காந்தியடிகள் வரலாற்றைக் கூறுவதன்று. இஃது அவர் வரலாற்றிலுள்ள நுட்பங்கள் மனித வாழ்க்கையோடியைந்து நிற்கும் முறையைக் குறிப்பது; அதாவது காந்தீயத்தை அறிவுறுத்துவது. இந்நூற்கண் விளங்கும் பொருள் மூன்று. (க) மனிதப் பிறவியின் விழுப்பமும் மனிதன் எவன் என்பதும் (உ) ஒருவன் மனிதனாக எத்தகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பது (௩) மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மாகாந்தி என்பது.

இந்நூற்கண் பெண்மக்கட்குரிய பொருள், ஆண்மக்கட்குரிய பொருள், இளைஞர்க்குரிய பொருள், அரசியலுக்குரிய பொருள், சத்தியாக்கிரகப் பொருள், சமயப்பொருள் முதலிய பல பொருள்கள் காணலாம். இல்லறம், தியாகம், அஹிம்சை, சுயராஜ்யம், சத்தியாக்கிரகம், சமய வாழ்வு முதலியன வாசிப்போர்க் கின்பூட்டுவன. சமய வாழ்வில் சமரச சன்மார்க்க நுட்பம் மிக விளக்கமாக ஓதப்பட்டிருக்கிறது.

அடிகள் அறவுரைகளைத் திரட்டி ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவைகளை முறைப்படுத்தியுள்ள ஒழுங்கும் பொருளும் வாசிப்போர்க்கு இன்பூட்டுவதோடு நேரியவாழ்வு நடாத்துமாறு அவரை அவைகள் தூண்டும். சன்மார்க்கத்துறைகள் பல இந்நூற்கண் காணலாம். விலை ரூபா **2**.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை! ஒரு மாதம் வரை பாதி விலை!!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம்

மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் 13 அண. 5 பலம் 15 அண.
ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 1புட்டி அண 4.
(போஸ்டேஜ் உள்பட)
மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.
தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பனி ! பனி ! !

கம்பளிப் போர்வைகள்

பனி காலங்களுக்கு உபயோகமானதும், நீடித்து உழைக்கக் கூடியதுமான கம்பளி ரோமத்தால் நெய்யப்பட்டதும் மிகவும் நயமும், கெட்டியும் நல்ல சாயமும் நைசும் பளபளப்பும் உள்ளதுமான கம்பளிப் போர்வைகள் செவப்பு முதலிய எல்லா நிறங்களிலும் கிடைக்கும். விலை விபரம்:—

6 × 3 நெம்பர் 1 போர்வை 1-க்கு ரூ 12-0-0
,, நெம்பர் 2 போர்வை 1-க்கு ரூ. 10-0-0
,, நெம்பர் 3 போர்வை 1-க்கு. ரூ 8-0-0

Address.—Manager, (A. No. 2914)
Silk Pitamber Co., *Benares City.*
விலாஸம்:—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல
(இன்னும்)
வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்
எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பேரும் புகழும் பெற்றிருக்கின்றன !

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்
கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26-பிராட்வே, மதராஸ்.

இனாம்! இனாம்!! முற்றிலும் இனாம்!!!

'C' ரிஜிஸ்டர் 'C' Regd.

டைம்பீஸ் டைம்பீஸ்



இனாம் இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

உ வேலுமயிலுந் துணை

ஷண்முக விஜயம்

திருப்புகழ்
விருத்தியுரை

படங்களுடன்

விலை அணா 12

முதல் தொகுதி :: 6-படை வீடுகள்

டேமி அளவில், 64- பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்பு	ரூ. 4 12	கிளேஸ் தனி சஞ்சிகை	அணா	8
பெதர்வெயிட் காகிதப் பதிப்பு	,, 6 0	பெதர் வெயிட்	ஷை ,,	10

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்:— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, மூத்னூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனல் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி:— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

ஸ்வராஜ்யா:— * * பெயர் மாத்திரையில் விருத்தியுரையாய் இராமல், உட்பொருளையும் பலரும் அறியக்கூறும் விருத்தியுரையாய் உளதென்பதைக் குறிப்பிடவேண்டும். பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

குமரன்:— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்.—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியதாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச் செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமாஸ போதினி.—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்கு விளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத் தக்கதே என நாம்கூறுவோம்.

விலாஸம் :— அல்லயன்ஸ் கம்பெனி, "ஷண்முக விலாசம்" மயிலாப்பூர்.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரெஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினுல் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு (4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்) விலை ரூ. 2—0—0

வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத், மார்க்கட், பம்பாய்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 { அக்ஷய௵ கார்த்திகை௴ :: 1926-௵ நவம்பர்௴ } பகுதி 11

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

சீட்டழகு விட்டுத் தளர்ந்தங் கிருந்துமுன
மிட்டபொறி தப்பிப் பிணங்கொண்ட தின்சிலர்கள்
கட்டனமெ டுத்துச் சுமந்தும் பெரும்பறைகள்
முறையோடே
வெட்டவிட வெட்டுக் கிடஞ்சங் கிடஞ்சமென
மக்களொரு மிக்கத் தொடர்ந்தும் புரண்டும்வழி
விட்டுவரு மித்தைத் தவிர்ந்துன் பதங்களுற
வுணர்வேனோ ?
பட்டுருவி நெட்டைக் கிரௌஞ்சம் பிளந்துகடல்
முற்றுமலை வற்றித் குழம்புங் குழம்பமுனை
பட்டஅயில் தொட்டுத் திடங்கொண் டெதிர்ந்தவு
[ணர்
முடிசாயத்
தட்டழிய வெட்டிக் கவந்தம் பெருங்கழுகு
நிர்த்தமிட ரத்தக் குளங்கண் டுமிழ்ந்துமணி
சற்சமய வித்தைப் பலன்கண்டு செந்திலுறை
பெருமானே !

(ப-ரை.) பட்டு உருவி நெட்டை கிரௌஞ்சம் பிளந்து-தாக்கி அதனூடே பாய்ந்து உயர்ந்தகிரௌஞ்ச மலையைப்பிளந்து, கடல் முற்றும் அலை வற்றி குழம்பும் குழம்ப-கடல் முழுவதும் அலைவீசும் நீர்வற்றிச் சேறும் உண்டாகும் வண்ணம், முனை பட்ட அயில் தொட்டு - கூர்மை பொருந்திய வேலாயுதத்தைப் பிரயோகித்து, திடம் கொண்டு எதிர்ந்த அவுணர் முடி சாய தட்டழிய-மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு நின்னை எதிர்த்த அசுரர்கள் தலைகளை யிழந்து (அசுர சேனை) நிலைகுலையுபாறு, வெட்டி - அவர்களை வெட்டி, கவந்தம் பெரும் கழுகு நிர்த்தம் இட-கவந்தங்களும் பெரிய கழுகுகளும் (களித்து) ஆடுமாறு, ரத்த குளம்கண்டு - இரத்தம் குளமாகத் தேங்கும்படி செய்து,மணி உமிழ்ந்து - அழகிய (ஞான) ஒளி வீசி, சத் சமய வித்தை பலன் கண்டு-சத்து (உண்மை)ப் பொருளை யறிவதற்குரிய நெறியைக் கூறும் சமயத்தில் நிற்கக் கற்பதனாலுண்டாகும் பலன் இன்னதென வுணர்த்தி, செந்தில் உறை பெருமானே-திருச்செந்தூரில் நிலைமையாக எழுந்தருளியிருக்கும் பெரியோனே !, கட்டழகு விட்டு - மிகுந்த அழகானது நீங்கப்பெற்று, தளர்ந்து-தேகம் தளரப்பெற்று, அங்கு இருந்து-அந்நிலைமையில் சிலகாலம் இருந்து, முனம் இட்ட பொறி தப்பி-முன்பு விஷய சுகங்களில் புகுந்துவிட்ட புலன்கள் தங்கள் தொழில்களைச் செய்வதை ஒழித்துவிடப் பெற்று, பிணம் கொண்டதின்-(மரித்து) பிணமானபிறகு, சிலர்கள் கட்டணம் எடுத்து சுமந்து (உம்-அசை)-சிலர் கூலி வாங்கிக்கொண்டு (ஜீவனற்ற ஜடத்தை) தூக்கிக்கொண்டு செல்ல, பெரும் பறைகள் முறையோடு(ஏ - அசை) - பெரிய தம்பட்டங்கள் வழக்கப்படி, வெட்டவிட வெட்டக் கிடஞ்சங் கிடஞ்சம்—, என - என்று முழங்க, மக்கள் ஒரு மிக்க தொடர்ந்தும் புரண்டும் வழிவிட்டு வரும் - பெண்களும் பிள்ளைகளும் ஒன்று கூடிச் சேர்ந்து பின்தொடர்ந்து வந்து கீழே புரண்டு (அழுது எமலோகத்துக்குச் செல்ல) வழிவிட்டு வருவதான, மித்தை தவிர்ந்து - பொய்யான உலக வாழ்க்கையை ஒறுத்துத்தள்ளி, உன் பதங்கள் உற உணர்வேனோ - நினது பாதமலர்களைப் பெறுவதற்கவசியமான மெய்யுணர்வைப் பெறுவேனோ?

(வி-ரை) முருகப்பெருமான் போர்க்களத்தில்காட்டிய திறமையைக் கண்டு அச்சமுற்ற சிங்கமுகன் முதலான அசுரர்கள் சூரபதுமனது நிந்தைமொழிகளைக் கேட்டு மனம் பொறுததனால் தங்கள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சென்று அப்பெருமானை எதிர்த்து வெட்டுண்டு மாய்ந்தது இப்பாடலில் கூறப்பட்டிருக்கிறது.

திருப்புகழ் விருத்தியுரை, 375-316-ம் பக்கங்கள்.

வேட்ட பொழுதி னவையவை போலுமே தோட்டார் கதுப்பினா டோள்.

விவேக போதினி

தொ. 18] அக்ஷயஸ்ரீ கார்த்திகைமீ [ப. 11

ரிக் வேதம்

RIG VEDA

இந்திய ஆரியர்களாலும் அவர்கள் சந்ததியார்களாலும் அநாதியாக இருந்திருப்பதாகவும், ரிஷிகள் முகமாய் வெளிப்பட்டிருப்பதாகவும் நினைக்கப்படும் கிரந்தங்களுக்கு வேதங்கள் எனப்பெயர். வேதம் என்னும் பதம் ஸம்ஸ்க்ருதத்தில் 'வித்' என்னும் பகுதியிலிருந்து வந்த வார்த்தையாம். அப்பகுதிக்கு 'அறிவது' என்றர்த்தம். ஆகையால், வேதம் என்னும் வார்த்தையை அறிவு, ஞானம் என மொழிபெயர்க்கலாம். வேதங்கள் நான்கு. ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணமெனப் பெயர்பெறுவன.

இப்பாரத நாட்டில் பரவி வந்துள்ள மதங்களாகட்டும்; தத்துவ பாகங்களாகட்டும்; வைதிக லௌகிக தர்மங்களை யொட்டிய நாகரிகங்களாகட்டும்; எல்லாம் இந்நான்கு வேதங்களிலிருந்தே ஏற்பட்டுள்ளன.

அவற்றுள் தொன்மையானது ரிக்வேதமாம். மண்டலங்களெனப் பெயர்பெற்ற பத்து பாகங்களையுடையது. 1028-ரிக் (மந்த்ரங்களை) யுடையது. இந்த மந்த்ரங்களில் சில மிகப்பெரியன மற்றும் சில சிறியன. மூன்று முதல் 58 பஞ்சாதிகளையுடையன. ஆனால் அவற்றில் அநேகம் 10, 12 பஞ்சாதிகளையே உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன. பஞ்சாதியென்பது ஒரு சுலோகம் போன்றது. அதில் 3 அல்லது நான்கு அடி (வரி) கள் உண்டு. ரிக்வேதத்தில் மிகப் பெயர்பெற்ற காயத்ரி மந்த்ரம் மூன்றடிகளுள்ளது. காயத்ரியென்பதே ஒரு '(ச்) சந்தஸ்' என்கிற விருத்தத்துக்கும் பெயராம். இந்த விருத்தத்தில் ரிக் வேதத்தில் பல பஞ்சாதிகள் உள்ளன. வேறொரு முக்கியமான விருத்தம் த்ரிஷ்டுப் அனுஷ்டுப் சந்தஸிலும் அநேக பஞ்சாதிகள் இருக்கின்றன. இவ்வனுஷ்டுப் சந்தஸையே ஸ்ரீமத் ராமாயணத்தில் வால்மீகி பகவான் விசேஷமாக உபயோகித்திருக்கிறார். ரிக் வேதத்தில் இன்னும் பல விருத்தங்களும் உள்ளன.

ஒவ்வொரு அடியிலும் எட்டு முதல் 12 அசை (syllable)கள் உண்டு. இவ்வேதப் பஞ்சாதிகளிலிருந்துதான் ஸம்ஸ்க்ருதத்தில் பின்னர் ஏற்பட்ட செய்யுள்முறை உண்டாயிற்று. ரிக் வேத மந்த்ரங்கள் இருக்கும் முறையும் அவை அமைந்துள்ள சொல் திறமும் வியக்கத்தக்கன.

பழைய காலங்களிலிருந்து வந்திருக்கும் நூல்கள் எல்லாம் அநேக விடங்களில் பாட பேதங்களுடையனவாய் இருப்பது ஸகஜம். ஆனால் ரிக் வேதத்திலோ அப்படியல்ல. ஹிந்துமத ஸித்தாந்தத்துக்கு அவசியமான நூலாதலின் அப்படி பேதமேற்படாமல் அதை நமது முன்னோர் காப்பாற்றி வந்திருக்கின்றனர். ரிஷி குலங்களில் அவை ஆதிமுதல் தலைமுறை தத்துவமாக கர்ண பரம்பரையில் அத்யயனம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அவைகளை வெகு ஜாக்கிரதையாகக் கற்பதிலும், தாம் கற்றதைத் தமது சிஷ்யர்களுக்குப் பாடம் பண்ணுவிப்பதிலும் கணக்கற்ற ஆசாரியர்கள் தமது வாழ்நாளைக் கழித்திருக்கின்றனர். இப்பொழுதும் இதுதான் வேதாத்தியயனம் செய்யுஞ் சரியானமுறையாகும்.

தாம் கற்றுக்கொடுத்த பாடங்களில் பேதமேற்படாம லிருப்பதற்கென்று நம்மனோர் பதபாட மென்பதாக, ஒரு வழியும் கண்டுபிடித்தனர். இதில் ஒவ்வொரு வார்த்தையையும் தனியாகவும் மாறுதலுக்கிடங் கொடுக்காமலும் ஸ்தாபித்திருக்கின்றனர். ஆகவே, கிரம பாடத்தில் ரிக்வேத சுலோகங்களை ஒழுங்காகச் சொல்லியும் பத பாடத்தில் அதிலுள்ள வார்த்தைகள் சிதறாமல் ஸ்தாபித்தும் இன்னும் ஜடை என்னும் முறையால் அவைகள் பின்னும் வழுவாமலிருக்கவும் ஏற்பாடாயிற்று.

இம்மாதிரி வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட்டு வந்துள்ள ரிக்வேதபாஷை பின்னர் ஏற்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத பாஷையைவிட மிகப் பழமையானதால் அதை அறிந்து அதிலுள்ள

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக் கமிழ்தி னியன்றன தோள்.

விஷயங்களை முற்றிலும் தெரிந்துகொள்வதற்கு நம்மவரால் முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு 2500 வருஷங்களுக்குமுன்னர் யாஸ்கர் என்னும் பெரியோன் தமது நிருக்தம் என்னும் நிகண்டில் வேதத்திலுள்ள கடின பதங்களுக்கு அர்த்த விவரணம் செய்திருக்கிறார். ஆயினும் அதில் அனேக பதங்களுக்கு அவரால் அர்த்தம் எழுதமுடியவில்லை. அப்படியே சுமார் 600 வருஷங்களுக்கு முன்னிருந்த ஸாயனரும் "குருடன் கண்ணுக்கு ஸ்தம்பம் தெரியாவிட்டால்அது ஸ்தம்பத்தின் தவறாகுமா?" வென்று தமது வேத வியாக்யானத்தில் கேட்டிருக்கிறார். தற்காலத்தில் இவ்விஷயத்தில் முயற்சி எடுத்துக்கொண்ட பாச்சாத்திய வித்துவான்களோ அநேக வார்த்தைகளின் அர்த்தங்களைத் தம்முடைய சாமர்த்தியத்தால் தாம் கண்டுபிடித்து விட்டதாகப் பெருமை பேசுகின்றனர். நாம் ஏற்கெனவே சொன்னபடி இப்பாச்சாத்தியருடைய முறைகளையும் நமது பெரியோரால் சொல்லப்பட்டு வரும் அர்த்தங்களையும் சீர்தூக்கி எது சரியான அர்த்தம் எனக் கண்டுபிடிக்கக்கூடிய நமது தேசத்து வித்துவான்கள் விசேஷமாக முன்வரும் வரையில் நாம் அவர்கள் சொல்லுவதை முழுவதும் நம்பலாகாது. இதுவரையில் இவ்விரு வழிகளையும் பரிசீலனை செய்தவர்கள் மேற்கு தேசத்தாருடைய முறையைக் கண்டித்து வந்திருக்கின்றனர். அவர்களில் அவினாச சந்திரதாஸ் என்னும் கல்கத்தா வித்யாபீடத்து போதகாசிரியர் ஒருவர். அவர் எழுதியுள்ள ரிக்வேத விஷயமான இரண்டு புஸ்தகங்களில் இப்பாச்சாத்தியருடைய அபிப்பிராயங்களை அவர் மிகவும் கண்டிக்கின்றனர்.

ரிக்வேதம் பத்து மண்டலங்களுடையதென மேலே சொல்லியிருக்கிறது. இவற்றுள் முதல் மண்டலம் பல தேவதைகளை வழிபடும் மந்த்ரங்களை யுடையது. அவைகளில் ஒவ்வொரு ரிஷியின் பெயரால் ஏற்பட்டுள்ள மந்த்ரங்கள் எல்லாம் ஒன்றாயிருக்கின்றன. இரண்டு முதல் எட்டுவரையிலுமுள்ள மண்டலங்களில் ஒவ்வொன்றுக்கும் ரிஷி ஒருவரே. ஒன்பதாவது மண்டலத்திலுள்ள மந்த்ரங்களுக்கெல்லாம் ஸோமன் தேவதை. பத்தாவது மண்டலத்தில் பலவித மந்த்ரங்கள் இருக்கின்றன. பெயர்பெற்ற மந்த்ரமான புருஷஸூக்தம் இம்மண்டலத்தில்தான் இருக்கின்றது.

ரிக்வேதத்தில் வழிபடப்பெற்ற தேவதைகள் முப்பத்துமூன்றும். அவர்களில் இந்திரன் விசேஷமாக ஸ்தோத்திரம் செய்யப்படுகிறான். இந்திரன் தேவதையாயுள்ள மந்த்ரங்கள் 250 ஆகும். சுமார் 200 மந்த்ரங்களுக்கு அக்கினி தேவதை; 100 மந்த்ரங்கள் ஸோமனைப் பற்றியுள்ளன. மழைக்கு அதிதேவதையான பர்ஜன்யனும், பித்ருலோக அதிபதியான யமனும் மும்மூன்று மந்த்ரங்களுக்கு தேவதைகளா யிருக்கிறார்கள். வேறு சிலர் இன்னும் குறைவாகவே மந்த்ர தேவதைகளாக விருக்கிறார்கள். இத்தேவதைகளில் புராதனமானவன் த்யாயு: த்யாயுஸ்ஸையும் ப்ரிதிவியையும் பிதாவாகவும் மாதாவாகவும் வைத்து, ஆறு மந்த்ரங்களில் ஸ்தோத்ரம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த த்யாயுஸ்ஸைத்தான் வெகுதூரம் மேற்கே சென்ற ஆரிய வர்க்கத்தினரான கிரேக்கர், ஸீயஸ் எனவும், லாடினர் ஜூபிதர் எனவும் டியூடானியர் தியூவ் எனவும் வழிப்பட்டுவந்தனர் என ஏற்படுகிறது.

ரிக்வேத தேவதைகளில் இந்திரனே பெரியோன். மேகங்களுக்கு எஜமானனாய்த் தனது வஜ்ராயுதத்தால் இடிகளை உண்டாக்கிக்கொண்டு வ்ருத்ரனுடன் சண்டைசெய்து அவனை ஜயித்து உலர்ந்துபோன பூமிக்கு ஜல சம்ருத்தி உண்டு பண்ணுகிறான். மருத்கணங்கள் அவனுக்கு ஒத்தாசை. இந்திரனுடன் சம்பந்தப்பட்ட முக்கிய தேவதை வருணனும். அவன் ருதுக்களையும் தர்மங்களையும் பாதுகாப்பவன். மித்திரனும், சூரியனும், ஸவிதாவும், புஷாவும், விஷ்ணுவும் சூரிய மண்டலத்தைச் சார்ந்த தேவதைகள். இந்திரனைத் தவிர பர்ஜன்யன், வாயு, ருத்திரன் முதலியவர்கள் ஆகாச மண்டல தேவதைகளாம். ப்ருதிவியைச் சார்ந்த தேவதைகளுள் அக்கினியும், ஸோமனும் முக்கியமானவர்கள். அக்கினிதான் தேவதைகள் முகம் ஆகிறான். சூர்ய மண்டலத்தில் சூரியனாகவும், ஆகாச மண்டலத்தில் மின்னலாகவும் பூமியில் நெருப்பாகவும் அவன் இருப்பதாகக் குறித்துக்காட்டும் மந்த்ரங்கள் உள. யாகங்களுக்கு அவசியமான ஸோமலதை (கொடி) க்கு அதிதேவதையான ஸோமன் முக்கிய ரிக்வேத தேவதை. அந்தக் கொடியைக் கொண்டுவந்து நறுக்கி அதன் ரஸத்தை மரத் தாம்பாளங்களில் பிழிந்து, தேவதைகளுக்கு அதை ஒரு முக்கியமான ஹவிஸ்ஸாகக் கொடுப்

பது வழக்கம். அக்காலத்தில் ஸோமனை தேவதையாகவுடைய மந்த்ரங்கள் உச்சரிக்கப்படும்.

மற்றுமுள்ள ரிக்வேத தேவதைகள் ச்ரத்தா (நம்பிக்கை), மன்யு (கோபம்) முதலியன. ப்ரஜாபதி என்னும் தேவதையே பின்னர் ப்ரம்மாவென்ற பெயருடையவரானர். உஷஸ் சூரியோதய காலத்துக்குமுன் உள்ள வேளையின் அதிஷ்டான தேவதையாம். இவள் ஸ்திரீ ரூபம். இத் தேவதையைப் பற்றிய ரிக்வேத மந்த்ரங்கள் மிக அழகியன. அப்படி இருபது மந்த்ரங்கள் உள்ளன. ஸரஸ்வதி அப்பெயர் பெற்ற புண்ய நதிக்கும், வாக்குக்கும் தேவதையாம். இந்திரனேடு சென்று வ்ருத்ர அஸுரனை எதிர்க்கும் மருத்துக்கள் அறுபது பெயர். தமது தாயாகிய அதிதியுடனும் வருணனுடனும் எப்பொழுதும் இருக்கும் ஆதித்யர்கள் பன்னிருவராம்.

இவர்கள்தவிர அப்ஸரஸ்களும் கந்தர்வர்களும், மனுஷ்யர்களில் மனுவும் ரிக்வேத மந்த்ரங்கள் சிலவற்றில் சொல்லப்பட்டிருக்கின்றனர். உர்வசிக்கும் புரூரவஸ் என்னும் நரனுக்கும் நடந்த சம்பாஷணை ஒரு மந்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவல்லவா பின்னர் காளிதாஸ மகாகவியை விக்ரமோர்வசீயம் என்னும் அழகிய நாடகத்தை எழுதச் செய்தது. மனு உலகத்தில் ஜீவராசிகளை உற்பத்தி செய்து தந்தனர்.

தேவதைகளைப்பற்றிச் சொல்லாத ரிக்வேத மந்த்ரங்கள் சிலவே. இவை கல்யாணம், நன்னடத்தை, சாவு, ஆத்மா யமலோகம் போவது முதலியவற்றைப்பற்றிச் சொல்லுகின்றன. சில லோக உற்பத்தியைப் பற்றிச் சொல்வன. அவற்றுள் புருஸூக்தம் ஒன்று. புருஷனிடமிருந்து உலகமும் அதிலுள்ளவைகளும் உற்பத்தியாயினவென்பது அதன் படிப்பினையாம்.

ரிக்வேத ரிஷிகள் இருந்தவிடம் தற்காலத்தில் ஆப்கானிஸ்தானத்தின் தென்கிழக்குப் பாகமும், வடமேற்கு எல்லை மாகாணமும் பஞ்சாப் நாடுமாகும். இவ்வாரியர் வெளிப்பிரதேசங்களிலிருந்து வந்ததாக வைத்துக்கொண்டால் ஆப்கானிஸ்தானத்துக்கு வடமேற்கிலுள்ள ஹிந்துக்குஷ் கணவாய் மூலமாகவே அவர்கள் நமது தேசத்துக்கு வந்திருக்கவேண்டும். அப்படி வந்தவர்கள் தென்கிழக்கு முகமாய் அப்பக்கங்களிலுள்ள இடங்களில் பரவினர். முதலில் மேற்கிலுள்ள பிரதேசங்களில் பரவி, பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் எங்கும் குடியேறவே ரிக்வேத காலங்களில் அவர்கள் யமுனை கங்கை வரையில் வந்துவிட்டனர். ரிக்வேத மந்த்ரங்களில் சொல்லியிருக்கும் நதிகளின் பெயர்கள் 25-க்கு மேலிருக்கின்றன. அவை ஸிந்து நதியும், அதன் மேற்கிலும் கிழக்கிலுமுள்ள உபநதிகளுமாம். கங்கையும், யமுனையும் அக்காலத்திய ரிஷிகளுக்குத் தெரிந்தவையே.

இவ்வாரியர் வெள்ளை நிறமுடையவர்கள். அக்காலத்தில் இந்த பூமியிலெல்லாம் வசித்து வந்த பழைய ஜனங்களைத் துரத்தி யடித்துத்தான் அங்கெல்லாம் தாம் வசிக்கலானர்கள். அப்பழைய ஜாதியார் கரிய நிறமுள்ள தஸ்யூக்கள். அவர்களைத் தமக்கு வேலை செய்பவர்களாகவும் செய்துகொண்டனர்.

இம்மாதிரி வந்த ஆரியர் பஞ்ச மகா ஜனங்களாம். அவர்கள் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். ஒவ்வொரு பிரிவினருக்கும் ராஜா ஒருவன் உண்டு. சிலவிடங்களில் அவ்வரசன் பரம்பரையை யொட்டி வந்தவன். சிலவிடங்களில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுவது முண்டு; அந்தந்தப் பிரிவிலுள்ள பெரியோருடைய புத்திமதியை அநுசரித்து ராஜ்யாதிகாரம் நடத்தி வந்தான். ஜனங்கள் ஆங்காங்கு கிராமங்களில் வசித்துக்கொண்டு பசுக்களைக் காப்பாற்றியும் பல தானியங்களைப் பயிர் செய்தும் வந்தனர்.

அக்காலத்திய அரசர்கள் பழைய ஜனங்களான தஸ்யூக்களோடும், சிலசமயம் வேறு ஆரியரோடும் யுத்தம் செய்வதுண்டு. அப்பொழுது அவர்கள் ஆயுதங்கள், முக்கியமாய் வில்லும் அம்புமாம். கத்திகளும், ஈட்டிகளும் யுத்தக் கோடரிகளும் உபயோகிக்கப் படுவதுண்டு. கிராமம் கிராமமாகப் போர் வீரர்களை அவர்கள் சைனியத்தில் சேர்ப்பது வழக்கம். (இது இப்பொழுதும் ஆப்கனிஸ்தானத்திலும், ஜர்மனியிலும் நடந்துவருகிறது.). அந்தஸ்து படைத்த பெரியோர் ரதத்திலேறி யுத்தத்துக்குப் போவார்கள். அவர்களுடன் ஒவ்வொரு ரதத்திலும் ஒரு ஸாரதிகூட வந்து இடது பாகத்தில் நின்று குதிரைகளை நடத்துவான். சாதாரண ஜனங்கள் காலாள் படையில் சேருவார்கள்.

———

தேவாரமும், அதன் சிறப்பும்.

DEVARAM—ITS GREATNESS

[திருவாளர் மா. துரைசாமி முதலியாரவர்கள்.]

"சொற் கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் [சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரரான் ஐந்தெழுத்தெங் கே."

தேவாரம் என்னும் சொற்றொடர் தே ஆரம் எனப் பிரிக்கப்படும். அது தெய்வத் தன்மை பொருந்திய பா மாலை அல்லது தெய்வத்தின் மீது பாடிய பா மாலை என்னும் பொருளைத் தரும். தெய்வத்தன்மை பொருந்திய அல்லது தெய்வத்தின் மீது பாடிய எவருடைய பாடலையும் தேவார மென்று சொல்லலாமாயினும் அச்சொல் மூவர் பாடல்களையே உணர்த்தி நிற்கின்றது மூவரென்பார் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இத் தேவாரத்தைப் பற்றிய வரலாறு ஒன்று பின்வருமாறு சொல்லப்படுகிறது: "திருஞானசம்பந்தர் 10,000 திருப்பதிகங்களும், திருநாவுக்கரசர் 49,000 திருப்பதிகங்களும், சுந்தரமூர்த்தி 37,000 திருப்பதிகங்களும் பாடினார்கள். இவை யாவும் அபய குல சேகர சோழவேந்தன் காலத்திலே தமிழ்நாட்டின்கண் மறைந்தன. அக்காலத்திருந்த பெரியோர் ஆங்காங்கு ஒவ்வொரு பதிகங்களை மாத்திரமே ஓதிக்கொண் டிருந்தார்கள். அரசர் பெருமான் அப்பதிகங்களின் அருமையையும், அவைகளின் தெய்வத் தன்மையையும் நோக்கி மூவருடைய தேவாரத் திருமுறைகள் முழுவதையும் பெறுவதற்குப் பேராவல் கொண்டிருந்தான். ஆனால் அரசன் அவற்றை எங்கு தேடியும் காணக்கூடவில்லை. அப்போது திருநாரையூரிலே ஆதிசைவ வேதியர் மரபிலே அவதரித்தருளிய நம்பியாண்டார்நம்பியென்பார் அவ்வூரில் கோயில் கொண்டுள்ள பொல்லாப் பிள்ளையார் திருவருளால் வேத முதலிய சாத்திரங்க ளெல்லாவற்றையும் ஓதாமலே உணர்ந்திருந்தார். நம்பியாண்டார்நம்பியின் வரலாற்றைக் கேட்டறிந்த அபய குல சேகர சோழன், உடனே, அவரிடஞ் சென்று வணங்கி, 'சுவாமி! தேவாரங்களையும் அவற்றையருளிய மூவருடைய வரலாறுகளையும் உலகில் விளங்கச் செய்தருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான். நம்பியார் அரசனுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டுத் தம்முடைய இஷ்டதெய்வமாகிய விநாயகப் பெருமானிடம் விண்ணப்பித்தார். பெருமான் அத்தேவாரத் திருமுறைகள் சிதம்பராலயத்தில் ஓரறையில் உள்ளன வென்றருளிச் செய்து, அவற்றைப் பாடிய மூவர் சரிதங்களையும் திருவாய் மலர்ந்தருளினர். உடனே நம்பியாண்டார்நம்பி விநாயகப் பெருமான் விளம்பியவற்றை அரசர் பெருமானுக்கு அறிவித்தார். அரசன் நம்பியாண்டார் நம்பியோடு சிதம்பரஞ் சென்று நடராஜப் பெருமானைத் தரிசித்து, நம்பியார் காட்டியருளிய அறையைத் திறந்து பார்த்தான். அங்கே தேவாரத் திருமுறைகளைப் புற்று மூடிக்கொண் டிருந்தது. அதுகண்ட அரசன் அளவிலாக் கவலையில் ஆழ்ந்து, அப்புற்றினைத் தள்ளிப் பார்த்த போது பல பதிகங்கள் அழிந்தும் சில பதிகங்கள் நிலைபெற்றுமிருந்தன. அரசன் சில பதிகங்களேனும் இருக்கக் கண்டமையால் அக மிகமகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி நம்பியாண்டார் நம்பியைத் தொழுது தேவாரத் திருப்பதிகங்களையும் திருவாசகம் திருமந்திரம் முதலிய திருவருட் பாடல்களையும் திருமுறைகளாக வகுத்தருள வேண்டுமென்று வேண்டினன். நம்பியாரும் அவ்வாறே செய்தருளினர். அவைகளே திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் முன்னூற்றெண்பத்து நான்கும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் முன்னூற்றுப் பதினொன்றும், சுந்தரமூர்த்தி திருப்பதிகங்கள் நூறுமாம். நம்பியாண்டார் நம்பி வகுத்தருளிய திருமுறைகளுள் சம்பந்தர் பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும், நாவுக்கரசர் பதிகங்கள் நான்கு ஐந்து ஆறுவது திருமுறைகளாகவும், சுந்தரர் பதிகங்கள் ஏழாவது திருமுறையாகவும் உள்ளன. இந்த ஏழு திருமுறைகளே தேவாரமென்றும், அடங்கல் முறையென்றும் வழங்கப்படுகிறது. தேவாரப்பாக்கள் பண்ணோடு பாடிய சந்தப்பாக்களாகலின், திருஞானசம்பந்தர் பாடிய காலத்திலே அவரோடிருந்து யாழ் வாசித்துக் கொண்டிருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பெண்மகளொருத்தியைக் கொண்டு சோழவேந்தன் பண் வகுத்தருளினன்.

முன்னே, சிவாலய முனிவரென்பார் தேவார முழுவதையும் நாள்தோறும் பாராயணஞ் செய்ய

எண்ணினர். ஆனல் அவர் அவ்வாறு செய்யக் கூடாமல் இடர்ப்பட்டு அகத்திய முனிவரைச் சரண் புகுந்து அக்குறையை நீக்கியருளுமாறு வேண்டினர். அகத்தியனர் தேவாரப்பதிகங்களுள் இருபத்தைந்தினைத் திரட்டிக் கொடுத்து அவற்றைப் பாராயணஞ் செய்வோர் அடங்கல் முறை முழுவதையும் பாராயணஞ் செய்தாரடையும் பயனையே அடைவரென்று அருளிச் செய்தார். அத் திரட்டே அகத்தியத் திரட்டென்று இன்றும் வழங்குகிறது.

இனி, இத் தேவாரத்தின் சிறப்புச் சொல்லால் அளவிடற்பால தன்று. ஆயினும் இயன்றவாறு கூறுவாம்.

1. தேவார ஆசிரியர்களாய சம்பந்தர் முதலியோருடைய பெருமையே அத்தேவாரத்தின் சிறப்பிற்குச் சான்று பகரும். சமயாசாரியர்கள் இந் நிலவுலகத்திற் பிறக்கினும் அவர்கள் முற்பிறப்புக்களிலே செய்துள்ள தவத்தைக் கருதி, சிவபெருமான் அவர்கட்கு வேறொரு மானுடரை அதிட்டித்து நின்று ஞானோபதேசத்தை நல்காமல், சம்பந்தருக்குச் சீகாழி அம்மையப்பராயும், அப்பருக்குத் திருவதிகை வீரட்டான மூர்த்தியாயும், சுந்தரருக்குத் திருவருட்டுறை அந்தணராயும் தாமே முன்னின்று ஞான தீக்கையினைச் செய்தருளினர். பின்னர் அவர்கள் சிவபெருமானுடைய திருவருளைப்பெற்று நோய்தீர்த்தல், இறந்தாரை எழுப்பல் முதலிய பல அற்புதங்களைச் செய்தருளி இறைவனுடைய திருவடி நீழலை எய்தினர்கள்.

2. பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியபோது குடிலையினின்றும் முதலில் நாத வடிவாயும், பிறகு விந்து வடிவாயும் அதன்பின் அக்ஷரவடிவாயும் வேதாகமங்கள் தோன்றின. அதுபோலவே பாசமனைத்தினும் நீங்கி விளங்கிய திருஞானசம்பந்தர் முதலியோருடைய தூய்மையான அறிவின் மேம்பட்டு விளங்கிய சிவசத்தி அவ்வறிவைப் பிரேரிக்கும்போது அங்கிருந்து நாதவடிவாயும், விந்துவடிவாயும், அதன்பின் அக்ஷரவடிவாயும் தோன்றிய கடவுள் மொழிகளே தேவாரமாகலின் அது தமிழ்வேதமென்றும், திருமுறை யென்றும், திருவருட்பா வென்றும் வழங்கப்படுகிறது. தேவாரம் சிவ பெருமானுடைய திருவருளாலேயே பாடப்பட்ட தென்பதைத் திருஞானசம்பந்த சுவாமிகளே,

"எனதுரை தனதுரையாக நீறணிந்து ஏறுகந்தேறிய நிமலன்" என்று கூறினர்.

திருநாவுக்கரசர்,

"பன்னிய நூற் றமிழ்மாலை பாடுவித்தென் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை" என்று கூறினர்.

இதனுற்றான் சமயாசாரியர் அருளிய பாக்கள் இறைவன் திருவருள்வழியே எழுந்ததென்றும், மற்றைப்புலவர் பாக்கள் அவர் தம் கலைப்புலமையாற் பாடியவையென்றும் சொல்லப்படுகிறது. திருவருட் பாடல்களை இயற்கை மாணிக்கத்திற்கும் மற்றைப் பாடல்களை செயற்கைச் செங்கல்லிற்கும் ஒப்பிடுதல் வேண்டும். தமிழ் மூதாட்டியாராய ஔவையார் வடமொழி வேதமும் தமிழ்வேதமாகிய தேவாரமும் மொழியால் வேறுபட்டாலும் பொருளால் ஒன்றுபட்டவை என்பதைத் தெரிவிப்பாராய்,

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழும் முனிமொழியுங்- கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்று கூறினர்.

இன்னும் நம்பியாண்டார் நம்பி முதலிய சைவத்திறத்தரும் சங்காசாரியர் முதலிய வைதிகத் திறத்தரும் திருஞானசம்பந்த சுவாமிகளைத் தத்தம் பிரபந்தங்களில் வைத்துப் புகழ்ந்தார்கள். ஆகலின் அவர் 'விசேட வைதிக சைவ ஜகத்குரு முதல்வ' ரென்றும் அழைக்கப் படுகிறார்.

3. தேவாரத் திருமுறைகளில் வைத்துப் படிக்கப்பட்ட தெய்வம் அயன் அரி அரன் என்னும் மூவரையும் தோற்றுவித்து நடத்தும் முழுமுதற் கடவுளாகிய பரமசிவனும். இதனை,

"தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கு மற்றை, மூவர் கோனாய் நின்ற முதல்வன்"

என்பது போன்ற பாடல்கள் இனிது விளக்கும்.

4. தேவனை நோக்கிச் சொல்லப்படும் புகழ் மாலைகளாகவும், பிரார்த்தனைகளாகவு முள்ள வடமொழி வேதத்தின் பூர்வ பாகத்திற்கு இவ் வேழு திருமுறைகளையும் பெரியோர் ஒப்பிடுகின்றார்கள். அவ்வடமொழி வேதப் பாடல்கள் பூஜா காலங்களிலும் பிற சமயங்களிலும் உபயோகப்படுத்தப்படுவது போலவே இத்தேவாரப் பாடல்களும் பயன்படுத்தப் படுகின்றன.

5. திருமுறைகள் வேதம் ஆகமம் என்னும்

முதல் நூலிரண்டனையும் மூலமாகக் கொண்டு அவற்றின் சாரமாய் அவதரித்தன. அவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பார்க்கு இதன் உண்மை இனிது விளங்கும்.

6. தமிழ் வேதம் இறைவனது அருளற்புதத்தையும் அவ்வருட் பிரபாவத்தையும் செவ்வையாக விளக்கிக் காட்டுகின்றது.

7. தேவாரம் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே இருத்தலின், அது இறைவனுடைய திருச்செவி திருவுள்ளங்களை இனிது மகிழ்விக்குமாறு இனிய ஓசையும் உருக்கமுமுறப்பாடுதற்கும் பொருளறிதற்கும் உதவியாகிறது.

8. கடவுளை நேரேகண்டு கூறும் உண்மையினை உட்கொண்டு விளங்குகின்றமையின் ஆன்மலாப அவாவுடையார்க்குத் திருமுறைகள் ஒரு பெருவிருந்தாகும்.

9. தேவாரத்தில் வருகின்ற வரலாறுகளால், அது 'நீ இழிகுலத்தான் யாம் உயர்குலத்தோ' மென்னும் கருவப்பிணியை ஒட்டி, கருணை உள்ளத்தை ஈட்டி, கறையில் கதியையுங் கொடுக்க வல்லது. இவ்வுண்மையினை மறையவனாகிய சுந்தரப் பெருமான் அருளிய திருத்தொண்டத் தொகை நிரூபிக்கும்.

10. தேவாரம் தெய்வ நிச்சயத்தினையும், உண்மை வழிபாட்டினையும், நமக்கும் அத் தெய்வத்திற்குமுள்ள சம்பந்தத்தினையும், அத் தெய்வத்தால் நாம் அடையக்கூடிய பயனையும் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

10. மனித வாழ்க்கையைத் தூய்மைப் படுத்தத் தேவாரம் ஒரு பெருந் துணையாக உள்ளது.

11. சமயாசாரியர்களுடைய தேவாராதனைப் பிறமதத்தினர் பழிக்கும் விக்கிரக ஆராதனையன்றென்பதனைத் தேவாரம் தெரிவிக்கிறது.

12. நல்ல தமிழ்க் கல்வியும், நல்லறிவும், நல்லூழு மில்லாது ஒதுங்கி நின்று ஆங்கில மட்டுமே ஒரு சிறிது கற்றுக் களிப்பாருட் சிலர் 'சிவன் எங்கிருக்கின்றான்! விஷ்ணு எங்கிருக்கின்றான்! பிரமன் முதலியோர் எங்கிருக்கின்றார்கள்! அவர்களில்லை; பிரமமொன்று தானே நினைப்பார் நினைப்பின்படி அச்சிவனாகவும் விட்டுணுவாகவும் பிரமனாகவும் பிறராகவும் தோற்றலாம் மறையலாம்' என்று கூறித்திரிவர். அவர்களுடைய மயக்க வுணர்வை,

"இந்திரன்மால்பிரமன் எழிலார்மிகு தேவரெலாம்
வந்தெதிர்கொள்ளவென்னை மத்தயானையருள்புரிந்து
மந்திரமா முனிவரிவனா ரென்ன வெம்பெருமான்
நந்தமரூரனென்று ஞெடித்தான் மலையுத்தமனே"

என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய உண்மைத் திருவாக்கு ஒழிப்பதோடு, இறைவனுக்கு உருவுண்டு, அவனது சாமீபசாலோகபதவிகளும் சுவர்க்கங்களும் விஷ்ணு முதலிய தேவர்களும் உண்டு என்று உறுதிப்படுத்துகிறது.

13. வேதாகமங்களின் கருமப் பகுதிகள் பல தேவவழிபாடு விதிக்கின்றன; வேதாகம முடிவோ ஒரு தேவ வழிபாடாய சிவாராதனையை விதிக்கின்றது; அக்கருமப்பகுதிகளிற் கூறுவன வெளிப்படையாகவும் வேதாகமாந்த முடிவு மறைந்து மிருத்தலின், மனிதர் பல தேவ வழிபாட்டினை மேற்கொண்டு மயங்காவண்ணம் தமிழ் வேதம் ஒருமூர்த்தி வழிபாட்டினையே உறுதியாகப் போதிக்கின்றது. அவ்வாக்கியங்களுட் சில பின்வருமாறு:

வடமொழிமறை முடிவு-"சமுசார துக்க நாச முத்திப் பிராப்தியின் பொருட்டு விஷ்ணு முதலிய சருவ தேவர்களையும் விட்டு எப்போதும் தியேயனாகவுள்ள சிவனையே தியானித்தல் வேண்டும்" (அதர்வவேத சரபோபநிஷத்)

தமிழ் மறை—"………சிற்றம்பலமேய
கருமானுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணுதுள்ளமே-சம்பந்தர்
"சென்று நாஞ்சிறு தெய்வஞ் சேர்வோமல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"
—அப்பர்.

"சிந்தா யெந்தைபிரான் றிருமேற்றளி யுறையும்
எந்தா யுன்னை யல்லாலினி யேத்த மாட்டேனே"
—சுந்தரர்.

14. சமயாசாரிய சுவாமிகள் தங்கள் பதிகங்களுக்கிறுதியிற் பயன்கூறியருளிய உறுதிப்பாடு ஒன்றே அவற்றின் சிறப்பினை விளக்குகிறது:

"மயிலார் சோலை சூழ்ந்த காழிமல்கு சம்பந்தன்
பயில்வார்க் கினிய பாடல் வல்லார் பாவ நாசமே"
—சம்பந்தர்.

"………வன்றொண்டனற்றமிழ்
பாதமோத வல்லார் பரனோடுங் கூடுவரே"
—சுந்தரர்.

சிறுத்தொண்டர்

சீ:—அப்பா வாருங்கள் போகலாம்.
சிறு:—உத்தரவளிக்க வேண்டும் நமஸ்காரம்.
உபா:—ஆஹா நமஸ்காரம். போய் வாருங்கள்.
சிறு:—குழந்தைகாள்! நான் போய் வருகிறேன்.
பையன்கள்:—சுவாமி போய்வாருங்கள்.

இரா:— (அம்பிகா உன் மகன் குகன் மெட்டு)

பல்லவி.

எம்பிரான் எங்கள் சங்கரன்
தம்பிரான் சந்த்ர சேகரன்

[சரணங்கள்]

1. வம்பிலேதான்பிறந்து
வாதைப்படவேகிடந்து
துன்பமே தானிறைந்து
சோரு மென்னை யாளுமன்னன்—எம்

2. கங்கையவள் தான்சடையில்
கன்னியுமையோ விடத்தில்
தங்கிவிளையாடுகையில்
தானுஞ் சேர்ந்து ஞானம் பேசும்—எம்

3. ஆண்டிப் பண்டாரம் பிள்ளை
அம்பிகையாள் மாப்பிள்ளை
பாண்டித்துரையாய் வந்த
பரமகருணைத் தரும ரமண—னெம்

4. ரெண்டுங் கெட்ட தேகக்காரன்
ரெண்டு பிள்ளைப் பெண்டுக் காரன்
ஒண்டு மொத்தை மாட்டுக்காரன்
உத்தம நித்திய சத்திய சம்பன—னெம்

5. சந்தப் பகருமையா
சாமி புகழ்ந்துரையாய்
சிந்தைக்குச் சர்க்கரையாய்
சேருஞ் சுகுண மார தகன—னெம்

[இருவரும் போதல்.]

அங்கம். III

காட்சி—4

இடம்:—சிறுத்தொண்டர் மனையில் ஓர் அறை.
(திருவெண்காட்டு நங்கையும் சீராளனும்)

சீரா:—அம்மா, என் மாமன்மார் என் இவ்வளவு துரிதமாய் வெளிச்சென்றார்?

திரு:—குழந்தாய், அவர்கள் இங்கு வந்து ஓர் அவசர காரியத்தை நாடிப்போயிருக்கின்றனர். சீக்கிரம் வந்துவிடுவார்கள்.

சீரா:—அம்மா நான்ஸ்நானம் செய்ததும் சாப்பிட்டே னல்லவா? எனக்குத் தூக்கம் வருகின்றது.

திரு:—உனக்கு அலுப்பாயிருக்குமென்று நானும் உன்னைத் தூங்கச் செய்யலாமென்றுதான் இருந்தேன். மகனே வந்து என் மடியில் படுத்துக் கொள்.

[சீராளன் படுத்துக்கொள்ளுதல்]
[ஆநந்தபைரவி-ஆதிதாளம்]
கண்ணிகள்.

சீரார் பசுங்கிளியே தெய்வத்திருமணியே
வாராய் நீ கண்ணுறங்க மதுரக் கனிரசமே. (1)
நீராட்டிப் பாலூட்டி நிலத்துமைக் காப்புமிட்டு
சீராட்டினேன் என்பாலா சீராளா கண்ணுறங்கு (2)
கட்டிலிலும் மெத்தையிலும், கால்மேலுந் தோள் [மேலும்
சட்டமாய்த் தூங்கிய நீ சட்டியிலே கிடப்பாயே (3)
மாமன்மார் பாட்டன்மார் மடியிலுறங்கா யினி
எமன் மடியில் தூங்க எங்கே படித்தாயப்பா (4)
அஞ்சு வயதில் உன்னை அதிதிக்களிக்க நாங்கள்
கொஞ்ச தவம் செய்தோமா கோதில்லா மாணிக்கமே
சின்னஞ் சிறுவயதில் சிவனர்க் குனையளிக்க
என்ன தவம் செய்தோமோ இன்பக் கற்கண்டே
தேனே! (6)

[சீராளன் தூங்குதல்]

என் செல்வமே! என் உயிருக்குயிரான ஒப்பிலா மணியே! நீ தூங்கி விட்டாயோ! அடே என் கண்ணே! கள்ளங் கபடில்லாமல் களங்கமற்றுத் தூங்குகின்றாயே! இன்னும் பால்மணம் அறாத பர்சைப் பாலகன் அன்றோ நீ. மகா கொடியவளாகிய நான் உன்னை அந்த எமனுக்கு இரையாகத் தரப்போகிற உண்மையை அறிவாயோ - அப்பா! என் மகனே! நீ மறுபடியும் எழுந்திருக்கலாம், மாமன்மாரைப் பார்க்கலாம்; பள்ளிக்குப் போகலாம் பாடத்தைப் படிக்கலாமென்று தூங்குகின்றாய்? ஐயோ! வஞ்ச மறியாத ரஞ்சித மயிலே! நீ ஒரே தூக்கமன்றோ தூங்குகின்றாய்! அந்த எண்ணங்களை விட்டு விடடா என் மாணிக்கமே. உனக்கினி தாயுமில்லை தந்தையுமில்லை மாமனுமில்லை மாமியுமில்லை. எமன்தான் உனக்கு இனி துணைவருவான். அவனோடு சென்று ஒழியாத இன்பப் பெருக்கோடுங் கைலாசஞ் சேர்வாய். கலக்கமற்று வாழ்வாய். துடிக்கத் துடிக்கக் குலையறுக்குங் கொலைபாதகர்களாகிய கன்னெஞ்சத் தாய்தந்தையர் நாங்கள் அங்கு இருக்க மாட்டோம். கவலையற்றிரு. கருணாநிதியாகிய அரவாபரணர் அன்னையிலும் அன்பாய் ஆதரிப்பார். தந்தையிலுந் தயவால் தண்ணருள் புரிவார். அடா, மகனே, சீராளா, ஐந்து வயதில் அருமையெல்லாம் படித்தாயே, அன்னை தந்தையரை விட்டு அரனர் திருவடியில் வாழவோ இவ்வளவு கற்றாய். பெற்ற மனம் பித்து என்னும் பெரியோர் வாக்கையும் நிந்தித்து பெருமான் அடியாரையேபெருமையாய் சிந்தித்தகொடும்பாதகி என்று? என்னிடம் பேசாமலே போய் விடுவாயோ. இளவயதில் இளஞ்சூரியனெனப் பெயரெடுத்து விட்டோம்.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண் பலர்காணும் பூவொக்கு மென்று.

இனி நமக்கென்ன விருக்கின்றது. எம்மையாளுங் கண்ணுதலேயடுத்துக் கைலேவாசஞ் செய்வோமென எங்களேயு மறந்து மகிழ்ந்து தூங்குகின்றாயோ!

[சிறுத்தொண்டர் கத்தியொடு வருதல்]

சிறு:—கண்மணி! குழந்தை சீராளன் தூங்கி விட்டானு?

திரு:—ஆம் தூங்கிவிட்டான்.

சிறு:—(சீராளன்மேல் கவிந்து) அடே! அப்பா! என் செல்வமே! எங்கள் குலவிளக்கே! என் கண்மணி! நீ தூங்குகின்றாயோ! இல்லே இந்த மகா பாவியைப் பார்க்கக் கூடாதெனக் கண் மூடிக் கொண்டாயோ! பாலகா! உன் பொன்னுன வாயால் ஒரு வார்த்தை பேசாயோ! ஹா! என் கட்டிக்கரும்பே! என் என்னிடம் பேசமாட்டேன் எனப் பிடிவாதம் செய்கிறாய்!

(தாயை விட்டு வந்த காட்டில்—மெட்டு)
(பியாகு—ரூபகம்)
(கண்ணிகள்)

ஈரமில்லாப் பாவியென்று
எண்ணி நொந்தாயோ கொடுங்
கோரமனங் கொண்டேனென்று
கோபங் கொண்டாயோ மனஸ்தாபங்
[கொண்டாயோ. (1)

கல்லா லுள்ளங்கொண்ட
கொடுங்காலன் என்பாயோ ஒரே
நல்லபிள்ளே தன்னேக் கொல்லும்
நாயேன் என்பாயோ
பெரும்பேயன் என்பாயோ .(2)

ஈசன்பாதம் சேரப்போறோம் என்று தூக்கமோ
[பெரு
மோசக்காரப் பாவிதந்தை என்று ஏக்கமோ
பழி வந்து தாக்குமோ

சின்னஞ் சிறுவயதில் செல்லமாய் வளர்த்துத் தன் விரதங் காக்கத் தனேயனேக் கொல்லும் மகா பாவியென மனதில் வருத்தமோடா. அப்பா! தந்தை வந்திருக்கிறேன். அன்போடு பேசி அக மகிழ்வு செய்யாயோ. இனிமேல் எப்பொழுது உன் கொஞ்சும் மொழியை கேட்கப் போகிறேன் "அப்பா" என்று அருமையாய் அழைப்பாயே. "அம்மா" என்று ஆநந்தந் தருவாயே. அந்த கரும்புங் கசக்கும் குழலுங் கசக்குங் குதலே மழலேக் கோதிலா அமிர்தத்தை என்றைக்குப் பருகப் போகிறோம். அணேகடந்த வெள்ளமாய்ப் பிரிந்து விடுவாயே. பாவம்! மகன் உண்மை தெரியாமல் அயர்ந்து தூங்குகிறுன். மாமன்மார் வருவார் மதுர மானபழந்தருவார் என்று மனமகிழ்ந்து தூங்குகிறுன் போலும். மத்தியானப் பள்ளிக்கும் போவோம். மனதின்படி பாடம் படிக்கலாம் என்று மகன் உறங்குகிறுனுக்கும். அடே என் கண்ணுக்கினிய கற்பகக் குன்றே. இந்தக் கவனம் உனக்கு வேண்டாமடா இனி. சிவநாயகனுக்குச் சொந்தமானுய் உன் பந்தம் விட்டது. ஹா!

திரு:—நாதா! தாங்கள் இப்படி மனதை இளகவிட்டிருந்தால் நம் காரிய முடிவதெப்படி. காலமோ நீடிக்கின்றது. வைரவர் அங்கு தங்கள் வரவை எதிர்பார்த்து பசியோடு காத்துக் கொண்டிருப்பார். கவலேப்படாதீர்கள். சீக்கிரத்தில் காரியத்தைப் பாருங்கள்.

சிறு:—கண்மணி! நான் கவலேப்படவில்லே. நமது கனகரத்தினத்தை - கட்டாணி - முத்தை விட்டுப் பிரியுமுன்பாக அவன் அருமையையும் பெருமையையும் சொல்லி மனதைத் தேற்றிக்கொண்டேன். பிரிய காதலி, ஒரு விஷயம். நாம் மனிதர்கள் தானே; நாம் எடுத்ததோ நரஜென்மம், நாம் நடத்துவதோ இல்லறம். பிறந்ததோ கொலேயறியாக் குற்றமற்ற குலத்தில். கடைப்பிடித்ததோ அன்ன தானம். இவற்றையெல்லாம் ஒருவன் தன் உள்ளாகவே வைத்துக்கொண்டு மனிதனுக் கியல்பாகவுள்ள சுபாவ மீறி நடந்துகொள்ள முடியுமோ. வாய்ச்சொல் வேறு. மனம் வேறு. அகத்தினழகு முகத்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்றாகத் தெரியுமே. இந்த உண்மை உன் முகத்தையும் என் முகத்தையும் பார்த்தவர்களுக்கல்லவோ நன்ருக விளங்கும். அப்படியிருந்தும் மகா தபஸ்வியாகிய வைரவர் இஷ்டத்திற்கு மாருக நாம் ஒரு சிறிதும் நடந்துகொள்ள வில்லே. அவருக்கு நம் புத்திரனேக் கறியாகப் படைப்பதில் நமக்கு லவலேசமேனும் கவலேயில்லே. மனப்பூர்த்தியாக ஆத்ம திருப்தியோடுதான் அருங்கறியை படைக்கப்போகின்றோம். பழகியறியாத காரியத்தைப் பக்குவமறியாது செய்வதால் நிகழும் மனேவிகாரத்திற்கு நாம் என்ன செய்வோம். நாம் கேவலம் மனிதர்கள். கடவுள் அல்ல. சரி, கண்மணி மகனே மடியில் வைத்துப் பிடித்துக்கொள்.

திரு:—நாதா! அப்படியே.

சிறு:—"மண்ணுகி விண்ணுகி மலேயுமாகி
வயிரமுமா மாணிக்கந் தானேயாகிக்
கண்ணுகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக்
கலேயாகிக் கலேஞானந் தானேயாகிப்
பெண்ணுகிப் பெண்ணுக் கோராணுமாகிப்
பிரளயத்திற் கப்பாலோர் அண்டமாகி
எண்ணுகி எண்ணுக்கோர் எழுத்துமாகி
எழுஞ்சுடரா யெம்மடிக ணின்றவாறே"

ஹா! மன்றில் நடம்புரியும் மாணிக்க மணியே! அஞ்சினேர்க்கு அரண்போலும் கெஞ்சினேர்க்குக் கிட்டுந் துணேயே! சகல அண்ட

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம் வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

கோடிகளையும் ஆக்கி அழித்துக் காத்து நிற்குங் கருணா நிதியே! தங்களது திருவடித் தாமரையை மனமொழி மெய்களால் வணங்கி, அனுதினமும் தினமுழுதும் சின்மயப் பொருளாகிய தங்களை எம்மனப் பொருளாய், மெய்ப்போத இன்ப வள்ள லாகிய தேவரீர்தான் தண்ணருள் புரியுந் தயாநிதி யென்று, பாவாலும் பண்ணாலும் நோவாமற் போற் றிப் புகழ்ந்து பாடித் துதித்துப் பணிந்துவரும் அடி யேங்களை ஒரு பொருளாகக் கருதித் தக்க ஒரு சோதனையைக் காட்டினீர். தேவர் முதல் யாவ ருங் காணாத கற்பகமே கல்லினும் புல்லினும் புழு வினும் கடையவராகிய நாங்களும் எம்மால் கூடிய வரையில் பஞ்ச புலனடங்க, எங்கள் மனமடங்க, பழுதில்லாமல் பச்சைப் பசும்பாலகனையும் கொன்று கறிபடைக்கத் துணிந்து விட்டோம். மூலாதாரமே எங்கட்கினி யாதாரம் நீரே. எத்தனை நாள் இருந்தா லும் எல்லாம் வல்ல எம்பிரானைக் கண்டு ஆநந்த மடையாத பிறவி வீண்பிறவியே. இந்தப் பிறவி யறும்பெருஞ் செல்வத்தைக் காணும் பெருந்துறை யைக் காணாது தவிக்கும் அடியேங்களைக் கரையேற் றல் எச்சமயமோ. நித்தியமாய் நிர்மலமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய் தூரமுமாய் சமீபமுமாய் நிற் கும் சற்குண மணியே! இம்மானிட தேகம் நிலை யில்லாதது, என்றைக்குக் காலன் வந்து கொண்டு போனாலும் போகலாம். அவன் கையில் அகப்படு வதற்குள் அநந்தங்கோடி சாதனங்களுள் நானா மோர் காரணமாய் நின்று என் புத்திரனுயிரைச் சத்திய சீலமாய்த் தங்களுக்கு அர்ப்பணஞ் செய் கிறேன்.

கண்மணி, எங்கே [கத்தியை எடுத்து அறுக்கப் போதல். சீராளன் நித்திரை தெளிந்து பயந் தெழுதல்]

சீராளன்:—அப்பா என்ன இது!

[சிறுத்தொண்டர் திடுக்கென செயலற்று நிற்றல்]

அம்மா,

[பஹாரியாலே—மெட்டு]

[ஹிந்துஸ்தான்—தோடி—ஆதிதாளம்]

(பல்லவி)

இத்தனைக் கோபம் ஏனோ என்மீதிலே

சரணம்.

சித்தநோகச் செய்த குற்றம் யாது சொல்லுவீர்
சேயனென்னை நீரிவ்வண்ணமேனோ கொல்லுவீர்
தயவாய் நவில்வீர்

திரு:—இன்று நம்மடத்துக் கோரடியவர் வந்தார், அவர்
எப்படியேனும் பிள்ளைக்கறி வேண்டு மென்றார்
இல்லா தூண ருந்தார்

(பல்லவி)

கன்றியபாலா கேளாய் காரணத்தை

சீ:— (சரணம்)

என்னையே யறுத்துக்கறி செய்யச் சொன்னாரோ
என்னையல்லா தின்னொருவன்வேண்டாமென்றாரோ

திரு:— இல்லாமல் உண்ணாரோ

அன்னவர் சொன்ன லக்ஷணப்படி யாண் பிள்ளை
அவனியிலுன்னையன்றி வேறில்லவே யில்லை
தேடநேர மில்லை

அடே கண்மணி, இன்று நமது அன்னதான மடத்திற்கு அடியார்கள் ஒருவரேனும் காலையி லிருந்து நெடுநேரம் வாராமலேயிருந்து கடைசியாக ஒரு வைரவர் சாக்ஷாத் பரமசிவனே உருவெடுத்து வந்தாப்போல் வந்தார். அப்பெரியவர் தமக்கு அங்கஹீன மில்லாமல் ஐந்து வயதாய் நல்ல கல்வி மானாய், தாய்க்கோர் பிள்ளையாய் இருக்கும் ஓர் ஆண் பிள்ளையைக் கறிசமைத்துத் தாவேண்டுமென உன் தந்தையிடம் முன்னதாகவே வாக்குறுதி வாங் கிக்கொண்டு சொல்லியிருக்கிறார். என் கண்ணே! உன் தந்தையின் விரதம் யார் எதைக் கேட்டாலும் கறிசமைத்து அன்னமிடுவது என்பதை நீயே அறி வாய். அப்பா, அந்த வைரவ சந்யாசிக் குரைத்த வாக் குப் பொய்யாகக் கூடுமோ. அவர் விரும்பிய சுப லக்ஷணங்களோடு கூடிய ஆண்பிள்ளை உன்னைத் தவிற வேறு யார் இருக்கிறார்கள்? அப்படித்தான் இருந்தாலும் எங்கென்று தேடுவது? எத்தனை நாள் தேடுவது? யார் நமக்கு அப்பேர்ப்பட்ட புத்திர ரத்தினத்தைத் தந்துதவப் போகிறார்கள்.? இவற்றை யெல்லாம் கவனித்தே, என் கண்ணே, உன்னை இவ் வாறு செய்ய நினைத்தோம்.

சீ:—ஹா! என்ன பாக்யம் செய்தேன்! அம்மா! அப்பா, விசனப்படாதீர்கள். உங்களிருவர்க்கும் நான் மகனாய்ப் பிறந்த புண்ணிய விசேஷத்தை என்னென்று சொல்வேன். அரிதரிது மானிட ராய்ப் பிறத்தல் அரிது என்பார்கள். அதிலும் கூன் குருடு பேடு முதலிய அங்கஹீன மில்லாத பிள்ளையாய்ப் பிறத்தல் பின்னும் அரிதாம். அதி லும் கல்வியும் ஞானமும் படைத்தல் பலமடங்கு அரியதாம். இன்னும் அப்படி ஞானமும் கல்வியும் நயந்த காலையும் தானமும் தவமுந் தான் செயல் அரிதாம். இப்பேர்ப்பட்ட பிறவியே விசேஷமான பிறவியென்பார்கள். நானோ இதைக் காட்டிலும் மகா விசேஷமான பிறவியை எடுத் திருக்கிறேன். மனதை நிலைப்படுத்தி ஞானத்தைக் கைப்படுத்தி நித்தியமாகிய பரிசுத்த கர்த்தன் மேலேயே கருத்தைச் செலுத்தினால் உயர்கதி யடைவது சத்தியமென்று பெரியோர்கள் சொல் வார்கள். எனக்கோ அது வொன்றுந் தெரியாது. நான் முற்பிறப்பில் செய்த நல்வினை இப்பிறப் பில் தக்க சமயத்தில் மிக்க துணையாய் நின்று

காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு மாணிழை கண்ணொவ்வே மென்று.

என் கவலையை யொழித்துக் கதிமோக்ஷத்தைத் தந்தது.

நீரிற் குமிழி நிலையில்லாத இந்த தேகத்தை,

"எரி எனக்கென்னும் புழுவோ
எனக்கென்னும் இந்த மண்ணுஞ்
சரி எனக்கென்னும் பருந்தோ எனக்
கென்னும் தான் புசிக்க
நரி எனக்கென்னும் புன்னாய்
எனக்கென்னும்"

அப்பா! இப்பேர்ப்பட்ட எனது இப்புலையனும் விரும்பாத புன்புலால் யாக்கையை ஞானியும் தபஸ்வியுமாகிய மஹானுபாவர் ஒருவர் உண்ணப்போகின்றார். என்றால் நான் செய்த புண்ணியம்போல் இவ்வுலகில் வேறு யார் செய்யப் போகின்றார். உங்கள் மணிவயிற்றில் உற்பவித்த நற்பலனை இப்போதே அனுபவித்து அகங்களித்து இன்பக் கடலில் முழுகிவிட்டேன். பிறவிப் பெரும் பிணியை முளையிற் களைந்துவிட்டேன்.

இனி காலதாமதஞ் செய்யாமல் என்னைப் புனிதனுக்குவீர்கள். ஐயருக்கென்னை அருங்கறி ஆக்குவீர்கள். ஹா! ஹா! என்னைப் போலும் சுகிர்தம் பெற்றவர் ஒருவருமே இல்லை, இல்லை. ஈசா! என்னையாளும் உயர் கயிலைவாசா! என் வாயார கடைசியாக உம்மை ஒரு முறை வாழ்த்தி உம்மிடமே வந்துவிடுகிறேன்.

"எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் எவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லைச்
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பார்
சித்தாய் வேடத்தாய்! நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கண்டடியேன் என்செய்
கேனே"

"ஓவுநாள் உணர்வழியுநாள் உயிர்போகுநாள் உயர்பாடைமேல்
காவுநாள் இவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரி
பாவுதண் புனல் வந்திழிபரஞ் ஜோதிப்பாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே."

அம்மா என்னைப் பத்துமாதம் சுமந்து நொந்து பெற்றெடுத்து பாலூட்டிச் சோறூட்டித் தாலாட்டி ஈ யெறும்பு கடிக்காமல் கண்ணைக்காக்கும் இமைபோல காத்து வளர்த்த நன்றியை நான் எவ்வாறு திருப்பித் தரப்போகிறேன். இதோ அடியேன் என் மனதார நமஸ்காரம் செய்கிறேன். அன்புடன் ஏற்றுக்கொள்ளும்.

திரு:—(கட்டி முத்தமிட்டு) அப்பா என் கண்மணி! காலகாலன் கருணைப் பிரவாகத்தில் ஆழ்ந்த நீ காலனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. கிட்டுதற்கரிய மோக்ஷ பதவியை நீயடைந்து தேவர்களிலும் உயர்ந்த திவ்ய பக்தனாய் இருப்பாயாக.

சீ:—தேவருங் கொண்டாடும் திவ்ய மனங்கொண்டு சிவன் பணியை பொன்னணியாய்க் கொண்டருளிய என் அப்பா, சங்கட மென்பதை எங்கணும் காணாதவண்ணம் தங்கள் துங்கமனத்தில் இங்கிதங்கொண்டு தூய்ய வேதம் யாவையும் ஐயந்திரிபற மெய்யாயுணர்த்திப் பெய்யாப் பைம்முகில் போலும் இன்பமாரி பொழிந்து இன்சொல்லால் இருமைப்பயனை புலப்படுத்திய தங்கள் திவ்யபொற்பாத கமலத்தை அடியேன் நமஸ்கரிக்கின்றேன். நீர் பூசுஞ்செஞ்சடை நிர்மலக் கொழுந்தின் வார்கழலைக் காணுமாறு சென்று வருகிறேன். விடை தாருங்கள்.

சிறு:—(வாரிக் கட்டி முத்தமிட்டு) அப்பா, பிள்ளைக் கலி தீர்க்கவந்த பெருமானே. உன் வாய்மொழி யமிர்தத்தை யான் இனி என்று சுவைக்கப் போகின்றேன். அஞ்சு வயதில் கொஞ்சு மொழி கற்று செஞ்சொல் பறைகற்று அஞ்சுக மென்ன அருமை கற்று மெய்ஞ்ஞானந் தன்னை நேர்மையாய் உணர்ந்து உலகில் அரும்பொருளாய் ஆநந்த வள்ளலாய் இன்பந் தந்து வந்த இனிய மழலைக் குழலைத் தத்துவக் குழந்தையாகிய உன்னைப் பிரிவது உயிர் பிரிவது போலுமிருக்கின்றதே. அப்பா, மகனே நீ பிறவிப்பெருங் கடலைக் கடந்தாய்! அறத்துருவாகிய ஆநந்தக் கூத்தனைத் தொடர்ந்தாய். அற்ப அறிவின் திட்பமில்லாப் பெற்றோரை மறந்தாய். நீ கடவுட் குரியவன். நினைத்தற் கரியவன். துன்பஞ் சரிபவன் இன்பஞ் சொரிபவன். மெய்ஞ்ஞானி பகுமானி. தங்கமேனித் தத்துவன் சத்துவன் - உத்தமன் மெத்தக் கற்றவன் கலைஞன் சுகுணன் வித்யாபரணன். கண்மணி, ஓதற்கரிய காதற் களஞ்சியமே, எண்ணற்கரிய உண்ணா அமிர்தமே! பற்று நீக்கிப் பெற்றோரை நீக்கிப் போனாயோ! சுகமாய்ப் போய் வா. எங்கள் கனவிலேனும் வருவாய். எங்களை மறவாய். கயிலைநாதன் கருணையின்பம் பெறுவாய். (இருவரும் கட்டி முத்தமிடல்)

சீ:—அம்மா-உங்களிடமிருந்து விடைபெற்றாச்சுது. இனித் தங்கள் காரியத்தைப் பாருங்கள். அப்பா, படுத்துக் கொள்ளுகிறேன். தூக்கம் வருகின்றது. [சீராளன் தாயார் மடியில் படுத்துக்கொள்ளல்]

சிறு:—ஆ! அருட்பெருஞ் ஜோதியே. அணுவினுள் அணுவாய் வளரும் அற்புத மணியே! அடியேன், விரதங்காக்க வைரவர்க்குக் கறியாக்க என் அருமைப் பாலகனை அறுக்கிறேன். [அறுத்தல்]

அங்கம். IV
காட்சி 1

இடம்:—கணபதீச்சுரத் தருகிலுள்ள ஆத்திமரம்.

பைரவர்:—ஹா! என்ன பக்தி என்ன பக்தி! கேவலம் ஒரு சிவனடியானுக்காக, அருமையாய்ப் பெற்று அருமையாய் வளர்த்து ஞானப்பெருக்கை வாரியுண்ட பாலகனையும் கொன்று கறிசமைத்து வைத்திருக்கின்றார்களே, இதென்ன அகோர விரதம். இத்தனை வைராக்கியத்தைக் கொண்ட இவர்களே மனதை அடக்கியவர்கள். எமது கைலாயத்தை அடைவதற்கும் இவர்களே தகுந்தவர்கள். இப்பொழுது இந்தச் சிறுத்தொண்டன் அமுதுக்கழைக்க அதிதுரிதமாய் ஓடோடியும் வருகிறான். நாம் நிஷ்டையிலிருக்கும் பாவனையாயிருப்போம்.

[சிறுத்தொண்டன் பாடிக்கொண்டு வருதல்]
[நீலாம்புரி—ஆதிதாளம்]

" 1. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

" 1. பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே."

ஹரஹர மஹாதேவ! (வைரவரைப் பார்த்து) அடியார் அரிய-நிஷ்டையில் இருக்கிறார் போலும். ஸ்வாமி, தங்கள் அடிமைச் சிறுத்தொண்டன் தண்டஞ் சமர்ப்பிக்கின்றேன்.

(வைரவர் நிஷ்டை கலைதல்)
(எப்புடுக்ருபாகல்குனோ—மெட்டு)
[முகாரி—ஆதிதாளம்]

[பல்லவி]

வந்தருள் புரியுமையா—மகிழ்வோ டமுதுண்ணநீர்-
[அனுபல்லவி] வந்
சிந்தையிலுவந்து தாங்கள்—செப்பிய கறிவகையை
அந்தமுடன் செய்து வைத்தோம்—அகமகிழ்ந்
[தென்மனைக்கு—வந்

ஸ்வாமி தாங்கள் கட்டளையிட்டவண்ணமாகவே ஒரு தவறுமில்லாமல் பிள்ளைக்கறி செய்துவைத்திருக்கிறோம். தயவுசெய்து அமுதுண்ண வரவேண்டும்.

(சிதம்பர தெரிசனமோ—மெட்டு)
[முகாரி—ஆதிதாளம்]

[பல்லவி]

திருமனை வரவேணுமோ நீ அதைச்
சிந்திக்கலாமோ-போமடையா நான்—திரு

[சரணங்கள்]

(1) வருவாய் வருவாயென்று வழிபார்த்திருந்தேனே
வன்பசியாலே - நொந்தேன் மென்மேலே
வரமாட்டேன் - அன்னந் - தொடமாட்டேன்
வந்தவழியைப்பாராய் - நொந்த என்முன்
[சோராய்—திரு

(2) முன்னே நீ இல்லை யென்று சொன்னால் எங்கே
[னுஞ் சென்று
மொய்ம்பசி தீர்ந்தே - வந்திருப்பேனே
முழுமோசம் - இது - வெளி வேஷம்
மூடாயிப்போதே - போவாய்செப்பாதே—திரு

நன்றாயிருக்கிறது உன் ஞாயம் - நீ அன்னதானம் செய்வதாக அபாரமாகக் கொடி யொன்றைத் தூக்கிவிட்டனையே. உனக்கேன் இந்தகர்வம்? இந்தப்பெருமை! "இதோ வந்துவிட்டேன்" என்று இங்கிதம் பேசிப் போனவனல்லவா நீ.நானும் உண்மைதானென்று வருவாய் வருவாய் என்று வழிமேல் விழி வைத்துக்கொண்டு காத்திருந்தேன். அழைப்புங் காணோம். அமுதுங் காணோம். ஆசாமி போனவன் ஒரே போக்காய் போய்விட்டாய் பசியோ ப்ராணனைத் தின்ன இந்நேரம் அவதிப்பட்டு வருந்தி அப்படியே கண்ணயர்ந்தேன். அதையுங் கெடுக்க 'வா' வென வந்துவிட்டாயே. வெகு அழகாயிருக்கிறது! பசிவேளைக்கில்லாதது பரமான்னமாயினும் எனக்கு வேண்டாம். "நேரஞ் சென்று போனால், கோபங்கொண்டு மறுப்பான். நாமே நன்றாக வயிறு புடைக்கத் தின்று ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கலாம்" என்றுதானே இந்நேரங் கழித்து வந்தாய். போ, போ. நான் அங்கு வரவே மாட்டேன்.

சிறு:—[மாத்தாட பாரதேனே—மெட்டு]
[கமாஸ்—சாப்புதாளம்]

[பல்லவி]

பிழைபொறுத்தாளுமையா—பாவியேன்செய்த—பி
[அனுபல்லவி]
பிழைபொறுத்தாளுமெங்—களைரக்ஷித்திடசாமி—பி
[சரணங்கள்]
சிறியோர் சிறுபிழைகள்—செய்திருந்தபோதிலும்
பெரியோர் அவை பொறுத்தல்—பெருங்கடமை
[யல்லவோ—பி
எங்கள் தவப்பயனாய் இங்கெழுந்தருள் செய்தீர்
பொங்கு மமுதருந்தப் போதுவீர் ஸ்வாமியே—பி

ஸ்வாமி, ஏதோ தெரிந்தும் தெரியாமலும் இச்சிறியேன் செய்த பிழையை மன்னித்து ரக்ஷிக்க வேண்டும். அடியேன் இது நாழிகைப் பொழுதளவும் ஸ்வாமி காரியமாக இருந்தேனே யல்லாமல் வேறு காரியமாக ஒரு விநாடியேனும் வீணாக்கவில்லை. முக்குற்ற மகற்றிய தாங்கள் இக்குற்ற மொன்றனைப் பொறுத்தருள் செய்தலும் ஓர் பாரமோ. நேரமோ

இன்னுமிருக்கிறது. வீடோ தூரமுமில்லை. ஏழையின் அபசாரம் பொறுத்து தொலையாவிசாரம் போக்குவது தங்கள் பாரமேயாகும். கருணைகரக் கடவுளின் அருணடகம் பார்க்கும் மெய்யன்பராகிய துய்ய அடியாருக்கு என்னை மன்னித்தருளுதல் ஒரு பெரிய காரியமோ - சுவாமி வாருங்கள். அடியேன்மேல் கிருபை கூறுங்கள். எந்தன் சஞ்சலத்தைத் தீருங்கள்.

வை:—ஹே! சிறுத்தொண்டா! உண்மையில் உனக்கு சிரத்தை யென்பது கிஞ்சித்தேனும் இல்லை. பசிக்காக அன்ன முண்ணுவதோ, அல்லது ஏதோ வேடிக்கைக்காக உண்ணுவதோ? பசிக்குதவாத அன்னம் இருந்தென்ன இல்லாமற் போனுலென்ன? வாஸ்தவத்தில் என் வாழ்நாளில் இது பரியந்தரம் பசியென்பதைக் கனவிலும் கண்டதில்லை. தப முடிந்ததும் பசி உபாதை வரு முன்னமே விரும்பிய உணவை நிரம்பவும் உண்டு சந்தோஷமடைவேன். உன் வீட்டிற்கு வந்ததெல்லாம் உன் அன்னக்கொடியைப் பார்த்தே. ஏழைகளென்றாலும் தாழாது தர்மஞ் செய்வார்கள். உன் போலுஞ் செல்வந்தர் வீட்டில் காத்துக் காத்து வயிற்றிலெரியும் பசி நெருப்புப் பூத்துப்போக வேண்டியதுதான். பின்பு ஏதோ இவ்வளவு சோற்றை எறிந்து விடுவீர்கள். இது உலகறிந்த உண்மைதானே. உன்னைச் சொல்லக் குற்றமில்லை. இது உன் பணக்கொழுப்பே யாகும். சரி இருக்கட்டும். இதோ உன் மனைக்கு வருகின்றேன். வந்ததுமேனும் கொஞ்சம் அன்னம்படை. அது இல்லை, இது இல்லை என்று இழுப்பும் பறிப்புமா யிருந்தால் எனக்குப் பிடிக்காது. நான் உடனே புறப்பட்டுவிடுவேன்.

சிறு:—ஸ்வாமி. கொஞ்சமுங் காலதாமத மில்லாமல் அன்னம்படைத்து அகங்குளிரச் செய்வேன். தயவு செய்து வாருங்கள்.

—— [இருவரும் போதல்.]

காட்சி. 2

இடம்:—சிறுத்தொண்டர் மனையில் ஒரு அறை.

[திருவெண்காட்டு நங்கை வைரவர்க்கு ஆசன மிட்டு நிற்றல்-சிறுத்தொண்டரும் வைரவரும் பிரவேசித்தல்.]

சிறு:—ஸ்வாமி, தாங்கள் இந்த திவ்யாசனத்தில் அமர்ந்தருளல் வேண்டும்.

வை:—அரஹர மஹாதேவா! (உட்காருதல்.)

சிறு:—நங்காய்! நீ சென்று ஐயருக்கென்று அரிந்து வைத்திருக்கும் தலை வாழையிலையைச் சீக்கிரம் கொண்டுவருவாய்.

வை:—சிறுத்தொண்டா! யாம் இலையில் புசிக்கும் வழக்கமில்லை. எங்கள் தேசாசாரம் பரிகலத்தில் உண்பதுதான்.

சிறு.—தங்கள் உத்தரவுப்படியே. நங்காய்! நீ சென்று அந்தத் தங்கப் பரிகலத்தைத் துலக்கிக் கொண்டு வருவாய்.

திரு:—இதோ வந்துவிட்டேன். [போதல்.]

வை:—சிறுத்தொண்டா! நான் ஏதோ சிரமங்கொடுத்தேன் என்று மனதில் வருத்தம் வையாதே. அடியார்களுக்கு அன்னமிடுவது ஆயிரங்கோடி நற்பலனைத் தருமென்பது என் அநுபவசித்தம்

சிறு:—ஸ்வாமி தாங்கள் அப்படி என் விஷயமாக நினைக்கவேண்டாம. தாங்கள் என்னைப்போலும் அற்பர்களை நாடி ஒன்றைக் கேட்பதே துர்லபம். தங்களைப்போன்றவர்கள், இந்த ஏழையின்வாசலை மிதிக்கவேண்டுமே. பூர்வத்தில் என்ன புண்ணியம் பண்ணினேனோ இன்று தங்களை அதிதியாக வரப்பெற்றேன். தங்களுக்குச் சிரமம் ஏற்படடதே யல்லாமல் எனக்கதில் கிஞ்சித்தும் சிரமம் இல்லை.

[திருவெண்காட்டு நங்கை பரிகலத்தோடு வருதல்.]

திரு:—நாதா, பரிகலம் கொணர்ந்தேன்.

சிறு:—சரி-பரிமாறுவதுதானே.

திரு:—இதோ ஆச்சுது.

[பரிகலத்தைப் பைரவர் முன்னர் வைத்து அன்னம் பரிமாறி கறிபடைத்தல்.]

சிறு:—சுவாமி, திருவுளங்கொண்டு அமுது உண்ணப் பிராத்திக்கின்றோம்.

வை:—பக்தா, உண்ணுவதிருக்கட்டும். நம் கலத்திலிருக்கும் பதார்த்தங்கள் இன்னின்ன அவயவங்களின் கறியென விபரமாய்ச் சொல்லவேண்டும்.

சிறு:—ஆஹா! அடியேன் காத்துக்கொண்டிருக்கிறேன்.

[பொன்னுலவு சென்னிகுள—மெட்டு.]

1. சங்கர விஜயம்போல எங்களையாட் கொள்ளவந்த
மங்களாந்துலங்கும் பெரும்—புண்ணியா—கரு
மங்களனைத் துந்துரத் துங்—கண்ணியா—இன்று
தங்கள் கருத்துப்படியே—எண்ணியான் செய்த
சர்தனங்க ளின்வகையை
யோதுவேனிப் போது சீராய்
காதலோடு தரன் புசிக்க—வேணுமே—இந்த
பாதகன் மேற் கிருபை—பூணுமே.

2. தேவரீர் நாவுக்கு மெருவாகவே யிருக்குமென்று
பூவுபோற்செய்த ஈரற் கறியிது—கோதி
மாவுகலந்த நெஞ்சுக் கறியிது—நெய்யி
லேவதக்கிய தொணடைக் கறியிது—கொழுந்
தீவணக்கி யேமனக்க மாமணிக்கு, டல்சிவக்க
வேவவைத்த நற்கரியீ—தெண்ணுமே—
பைவகுத்திட்ட கறியீ—துண்ணுமே.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பீ. ஏ.]

(393-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரஞ்சிதம் வந்து ஒரு வாரமாயிற்று. இதற்கிடையில் நம் கதாநாயகி தனியாகவும் வீரபத்ர பிள்ளையுடனும், அத்தீவின் விசேஷத்தைப் பார்த்து வருவதாக விருந்தாள். ஒருநாட்காலை வீரபத்ர பிள்ளை பழங்கள் பறித்துவரச் சென்றபொழுது நம்மங்கை மலையின் சிகரத்தை நோக்கிச் சென்றாள். கனிகளைக் கொண்டுவந்து வைத்து அதிகநேரமாகியும் இரஞ்சிதம் திரும்பி வராததாற் கவலைகொண்ட வீரபத்ரபிள்ளை அவளைத் தேடிச்செல்லப் புறப்படும்பொழுது நம்மாது நல்லாளும் அங்குவந்து தன் அம்மானைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே "மாமா! தாங்கள் ஏன் இதுகாறும் இவ்வபூர்வ விஷயத்தைச் சொல்லா திருந்தீர்கள்?" என்று கேட்டாள்.

வீர: — இங்கு என்ன அப்படி ஆச்சரியகரமான விஷயமிருக்கிற தென்கிறாய்? நான் உனக்கு எதைச் சொல்லாமலிருந்தேன்?' என வினவினன்.

இரஞ்: — "தாங்கள் என்னிடமிருந்து ஒன்றையும் மறைக்கவில்லையா?" என்று கேட்டாள்.

வீர: — நீ கேட்பதின் பொருள் விளங்கவில்லையே.

இரஞ்: — சேலத்தில் பொய்மான் கரடென்றொன்றிருக்கிறதெனக் கேள்விப்பட் டிருக்கிறீர்களல்லவா?"

வீர: — ஆம். அதை நான் பார்த்து மிருக்கிறேன்.

இரஞ்: — "அதேமாதிரி இங்கு பொய்ச்சிம்மாதனக் கரடொன்றிருக்கிறது" என்றாள்.

வீர: — "என்ன! சிம்மாசனமா இருக்கிறது! எங்கே? பார்த்தாயா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

இரஞ்: — தங்களுக்கேன் இவ்வளவு ஆச்சரியம். நாம் சொல்லாமலே இவள் இதை எவ்விதந் தெரிந்து கொண்டாளென்ற வியப்போ? எனவுரைத்தாள்.

வீர: — உண்மையில் இவ்விஷயம் எனக்குத் தெரியாது. அச்சிம்மாசனம் எவ்விடத்திலிருக்கிறது என்று ஆவலுடன் கேட்டான்.

இரஞ்: — "அது நிஜமான சிம்மாசனமன்று. அது ஒரு பொய்த்தோற்றம். தங்களுடைய ஆத்திர வார்த்தைகளைக் கவனித்தால், இதை நீங்கள் பார்த்திராவிடினும், அதைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்களென்றும், அதைப்பற்றிய இரகசியம் ஏதோ இருக்கிறதென்றும், அது தங்களுக்குத் தெரிந்திருக்கிறதென்றும் நினைக்கவேண்டி யிருக்கிறது அது எவ்விதமோ இருக்கட்டும். என்னுடன் வந்தால் அச்சிம்மாசனம் தோன்றுமிடத்தைக் காண்பிக்கிறேன்' என்று சொல்லி வீரபத்ர பிள்ளையை அழைத்துக்கொண்டு மலைமீதேறிச் செல்லும்பொழுது ஓரிடத்தில் நின்று, "மாமா! இந்தவிடத்தில் நின்றுகொண்டு, அதோ, உச்சியில் பிளவுபட்டு நிற்கும் பாறைகளுக்கிடையிற் பாருங்கள். அப்புறம் இப்புறம் கொஞ்சம் விலகினாலுங்கூட அச்சிம்மாசனம் கண்ணுக்குத் தெரியாது" என்றுரைத்தாள்.

வீர: — (அங்கு நின்றுபார்த்து ஆச்சரியத்துடன்) "உண்மையான சிம்மாசனம்போலவே தோன்றுகிறது. அது வெறுந்தோற்றமே யென்பதை யறிந்து கொண்டாயா?" என்று கேட்டான்.

இரஞ்: — 'அச் சிம்மாசனத்திற்கு மேலாக ஒரு கொடி தொங்குகிறது பாருங்கள். அதை நான்தான் அங்கு அடையாளமாக வைத்திருக்கிறேன். அங்குச் சென்றுபார்த்தால் சிம்மாசனத்தையுங் காணோம் ஒன்றையுங் காணோம்.'

வீர: — "இரஞ்சிதம்! நீ அங்குபோய் யுட்கார்ந்திரு. நான் விரைவிற்சென்று அக்கடிதத்தை எடுத்து வருகிறேன்" என்று சொல்லி வேகமாகக் குகையை நோக்கி நடந்தான்.

வீரபத்ர பிள்ளையுடைய ஆச்சரிய செய்கைகட்கும், வார்த்தைகளுக்கும், 'அக்கடிதம்' என்று குறிப்பிட்டுச் சொன்னதற்குங் காரணம் தெரியாத இரஞ்சிதம் பலவாறு யோசித்துக்கொண்டே சென்று பொய்ச் சிம்மாசனந்தோன்றுமிடத்தில் உட்கார்ந்திருந்தாள். சற்று நேரத்திற்குப்பின் அங்கு வந்துசேர்ந்த வீரபத்ர பிள்ளை "இரஞ்சிதம்! நீ இவ்விடத்தில் உட்கார்ந்திருப்பது சிம்மாசனத்தின்மீது அமர்ந்திருப்பதுபோல், நீ குறிப்பிட்ட இடத்திலிருந்து பார்த்தபொழுது தோன்றிற்று என்றான்.

இரஞ்: — மாமா! அதோ பாருங்கள். இம் மலையின் அடிவாரத்தில் பச்சென்றிருக்கும் மரக்கூட்டத்தில் தங்கள் கண்களுக்கு ஏதேனும் விசேஷமாகப் புலப்படுகின்றதா?

வீர: — விசேஷமான தொன்றையுங் காணேமே! உனக்கேதேனும் தெரிகிறதோ? என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

இரஞ்: — "தாங்கள் இங்குட்கார்ந்து பாருங்கள்" என்று சொல்லி எழுந்து சற்று நகர்ந்து நின்ருள்.

அவ்வாறே அமர்ந்து பார்த்த வீரபத்ரபிள்ளை மிகவும் வியப்பெய்தி "இரஞ்சிதம்! நீ ஓர் அபூர்வமான பெண் என்பதிற் சந்தேகமில்லை நான் பலநாட்களாகத் தேடித்திரிந்தும் அகப்படாமற் கைவிட்ட விஷயத்தின் இரகசியத்தை நீ மிகச் சுலபமாகக் கண்டுபிடித்து விட்டாய் என்று நம் வாசகர்கள் முன்பு பார்த்துள்ள கடிதத்தை அவளிடம் கொடுத்துத் தனக்கு அது எவ்விதம் கிடைத்ததென்பதையும் தான் அதன் விஷயத்தைத் தெரிந்துகொள்ள முயன்றதையும், கடைசியாக அதன் பொருளைக் கண்டு கொண்டதையும், அதிற் குறிப்பிட்டிருக்கும் இடத்தைத் தேடியும் பயன்பெருமற் போனதையும் விவரமாகச் சொன்னுன்.

இரஞ்:—'மாமா! இப்பொழுதுதான் தங்களுடைய செய்கைகட்குக் காரணந் தெரிந்தது. ஆகவே இங்குத்தோன்றும் பொய்ச் சிம்மாசனந்தான் இக் கடிதத்திற் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஏனெனில், இதிற் குறித்திருக்கும் மூன்று கிளைகள் பொருந்தின உயரமான கொம்பையுடைய மரம் இங்குட்கார்ந்து பார்த்தால்தான் தெரிகிறது. சற்று விலகி உட்கார்ந்தேனும் நின்றேனும் பார்த்தால் மற்ற மரங்களால் அது மறைக்கப்படுகிறது' என்று சொன்ஞள்.

வீர: — 'ஆம், அதில் யாதொரு சந்தேகமுமில்லை. இப்பொழுது, இவ்வளவுமரங்களுக்கிடையிற் சென்று குறிப்பாக அம்மரத்தைக் கண்டுபிடிப்ப தெவ்விதம்?'

இரஞ்:—"அது மிகவுமெளிதான காரியமே. எதற்கும் தாங்கள் இவ்விடத்திலேயே உட்கார்ந்திருங்கள். நான் சென்று மரத்தண்டை நிற்கிறேன். அதில் நான் பிசகிவிட்டால் தாம் சும்மாவிருக்கவேண்டியது. அம்மரத்தையே பிடிப்பேனுல் தங்களுடைய வஸ்திரத்தை எனக்குத் தெரியும்படியாக உயரத்தூக்கி, ஆட்டி விட்டுத் தாங்கள் உடனே அங்கு வரவேண்டியது" என்று சொல்லி மான்போல் ஓடி மறைந்தாள்.

ஆச்சரியத்தால் மெய்மறந்து வீரபத்ரபிள்ளை உட்கார்ந்து விட்டான். சமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு இரஞ்சிதம் அம்மரத்தின் மீதேறிக் கொண்டு உயரமான கிளையை ஒரு கையிற்பிடித்து மற்ற கையில் ஒருவெள்ளை வஸ்திரத்தைப் பிடித்து அங்குமிங்கும் அலைப்பதைக் கண்ட நம் பெரியவர் எழுந்தோடினர். மலையைவிட் டிறங்கினர். வனத்திற் புகுந்தார். அங்குமிங்கு மலைந்தார். தான் பல தடவைகளிற் பார்த்தவிடமே யெனினும் வழிதெரியாமல் விழித்தார் இரஞ்சிதம் தன்னைக் கூப்பிடும் குரல் வரும் திக்கைநோக்கி ஓடினர். நம் கதாநாயகியைக் கண்டு திகைத்தார்.

இரஞ்:—என் மேலேயே பார்த்துக்கொண்டு வந்தீர்கள்?

வீர: — நீ மரத்தின்மேலன்றே நின்றுகொண்டிருந்தாய். இடம் சரியாகத் தெரியாததால் நீ எந்த மரத்திலிருக்கிருயென்றே பார்த்துக்கொண்டுவந்தேன் அதனுல்தான் நீ இங்குட்கார்ந்திருப்பது தெரியாமற் போயிற்று நீ மரமேற எவ்விதங் கற்றுக்கொண்டாய்? ஏது இம்மரத்திலிருந்து கயிறென்று தொங்குகிறது? நான் இதற்குமுன் இம்மரத்தண்டை பன்முறை வந்திருக்கிறேனெனினும் இக்கயிற்றைப் பார்க்கவில்லையே! மண்வெட்டியுங் கூடவா! என்று ஆச்சரியத்தாழ் பீடிக்கப்பட்டுக் கேட்டான்.

இரஞ் — மாமா! தங்களைவிட்டு நீங்கினவுடன் நேராகக் கப்பலுக்குச் சென்று அதிலிருந்து இம்மண்வெட்டியையும் அக்கயிற்றையும் எடுத்துக்கொண்டு இங்குவந்தேன். கடிதத்திற் குறிப்பிட்டுள்ள மரம் இதுதானென்று என் மனதிற்குத் தெரிந்ததெனினும் அதை உறுதிப்படுத்திக் கொள்ளும்பொருட்டு இம்மரத்தின் இருமருங்கிலுமுள்ள வேறு மரங்களில் ஏறிப்பார்த்தேன். தாங்கள் உட்கார்ந்திருந்தது தெரியவில்லை. பிறகு இந்த மரத்தின் மீதேறிப் பார்த்தபொழுது தங்களுடைய உருவம் நன்ருகத் தெரிந்தது அதனுல் நான் பிழையுறவில்லையென்றுணர்ந்து தங்களுக்குச் சிரமங் கொடுக்காமல் நானே தங்களுக்குச் சைகை செய்தேன். தாங்கள் அங்கிருந்து புறப்படவே என் வேலையை ஆரம்பித்தேன். கடிதத்திலுள்ள பிரகாரம் மூன்ருவது கிளையிற் கயிற்றைக்கட்டி விட்டுக் கீழிறங்கி வந்தேன். அக்கயிற்றிற்கு நேராகப் பூமியில் ஒருகுறிப்புவைத்து அதற்கும்

மரத்திற்கும் கோடொன்று கிழித்தேன். அக் கோட்டின் மத்தியிலிருந்து நேர் மேற்கில் மதிப்பாக இருபது கஜதூரம் அளந்துகுறிப்பாக ஒரு கல்லை வைத்துவிட்டு இங்கு வந்துட்கார்ந்தேன். தாங்களும் வந்தீர்கள். நான் வைத்த குறிப்புச் சரியாக விருக்கிறதா என்று பாருங்கள் என வுரைத்தாள்.

வீர: — உன் குறிப்புச் சரியாகத்தானிருக்கும். சந்தேகம் நீங்க அளந்து பார்க்கிறேன். என் முழம் கஜக்கோலுக்குச் சரியாக இருக்கிறதினால் ஐயமறத் தெரிந்துகொள்ளலாம்'' என்று சொல்லி அளவிட்டுப் பார்த்தபொழுது ஒரு அங்குல பேதமுமின்றிக் குறிப்பு சரியாகவே வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு "இனித் தோண்ட ஆரம்பிக்க வேண்டியதுதான்'' என்ருன்.

பூமிக்குள் இரண்டடி தூரம்வரை நன்ருகக் கட்டிக்கப்பட்ட மண்கண்டமும் பின் முழுவதும் மணலால் மூடப்பட்டிருந்ததாலும் அதிகமான சிரமமின்றிப் போதுமான அகல நீளத்துடன் ஆறடி தூரம் தோண்டினார்கள். இருவரும் களைத்துவிட்டதால் குகைக்குச் சென்று ஆகாரம் புசித்துவிட்டுத் திரும்பிவந்து வேலையைத் தொடங்கினார்கள். அப்பொழுது ஆறடிக்குக் கீழ் சுமார் மூன்றடிச் சதுரமான பலகைக் கல் இருக்கக்கண்டு, அது இலேசாகவிருந்ததால், இருவரும் சுலபமாக அதை எடுத்து அப்புறம் தள்ளினபொழுது ஒரு நிலவறையையும் அங்கு இறங்கிச் செல்வதற்காகச் சிறு படிக்கட்டுகளும் அவர்களுடைய கண்களுக்குத் தென்பட்டன. அதின்வழியாக இருவரும் இறங்கிச் சென்று பார்த்தபொழுது சுமார் எட்டடி நீளமும் ஆறடி அகலஉயரமுமுள்ள நிலவறையில் நிற்கக் கண்டார்கள். எனினும் அவர்கள் வந்த வாயில் புறத்திற்குக் கீழே மாத்திரம் வெளிச்சமாகவும் மற்ற விடங்கள் இருண்டுமிருந்ததால் இரஞ்சிதத்தைப் படிக்கட்டின் பக்கத்தில் நிறுத்தி விட்டு வீரபத்ர பிள்ளை தன் கைகளால் நாலா பக்கமும் தடவிக்கொண்டு சென்று பார்த்தான். ஒன்றும் அவன் கைகளுக்குத் தட்டுப்படாததால் உற்சாகங் குன்றித் திரும்பிவந்து "இந் நிலவறையில் உன்னையும் என்னையும் அந்தப்படிக்கட்டையுந் தவிர வேறென்றுமில்லை. நாம் எடுத்துக்கொண்ட பிரயாசை வீணே என்று நினைக்கிறேன். இக்கடிதம் எழுதினவன் பிறரை ஏமாற்றுவதற்கு எழுதிவைத்தானே, அன்றி இவ்விடமிருந்தவற்றை எக்காரணத்தாலோ அப்புறப்படுத்திவிட்டு, அதற்கு முன்னதாகவே வரைந்து வைக்கப்பட்ட இக்கடிதத்தைக் கிழித்துவிட மறந்தானே? இரண்டிலொன்று நடந்திருக்க வேண்டும், என்று சொன்னுன்.

இரஞ்: — "தாங்கள் கூறின விரண்டும் பொருந்தாவென் றெண்ணுகிறேன். பிறரை ஏமாற்ற வேண்டுமென்னுங் கருத்து இக்கடித கர்த்தாவுக்கிருந்திருக்குமானல் இத்தகைய நயன பாஷையில் எழுதி எதிரிகள் காணுதவிடத்தில் அவ்வளவு பத்திரமாக வைத்திருக்கமாட்டான். இரண்டாவதாக, இக்கடிதம் வரைந்தவன் மிகவும் புத்திநுட்ப முடையவனுகவும் மரிப்பென்பதைக் கனவிலுங் கொள்ளாதவனுகவு மிருந்திருக்க வேண்டுமாதலின் அவன் தன் செல்வத்தை வேறிடத்திற்கு மாற்றி யிருந்தால் இக்குறிப்பை உடனே அபகரித்துவிட்டிருப்பான். மேலும் அவனுடைய மனோபீஷ்டம் தன் தனத்தைத் தனக்குப் பிரியமில்லாத வேறெவனும் அனுபவிக்கக் கூடாதென்றிருந்திருக்கு மென்பதற்கு இந்நிலவறையே போதிய சாட்சியாக விருக்கிறதாதலின், எப்பொழுதேனும் யாவரேனும் தற்செயலாக இவ்விடத்தைக் கண்டுபிடித்தாலுங்கூட அப்பொழுது அவர்களுடைய கண்களுக்குத் தெரிந்துவிடாத வண்ணமும், சுலபத்தில் எடுத்துக்கொள்ளாத விதமுமாக எவ்விடத்திலேனும் மறைத்து வைத்திருப்பா னென்பதும் விளங்குகிறது. இதுவல்லாமற் பொய்ச் சிம்மாசனமும், இம்மரமும், இந்நிலவறையும், இக்குறிப்பும் இங்கு ஏதோ அரியதொரு வஸ்துவிருக்கிறதென்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றன. ஆகவே இங்கு ஏதோ இருக்கிறதென்பது மறுக்க முடியாத உண்மையென்பது திண்ணம். இனி அது இவ்வறையி லெங்கிருக்கிறதென்பதைக் கண்டுபிடிப்பது நம் சாமர்த்தியத்திலிருக்கிறது என்ருள்.

வீர: — நீ இவ்வளவு உறுதியாகச் சொல்லும்பொழுது, இதுவரையும் நீ செய்துவந்த அபூர்வச் செய்கைகளைக் கருதுமிடத்து நான் இதில் ஐயமுறுவதற்கில்லை. ஆதலின் சுவர்களையும் தரையையும் சோதித்துப் பார்க்கிறேன் என்று சொல்லித் தன் கைக்கோலால் குத்திக் குத்திப் பார்த்தான்.

சுமார் கால்மணி நேரஞ் சென்றது. இதுவரை

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

யும் நிலவறையின் முகத்துவாரத்திற்கு நேராக நின்றுகொண்டு சிந்தித்தவண்ணமிருந்த இரஞ்சிதம், திடீரென்று ஏதோ வொரு யோசனை தோன்றத் தன் காற் பெருவிரலால் பூமியைக் கிளறினாள். ஒரு வஸ்துவைக் கண்டாள். கலீரென்று நகைத்தாள். இதைச் செவியுற்ற வீரபத்ர பிள்ளை திரும்பிப் பார்த்து "ஏன் சிரித்தாய் ?" என்று கேட்டான்.

இரஞ்: — தங்கள் பரிசோதனையில் ஏதேனும் பிரயோசனத்தைக் கண்டீரோ? என்று வினவினாள்.

வீர: — தரையையும் மூன்று சுவர்களையும் பார்த்து விட்டேன். எஞ்சிநிற்கும் ஒரு சுவற்றிலும் ஏதேனும் ஆதாரங் கிடைக்காவிடில் நாம் திரும்பிப்போக வேண்டியது தான்.

இரஞ்: — அச்சுவரும் மற்றவைகளைப் போலத்தான் முடியும். நான் நிற்கும் இந்தவிடத்தைப் பார்த்தீர்களா ?

வீர: — இல்லை. அங்கு சூரிய வெளிச்சம் நன்றாகத் தாக்குவதால் அப்பாகத்தைக் கவனிக்க வேண்டியதில்லையென விட்டுவிட்டேன்.

இரஞ்: — இங்குத் தற்செயலாக எவர்வரினும் தாங்கள் நினைத்ததுபோலும் செய்த மாதிரியும் சோதித்துப் பார்ப்பார்களே யன்றி இவ்விடத்தில்தான் ஆதார மிருக்கலாமென்று எவரும் நினையார். இதோ பாருங்கள், இங்கொரு வஸ்துவிருக்கிறது. இது மண்ணிற் பதிந்து கிடந்தது. விரலாற் பெயர்த்தெடுத்தேன். நான், இவ்வளவு செய்தவனின் புத்தி நுட்பத்தை ஆராய்ந்து பார்த்தபொழுது எதிரிகள் ஏமாந்து போகும்படியாக இவ் வெட்ட வெளியான இடத்தில்தான் ஏதேனும் அடையாள மிருக்குமென்று என் மனதிற்குப் பட்டது. ஆனால் நான் கால்வைத்த விடத்திலேயே அது கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை என்று சொன்னாள்.

வீரபத்ர பிள்ளை கீழே உட்கார்ந்து இரஞ்சிதங் குறித்த இடத்தைப் பார்த்து " இது ஒரு சிறிய இருப்பு வளையம். எதிலோ பதிக்கப்பட்டிருக்கிறது. ஒருசமயம் பெட்டியின் மேல்மூடிக்குச் சேர்ந்ததாக விருக்குமா ? நான் இதைப் பிடித்திழுக்கட்டுமோ?' என்று கேட்டான்.

இரஞ்: — 'பெட்டி இதற்குக் கீழிருக்கிறதென்று எண்ணிவிடக் கூடாது. அதற்கு இது வழிகாட்டியாக விருக்குமென்று நினைக்கிறேன். அவ்வளையத்தைப் பிடித்திழுங்கள் பார்க்கலாம்.

அவ்வாறே இழுத்தபொழுது ஒரு பெருத்த சங்கிலி பூமிக்குச் சுமார் நான்கங்குல ஆழத்தினின்று பெயர்ந்துவந்து சுவரண்டை நின்றதைக் கண்ட வீரபத்ரபிள்ளை, " வளையத்தை விடச் சங்கிலி பருமனாகவே இருக்கிறது. இனி இச் சங்கிலி கீழ்நோக்கிச்செல்லுகிறதா அன்றிச் சுவரில் நேராகச் செல்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?' என்று கேட்க, இரஞ்சிதம் "நாம் அதைக் கவனிக்க வேண்டியதில்லை. அவ்விடத்திற் கொஞ்சந் தோண்டினால் எல்லாந் தெரிந்துவிடும்" என்று சொன்னாள்.

எஜமானின் சொற்படி நடக்கும் உண்மைச் சேவகன்போல் வீரபத்ர பிள்ளை இரஞ்சிதத்தின் இஷ்டப்பிரகாரம் தோண்டினான் சங்கிலியும் ஓரடி தூரங் கீழே சென்று பெரிய வளையமொன்றில் மாட்டப்பட்டு முடிந்து நின்றது. அவ்வளையம் ஓர் இரும்புப்பெட்டியின் அள்ளைப்புறத்தில் வைக்கப்பட்டிருந்ததுபோற் காணப்பட்டது. இன்னும் ஓரடிதூரம் தோண்டவே பலகையொன்று தென்பட்டது. அப்பலகையின் மீதுதான் அப்பெட்டிவைத்திருந்ததுபோ லிருந்தது. பிறகு இரஞ்சிதத்தின் கட்டளைப் பிரகாரம் சங்கிலியைப் பிடித்திழுத்தபொழுது தரைமட்டத்திற்குக்கீழ் சுவருக்குள்ளிருந்து இரண்டடி சதுரமான இரும்புப் பெட்டியொன்று அத்துடன் வந்தது அவ்விடத்தில் இதைத்தவிர வேறொன்று மில்லாததால் இருவரும் கஷ்டப்பட்டுப்பெட்டியை நிலவறையிலிருந்து வெளியே தூக்கி வந்தார்கள். பூட்டிடாமலிருந்ததால் மிகச் சுலபமாக பெட்டி திறக்கப்பட்டது. சூரிய கிரணங்கள் தாக்குவதாற் பள பளப்பாசப் பிரகாசிக்கும் கற்களையும் பொன்கட்டிகளையும் கண்ணுற்ற நம் கதாநாயகி திடுக்குற்றாள். ஏகாந்தவாசியான நம் பெரியவரின் கண்கள் கண்டு மகிழ்ந்தன.

வீர: — ஆகா! எவ்வளவு தங்கக்கட்டிகள் ! கணக்கில்லாத முத்தாரங்களும் மோரா மாலைகளும் ! எண்ணிறந்த இரத்தினங்களும் வைரக்கற்களும் ! வைர அட்டிகைகளும் கம்மல்களும் மதிக்க வொண்ணாதன! கண்களுக்கும் மனதிற்கும் தக்க விருந்தேயாகும். ஏதோ கடிதமொன்று வைக்கப்பட்டிருக்கிறது. என்னவென்று படித்துப்பார்' என்று சொல்லிக் கடிதத்தைக் கொடுத்தான்.

இர. — அதை வாங்கிப்பார்த்து " இது

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி வாலெயி றூறிய நீர்.

ஒரு குறிப்புப்போலிருக்கிறது. பொருளின் மதிப்பை மொத்தமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதாவது 'இருபது பொன் கட்டிகளின் விலை பத்துலட்சம் ரூபாய். முத்து மாலைகளும் மோராமாலைகளும் பத்து லட்சம். இரத்தின கற்கள் பத்துலட்சம். வயிரக்கற்கள் பதினைந்து லட்சம். மற்ற ஆபரணங்கள் ஐந்து லட்சம். ஆக ஐம்பதுலட்சம் ரூபாய் மதிப்புள்ள வஸ்துக்கள் இப்பெட்டியி லிருக்கின்றன'' என்று வரையப்பட்டிருக்கிறது, என்று சொன்னாள்.

வீர: — "பேஷ்! நானும் அவ்வாறுதான் மதித்தேன். இன்னும் அதைவிட அதிகம் பெறக்கூடியனவே யன்றித் தாழ்ந்தவையன்று" என்று சொல்லி ஒவ்வொன்றாக எடுத்துக் கண் குளிரப்பார்த்து ஆனந்தித்தான்.

இரஞ்:—'மாமா! தாங்கள் கூறினதுபோல் இவைகள் கொள்ளைக் கூட்டத்தாரைச் சேர்ந்தனவாக விருப்பின், இவைகள் அவர்களுக்கு எவ்வாறு கிடைத்திருக்குமென்பதை நினைக்கும் பொழுது மனம் பகீரென்கிறது. இவைகள் இவ்விடத்திற்கு வருவதற்குமுன் எவ்வளவு பெயர்கள் உயிர் துறந்திருக்க வேண்டும்! எவ்வளவு குடும்பங்கள் அழிந்திருக்க வேண்டும்! இத்தகைய ஜீவ இம்சைசெய்தவன் என்ன பலனை அனுபவித்திருப்பான்! புதைத்து வைத்துக் கண்டுகளித்ததேயன்றி வேறொன்று மிராது என்றாள்.

வீர: — நீ நினைப்பதுபோல் உயிர்க்கொலையும் குடும்ப அழிவும் இல்லாமலுங்கூட இவைகளைச் சேகரித்திருக்கக் கூடும். இவ்வுலகத்தில் பணம் சம்பாதிப்பவன் ஒருவனிருக்க அதை யனுபவிப்பவன் வேறொருவனாக விருக்கிறான். தனத்தைத் தேடினவனே அதன் சுகத்தை யனுபவிப்பது மிக்க துர்லபம். இப்பெருத்த செல்வத்தை உனக்கென்றே ஒருவன் சம்பாதித்து வைத்துப்போனது அதற்குத் தகுந்ததொரு சான்றாகும் என்று சொன்னான்.

இரஞ்:—மாமா! இருந்தாற்போ லிருந்து திடீரென்று இச்செல்வம் எனக்குச் சொந்தமானதெனத் தாம் கூறுவதின் பொருள் விளங்கவில்லை என்று சொன்னாள்.

வீர: — "இரஞ்சிதம்! நான் அவ்வாறு சொன்னது காரணமில்லாமலன்று. இத்திரண்ட செல்வம் உனக்கென்றே தேடிவைக்கப்பட்டிருக்கிறதென்பது தேற்றம். இத் தனமிருந்த இடத்திற்கு வழிகாட்டியான கடிதம் எனக்குக் கிடைத்தும் அதன் விஷயத்தை நான் அறிந்தும் இந்த இடத்தைக் கண்டுகொள்ள என்னால் முடியாமற்போனதும், நீ இங்கு வந்தவிதமும் இந்நிலவறையைக் கண்டுபிடித்ததும் கடைசியாக இத்தனமிருந்தவிடத்தைஉன் புத்திநுட்பத்தால்நீயே அறிந்ததும் ஆகிய இவைகளெல்லாம் இவ் ஐசுவரியத்தை யனுபவிப்பதற்குச் சர்வ சுதந்தரமுடையவள் நீயே என்பது கருணைக்கடலான ஸ்ரீ மீனாம்பிகையின் திருவுள்ள மென்று கரதலாமலகம்போல் தெளிவாக விளக்குகின்றன வல்லவா? என்று சொன்னான்.

இரஞ்: — தாம் கூறும் நியாயமும் மறுக்கக் கூடியதன்று எனினும் எனக்கு இதில் எவ்வளவு சுதந்தர மிருக்கிறதாகத் தாம் நினைக்கிறீரோ அவ்வளவு பாத்தியதை தங்களுக்கு முண்டென்பது என் அபிப்பிராயம். இதைப்பற்றி வீணாகத் தர்க்கிப்பதை விட்டு இப்பெட்டியை நம்மிருப்பிடத்திற்கு எவ்விதங் கொண்டுபோய்ச் சேர்ப்பதென்பதைப்பற்றிக் கவனிப்போம்,'' என்று சொன்னாள்.

பெட்டியை இருவருமாகக் குகைவரை தூக்கிச்செல்ல முடியாமலிருந்ததினால் அதிலுள்ள வஸ்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுபோய்ச் சேர்த்துக் கடைசியாகப் பெட்டியையும் தூக்கிச் சென்றார்கள். வீரபத்ரபிள்ளை திரும்பத் திரும்பத் தனத்தின் பெருக்கைப் பார்த்துப் பார்த்துப் பரமானந்தமடைந்தான்.

நம் கதாநாயகி இத்தீவிற்கு வந்து சரியாகப் பதினைந்து நாட்கள் கழிந்தன. தேகசுகமும் முன்னிருந்த நிலைமைக்கு வந்தது. நாள் செல்லச் செல்ல இரஞ்சிதத்திற்குத் தன் காதலனைப் பார்க்கவேண்டு மென்னும் அவா அதிகரித்துக் கொண்டே வந்தது. வீரபத்ர பிள்ளைக்கும் இப்பொழுது மதுரைக்கு வரவேண்டு மென்னும் பிரியம் மிகுதியாகிவிட்டது. ஆதலின் அன்று அத்தீவை விட்டுப் புறப்படுவதென்று தீர்மானித்து விட்டார்கள். நிலவறையி லிருந்த தனத்தை எவ்வாறு குகைக்குச் சேர்த்தார்களோ அவ்வாறே அதை, நம் கதாநாயகி வந்த கப்பலில் கொண்டுவந்து வைத்தார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய எல்லாம் முன்னதாகவே சித்தஞ் செய்து வைக்கப்பட்டிருந்ததால் அன்றுகாலை கப்பல் அத்தீவை விட்டுப் புறப்பட்டது. நம்

கதாநாயகியே மாலுமியாகவிருந்து கப்பலை நடத்தினள்.

பதின்மூன்றும் அத்தியாயம்

இரத்தினம் மதனகோபனின் காவலிலிருந்து தப்பித்து ஓடல்

முன் அத்தியாயத்திற் குறிப்பிட்ட சம்பவங்கள் நிகழ்ந்த சமயம் மதுரையில் நடந்த சில விஷயங்களை இங்கு வரைகிறோம்.

ஒருநாட்காலை மதன கோபனுடைய வீட்டில் அவனும் அவன்றன் ஆப்த மித்திரனை கோபால பிள்ளையும் அடியில் வருமாறு சம்பாஷித்துக்கொண் டிருந்தனர்.

மதன:—ஆம். தாம் சொல்வது முற்றும் நிஜமேயாம். அச்சிறுக்கியின் சாமர்த்தியத்தையும், சாதுர்ய வசனங்களையும், அவள் என்னை ஏமாற்றின விதத்தையும் எண்ணிப்பார்க்கும்பொழுது எனக்கே ஆச்சரியத்தை யுண்டாக்குகிறது. உண்மையில் அவள் என்மீது விருப்பங் கொண்டாளென்று நம்பி மோசம் போனேன். தாம் எடுத்துக்கூறும் வரைக்கும் அவளுடைய தந்திரச் செயல்கள் என் மனதிற்குப்படவில்லை. நான் அவள்மீது வைத்திருந்த காவலின் திட்பம் குறைவதற்கு வேண்டியும், அவளுடைய எண்ணம் ஈடேறுவதற்காகவுந்தான் அவ்வாறு நயவஞ்சகமாக வார்த்தையாடினளென்பதை உணராமற் போனேன். அவளுடைய உபதேச மொழிகளின் ஆற்றலையும் அவைகள் எவ்வாறு என் மனதைத் தாக்கிப் பேதமுறச் செய்தன வென்பதையும் நினைக்கும்பொழுது விந்தையினும் விந்தையாகத் தோன்றுகிறது. ஒரு பெண்ணின் உட்கருத்தை யறிந்து கொள்ள முடியாத முட்டாளானேன்.

கோபா:—ஆயிரக் கணக்கான ஆடவர் மாதரின் மதுர மொழியில் மயக்குற்று அவர்களிட்ட வேலைகளை மனமகிழ்வுடன் செய்யத்தயாராயிருக்கும்பொழுது தாமும் அம்மாது நல்லாளின் வார்த்தையால் மாறுபட்டது ஆச்சரியமன்று.

மதன:—"இவள் எங்கு • மறைந்துகொண்டிருக்கிறளென்பதுதானே பெரிய விடுகதையாயிருக்கிறது. பலவிடங்களிலும் தேடித்திரிந்து பார்த்தாய் விட்டது. எங்குங் காணப்பட்டாளில்லை. அவளைப் பார்த்ததாகச் சொல்லக்கூடியவர்களு மொருவருமில்லை. இரண்டுவிதமான சந்தேகங்க ளெனக்குண்டாகின்றன. கள்வர் கையி லகப்பட்டாளோ என்பதொன்று. அல்லது விலங்கின் வாய்க்கிரையானளோ என்பது மற்றென்று. இவ்விரண்டில் ஏதேனுமொன்று நேர்ந்திருக்கு மென்றே எனக்குத் தோன்றுகிறது.

கோபா:—இரஞ்சிதத்தின் சாமர்த்தியத்தைக் கருதுமிடத்து அவ்வாறு நினைப்பதற்கில்லை. உம்மை ஏமாற்றி வழி நடந்தவள் திருடனிடம் சிக்குவாளென்பது வீணே. தம்முடைய இரண்டாவது சந்தேகத்திற்குக் காரணமொன்றையுங் காணேம். மேலும், இம்மதுரையிலேயே எங்கேனுமோரிடத்தில் இரகசியமாக இருந்து வருவாளாயின் நாம் அதை எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்! சாத்தியமன்று. அவள் ஏதோ ஒரு காரணத்தை யுத்தேசித்து இவ்வூரிலேயே எவ்விடத்திலோ அந்தரங்கமாக வசித்து வருகிறளென்பது என் நம்பிக்கை. அக்காரணத்தை யறிவதற்கும் அதிகதூரஞ் செல்ல வேண்டியதில்லை. அவளுக்கு இப்பொழுது இரத்தினத்தின் இருப்பிடத்தை யறியவேண்டியது அத்தியாவசியகமா யிருக்கிறது.

மதன:—ஏன் அவ்வாறு நினைக்கிறீர்?

கோபா:—அவளுடைய கூரிய புத்தியின் திறத்தால் நாம்தான் அவனை எங்கேயோ அடைத்து வைத்திருக்கிறோ மென்பதையறிந்து கொண்டிருப்பாள். அவன்மீது அவளுக்கிருக்கும் காதலை மறப்பதற்கில்லை. அது முற்றுப் பெற அவனிருக்கு மிடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். இதை வெளிப்படையாகச் செய்வதற்குத் தாம் இடையூறுயிருக்கிறீர். ஆதலின் இரகசியத்தில் முயற்சி செய்தாற் கைகூடு மென்பது அவளுடைய எண்ணமாக விருக்கலாம்.

மதன:—அவ்வாறு அவள் கண்டுபிடித்து வந்தாலும் என் கையிற் சிக்கவேண்டியவள் தானே.

கோபா:—அவ்விதம் நினைப்பதற்கில்லை. இனி அவள் தானக தனியாக ஒன்றையுஞ் செய்ய மாட்டாளென்பதுதிண்ணம். போலீசாரின் உதவியைக் கொண்டே ஏதேனுஞ் செய்வாளென்றே நினைக்கிறேன். இரத்தினத்தின் இடத்தை யறிந்து இன்ஸ்பெக்டர் சுந்தரம் பிள்ளைக்குத் தெரிவிப்பாளாயின் அவள் வெற்றி பெறுவதில் யாதும் தடையில்லை. இப்பொழுது நாம் அவளை

முந்தவேண்டும். அதாவது அவளுடைய நோக்கத்தை இங்கிருந்து மாற்றி வேறுவழியிற் செல்லும்படி செய்யவேண்டும். இரத்தினம் பயித்தியம் பிடித்துத் திரிச்சிராப்பள்ளியில் திரிகிறான் என்னும் வதந்தியை உண்டாக்கிவிட்டால் அவளுடைய பார்வை இவ்விடமிருந்து விலகிவிடுமென்று நினைக்கிறேன்.

மதன:—ஆம். பலவிதத்திலும் அது நல்ல யோசனை யென்றுதான் தோன்றுகிறது. எதற்கும் நாம் வெளியிற் செல்லமுடியாமலன்றோ இருக்கிறது. இப்பொழும் சுப்பனுக்கு இப்பொழுது ஏன் வியாதி வரவேண்டும். நம்பிக்கையான ஆள்கிடைப்பது மிகவும் துர்லபமாயிருக்கிறது.

கோபா:—அதோ பாரும். யாரோ வொரு கிழவன், வீடு வீடாக நுழைந்து வருகிறான். அவன் எவரையேனும் தேடி வருகிறானோ: அல்லது எங்கேனும் வேலைக் கிடைக்குமா என்று பார்க்கிறானோ; அன்றி, பிச்சைக்காரனோ; எதுவும் தெரியவில்லை. இரந்துண்போனாகத் தோன்றவில்லை. இந்த வூரானாகவும் காணப்படவில்லை. அவன் யாவரையேனும் பார்க்க விருப்ப முடையவனெனின் வீடுகள்தோறுஞ் செல்லவேண்டிய அவசியமில்லை. நம் வீட்டை நோக்கி வருகிறான் போலிருக்கிறது. நல்ல யோக்கியன் போலவே காணப்படுகிறான்.

அப்பொழுது, கழுத்திலிருந்து பாதம்வரை தொங்கும் நீண்ட அங்கியையும், வெள்ளைத் தலைப்பாகையையும், நரைத்த தாடியும் மூசையையுமுடைய ஒரு வயோதிகன் அங்கு வந்து இவர்கள்முன் நின்று நமஸ்கரித்து "ஐயா! நான் ஓரேழைப் பரதேசி. என் ஜனனபூமி தஞ்சாவூர். என் சிறுவயதிலேயே என் பெற்றோரை இழந்து ஒரு புண்ணியவானால் வளர்க்கப்பட்டேன். அவர் என்னிடத்தில் அதிக அன்பாகவும் நேசமாகவுமிருந்தார். எனக்குத் தக்கவயது வந்தபொழுது விவாகமுஞ் செய்துவைத்தார். என் துர்ப்பாக்கியத்தின் பயனாக நான் அதற்கு அதிக நாட்கள் கொடுத்து வைக்கவில்லை. மறு கலியாணஞ் செய்துகொள்ள என் எஜமானர் என்னை வற்புறுத்தினா ரெனினும் எனக்குப் பிரியமில்லாததால் மறுத்துவிட்டேன் அதுமுதல் இதுவரை அவருக்குப் பிள்ளை மாதிரியாயிருந்து அவரிட்ட வேலையை அவரிஷ்டம்போற் செய்து அவருடைய அன்பிற்குப் பாத்திரவானா யிருந்தேன். அத்தகைய உத்தமர் சென்றமாதம் திடீரென்று மரணமடையவும் அவருக்குப் புத்திர சந்தானமில்லாததால் அவருடைய தம்பிக்கு அவர் சொத்து முழுவதுஞ் சேரவும் நான் நாதனற்றவனாயிருக்கிறேன். என் வயதை யோசித்து, வேலைசெய்யச் சக்தியிராதென்று கருதி என்னை எவரும் தங்களுக்கு ஆளாகச் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. இந்நகரிலாயினும் ஏதேனும் ஜீவனோபாயத்திற்கு வழி கிடைக்குமோ என்ற உத்தேசத்துடன் இங்கு வந்து இவ்வெட்டு நாட்களாகப் பலரிடமுஞ் சென்று பார்த்தேன். எவரும் மனமிறங்கவில்லை. தங்களிடம் வந்திருக்கிறேன். சமுகத்தின் விருப்பம் எவ்விதமோ?"

கோபா:—பேஷ். கதை நல்ல மாதிரியாக விருக்கிறது. இதை எங்கிருந்து கற்றுக் கொண்டாயோ தெரியவில்லை. தஞ்சாவூர் கையை மதுரையில் காட்டிப் பார்க்கலாமென்று வந்திருக்கிறாய் போலும். சிறுவயது முதல் வளர்ந்த வீட்டிலிருந்து துறத்தப்படுவதென்றால் ஏதோ அடாத காரியத்தைச் செய்திருக்கிறா யென்பது நன்றாக விளங்குகிறது. இதைக்கேட்ட எவர்தான் உன்னை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளுவார்கள். ஏதோ திருட்டுத்தனஞ் செய்துவிட்டு ஓடிவந்திருக்கிறாயென்றே நினைக்கிறேன். உண்மையைச் சொல். இல்லாவிடில் போலீசார் வசம் உன்னை ஒப்புவித்துவிடுவேன்.

வயோதிகன்:—ஐயா! போலீசாரைப் பற்றி எனக்குப் பயமேயில்லை. ஏனெனில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரம்பிள்ளைக்கு என் வரலாறு நன்றாகத் தெரியும். எவ்விதமெனில் இவ்வூருக்கு வந்தவுடன் முதலில் அவரைத்தான் பார்த்தேன். அவரிடம் என் சங்கதி முழுமையையுஞ் சொன்னேன். எனக்கு உதவி செய்ய முடியாமலிருப்பதைப்பற்றி மிகவும் விசனப்பட்டுச் சில விடங்களிற்போய்க் கேட்கும்படி குறிப்பித்து எனக்கு அன்புடன் ஆகாரமளித்து அனுப்பினர். அவ்வாறு அனுப்பும்பொழுது உன்வரலாற்றை உள்ளபடி யுரைத்தால் எவரும் உன்மீது சந்தேகங் கொள்வார்கள். ஆதலின் மறைத்துக் கூறுவது நலம் என்று புத்திமதிகூறினார். என்னாலியன்றவரை முயன்று பார்த்தும் உண்மையான சங்கதி வெளிவருகிறதே யன்றி மறைத்துப்பேச என்னால் முடியவில்லை. அவர் சொன்னமாதிரி அநேகர் என்மீது சந்தேகங் கொண்டனர். தாமும் அவ்வாறே சந்தேகிக்கின்

தீர். உண்மைக்கும் இவ்வுலகத்திற்கும் அதிக தூரம் போலிருக்கிறது. இதுவரையும் சத்தியவானென்றும், நம்பிக்கையுடையவனென்றும், எஜமானத் துரோகியல்லவென்றும் பெயரெடுத்து வந்தேன். இனி மிகுதியாயிருக்கும் சொற்பநாட்களைப் பொய்சொல்லியா கழிக்கவேண்டும். அதை விட்டப் பட்டினி கிடந்து இறந்து விடுவதுநலம்.

மதன:—உன் எஜமானனுடைய தம்பி உன்னை எதற்காகத் துறத்திவிட்டான்!

வயோ:—இது புத்திசாலித் தனமான கேள்வி. இதை எவரும் கேட்டறிந்து கொள்ளாமல் என்னை வெறுத்தார்கள். அவருடைய சொந்த ஊர் சென்னையானதால் என் எஜமானருடைய நிலபலங்களை யெல்லாம் விற்றுப் பணமாக்கிக்கொண்டு சென்றுவிட்டார்.

மதன:—அண்ணன் தஞ்சாவூரிலிருக்கும் பொழுது தம்பி சென்னையிலேன் வசிக்கிறான்?

வயோ:—தம்பி யென்றால் ஒன்று விட்ட தம்பி. என் எஜமானருடைய சொத்துக்கு அவர் ஒருவர்தான் வார்சுதாரர்.

கோபா:—பெரியவரே! நீ சொல்வதெல்லாம் உண்மையென்றே வைத்துக்கொள்வோம். உன் உண்மையானது ஒவ்வோர் சமயத்தில் உன் எஜமானனுக்கே கெடுதியாக முடிந்திருக்குமோ என்று சந்தேகிக்கிறேன். எவ்விதமெனில் உன் எஜமானன் ஏதேனும் ஒரு கெட்டகாரியத்தை உனக்கறியச் செய்திருந்து வேறெவரேனும் அதைப்பற்றி உன்னைக் கேட்டால் நீ அதைமறக்காமல் சொல்லக்கூடியவன்தானே?''

வயோ:—என் எஜமான் அவ்விதமொன்றுஞ் செய்ததில்லை. ஒரு சமயம் அவ்வாறு நேரிட்டிருப்பினும் அதை வெளியிற் சொல்லி அவருக்குக் கெடுதலுண்டாக்கி எஜமானத்துரோகி யாவேனே! ஒருகாலுமில்லை. அவர் கொலையே செய்திருப்பினும் நான் அதை மறைத்திருப்பேனேயன்றி அவரைக் காட்டிக் கொடுத்திருக்க மாட்டேன். எஜமானனுக்குத் துரோகஞ் செய்யக் கனவிலும் கருதமாட்டேன். எஜமான் விஷயமாக மறைத்து வார்த்தையாடுவது பொய்யென்னும் குற்றத்தின் பாலும்படாது. ஒருசமயம் நான் சொன்னது தங்களுக்குப்பொருத்தமாகத்தோன்றாததாக விருக்கலாம். எனினும் இதுதான் என்னுடைய சித்தாந்தம்.

மதன:—''உன் எஜமானர் உனக்கு எவ்வளவு சம்பளங் கொடுத்துக்கொண்டிருந்தார்?

வயோ:—சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தால் இப்பொழுது நான் சாப்பாட்டிற்கு அலைய வேண்டிய அவசியமே யிருந்திருக்காது. அவரிட்ட கஞ்சியைக் குடித்துக்கொண்டிருந்தேன். எந்தப் பெண்டு பிள்ளைக்கு நான் தேடிவைக்க வேண்டும். கட்டையிருக்கும்வரை வயிற்றைக் கழுவ வேண்டுமென்பதுதான் என் கவலை. வேறொன்றும் எனக்கு வேண்டியதில்லை.

மதன:—அவ்வித மெனில் நம் வீட்டிலேயே இருந்துவிடு. நீ வேறெங்குஞ் செல்ல வேண்டியதில்லை.

வயோ:—வேடிக்கை செய்கிறீர்கள் போலிருக்கிறது.

மதன:—இல்லையில்லை உண்மையாகத்தான். நம்முடைய ஆள் மிகவும் நலியாக விருப்பதால் அவன் சௌக்கியமாகும் வரை நீ இங்கு இருக்கலாம். உனக்கு இங்கு வேலையொன்றுங் கிடையாது. என் தம்பி யொருவனிருக்கிறான். அவனுக்குக் கொஞ்சம். பைத்தியம். வேண்டும் பொழுது அவனுக்கு ஆகாரங் கொடுத்துக் கொண்டு தெருத்திண்ணையில் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். உன்னுடைய இஷ்டமென்ன?

வயோ:—நிலையில்லாத வாழ்வுபோ லிருக்கிறதே!

மதன:—ஆம். அவன் நம் குடும்பத்தில் நெடுநாளாக விருக்கிறான். அவன் வந்தவுடன் நீ செல்ல வேண்டியதுதான்.

வயோ:—சரி சந்தோஷம். தாங்களிட்ட கட்டளையைச் செய்யத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

பிறகு சற்றுநேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்து மூவரும் வீட்டிற்குள் சென்றார்கள். அன்று முதல் சுப்பனுடைய ஸ்தானத்தில் வயோதிகன் அமர்ந்தான். மதனகோபன் சொன்னபிரகாரம், பைத்தியம் பிடித்துச் சாந்த சொரூபியாயிருந்த இரத்தினத்திற்கு ஆகாரங் கொடுப்பதும் அவனுக்குக் காவலாயிருப்பதுமே யன்றி வேறொரு வேலையும் நம் வயோதிகனுக்கில்லை. இவ்வாறு எட்டு நாட்கள் கடந்தன.

எட்டாம்நாட் காலை கிழவன் மிக்க விசனகரமான முகத்துடன் தெருத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது மதனகோபனும் கோபால பிள்ளையும் அங்குவர, கிழவன் அவர்களைக் கண்டதும் கண்ணீர் விட்டுக் கொண்டு எழுந்து நின்று ''ஐயா! நான் என்ன

வென்று தங்களுக்குச் சொல்வேன். நேற்றிரவு தாங்கள் சென்றவுடன் தங்கள் தம்பிக்குச் சாப்பாடு கொடுத்தபின் நான் கூடத்திலுட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அந்தோ! தங்கள் தம்பி திடீரென்று ஆவேசங் கொண்டவர் போல் எழுந்து குதித்துக் கூச்சலிட்டு அங்குக் கிடந்த கொம்பொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு என் முன்வந்து 'பேசினாற் கொன்று விடுவேன். நகர்ந்தால் மண்டையை யுடைத்து விடுவேன். என் தந்தை வந்து கூப்பிடுகிறார். எனக்காக இரஞ்சிதம் வண்டியிற் காத்துக் கொண்டிருக்கிறாள். பணப்புதையலைத் தோண்டி யெடுக்கப் போகிறேன். உனக்குக் கொஞ்சங் கூடத் தரமாட்டேன். சரக்குகள் வந்து நிற்கின்றன. இன்றைக்கு நல்ல நாடகமாம். வாயைத் திறக்காதே'' என்று சொல்லிக் கலகலவென நகைத்துக்கொண்டே வெளியில் ஓடினார். நான் சற்று பீதியால் பீடிக்கப்பட்டே னெனினும் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு தெருக் கதவைச் சாத்திவிட்டு அவரைப் பின் தொடர்ந்து கொஞ்சதூரம் ஓடினேன். தெருவின் திருப்பத்திற்போய் பார்த்தபொழுது அவரைக் காணவில்லை. மனவருத்தத்துடன் திரும்பிவந்தேன். இரவு முழுவதும் நித்திரையில்லாமற் கிடந்தேன். தாங்கள் சென்றவிடந் தெரிந்திருந்தால் அங்கு வந்திருப்பேன். போலீசாருக்குத் தெரிவித்தால் நலம் என நினைக்கிறேன். நான் சென்று எவரையேனு மழைத்து வரட்டுமா? அவர் ஓடினதைக் கவனிக்கும்போது எனக்கு மிகவும் பயமாக விருக்கிறது. ஏதேனும் ஆபத்து நேரிட்டிருக்குமென்று சந்தேகிக்கிறேன் என வுரைத்தான்.

மதன:—"சரி. இருக்கட்டும். உன்மீது குறைகூறுவதற்கில்லை நாங்கள் சென்று தேடி வருகிறோம். ஒரு சமயம் அவன் திரும்பி வந்தால் அறையிலிட்டு அடைத்துவை." என்று சொல்லி விட்டுத் தன் நண்பனுடன் வெளியிற் சென்றான்.

கோபா:—நான் சொன்னதைக் கவனிக்காமல் அவனுக்கிட்டிருந்த விலங்கை யெடுத்து விட்டீர். விபரீதமாக முடிந்தது. இரஞ்சிதத்தைச் சந்திப்பானாயின் நம் காரியம் வியர்த்தமாக முடியும். போலீசார் கண்களுக்குத் தென்படுவானாயின் நாம் விதைத்துள்ள வதந்தி நிலைபெறும். ஒரு சமயம் நமக்குக் கெடுதலாக முடிதலுங் கூடும். எதற்கும் நாலா பக்கங்களிலும் தேடிப் பார்ப்பது நலம்.

மதன:—நமக்கு எவ்விதங் கெடுதலுண்டாகு மென்கிறீர்?

கோபா:—அவனுக்குப் பைத்தியம் நீங்கி இவ்வாறு செய்திருந்தால் நமக்குக் கெடுதல் தானே. அவன் பைத்தியம்பிடித் தலைந்துகொண்டிருக்கிறான் என்று நாம் பரவச்செய்த சொல் பொய்யென ஏற்பட்டு உண்மை வெளியாகுமானால் நமக்குக் கெடுதலல்லவா?

மதன:—இருப்பினும் கிழவன் வாக்கால் அவ்வாறு சந்தேகிப்பதற்கில்லை. பயித்தியம் அதிகரித்தே ஓடிவிட்டிருப்பான். அது யார்? மாணிக்கம் பிள்ளை! ஏன் இவ்வளவு விரைவாக நம்மைப் பார்த்துக்கொண்டு வருகிறார். ஏதோ சமாசாரங் கொண்டுவருகிறாரென்றே நினைக்கிறேன்.

அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம்பிள்ளை ஆத்திரத்துடன் "இரத்தினம் எங்கே? வீட்டிலிருக்கிறானா? சீக்கிரஞ் சொல்லுங்கள்'' என வினவினான்.

மதன:—இல்லை. நேற்றிரவு அவன் எங்கேயோ ஓடிவிட்டான். தாம் அவனைப் பார்த்தீரோ!

மாணிக்கம் பிள்ளை:—''நான் சந்தேகித்தது சரியாக முடிந்தது. இன்று தற்செயலாக மாரியம்மன் தெப்பக்குளத்தண்டை சென்றேன். பாதையில் நான்கு ஐந்து பெயர்கள் ஏதோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு நானும் அங்குச் சென்று பார்த்தபொழுது திடுக்குற்றேன். வண்டிச்சக்கர மேறினதால் கால்கள் நசுக்குண்டும், குதிரையின் கால்களால் மிதிக்கப்பட்டதால் முகமெல்லாங் காயப்பட்டும் ஒருவன் இறந்து கிடக்கிறான். அலங்கோலமாகக் கிடக்கும் பிரேதத்தைப் பார்த்தவுடன் இரத்தினந்தானோ என்ற சந்தேகமுண்டாயிற்று. உடனே அங்கிருந்து ஓடோடியும் வந்தேன். நீங்கள் சொல்வதிலிருந்து அங்கு இறந்து கிடப்பவன் இரத்தினமே என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. போலீஸ்காரர் சென்று கொண்டிருக்கிறார்கள். சுந்தரம் பிள்ளையையும் வழியிற் சந்தித்தேன். ஆம். இவன் வீட்டிலிருந்து எவ்வாறு வெளிக்கிளம்பினான்?

மதன:—தன் புதிய வேலைக்காரன் சொன்னவற்றை யுரைத்து "இப்பொழுது நாம் அங்

குச் செல்வதா? அல்லது ஒன்றுமறியாதவர் போற் சும்மாவிருந்து விடுவதா?'' எனக் கேட்டான்.

கோபா:—அங்குச் செல்வதுதான் உசிதம். இறந்தவன் இரத்தினந்தான் என்பதை எவரும் அறியாமலிருக்கக்கூடும். நான் சென்று அதை நிரூபித்து அவன் பைத்தியம் பிடித்துத் துர்மரண மடைந்தான் என்பதை ஊரார் அறியும்படி செய்துவிட்டால் இரஞ்சிதம் தங்களை எளிதில் விவாகஞ் செய்துகொள்வாள்.

மதன:—ஆம். தாங்கள் சொல்வது நிஜந்தான். அவன் இறந்தான் என்பதை நிலைபெறச் செய்யவேண்டியது அவசியமே.

பிறகு மூவரும் வண்டியிலேறிக்கொண்டு மாரியம்மன் தெப்பக்குளத்தை நாடிச் சென்றார்கள். அங்கு அநேகர் அக் கோரமான காட்சியைப் பார்க்க வந்திருந்தனர். சில போலீஸ்காரரும் இன்ஸ்பெக்டர் சுந்தரம்பிள்ளையும் அங்கிருந்தனர். இம்மூவரும் வண்டியை விட்டிறங்கிச்சென்று பார்த்தபொழுது மாணிக்கம்பிள்ளையின் வாக்கு உண்மையாயிருக்கக் கண்டார்கள். "கடைசியாக உனக்கு இத்தகைய துர்மரணமா ஏற்பட்டது'' என்று மதனகோபன் சொல்லித் துக்கிப்பவன்போற் காட்டினன்.

இ. சுந்தரம் பிள்ளை:—மதனகோபா! இவ்வாசாமி உனக்குத் தெரிந்தவனா? உன் சகாக்களில் ஒருவனா இவன்? என்று கேட்டார்.

மதன:—என்ன இவ்விதம் கேட்கிறீர்கள்! என் சகோதரன் இரத்தினத்தின் பிரேதமென்பது தங்களுக்குத் தெரியாமற் போனது ஆச்சரியமாக விருக்கிறது.

இ. சுந்த:—என்ன! இரத்தினமா! மாணிக்கவாசகம்பிள்ளையின் குமாரனா! என்று ஆத்திரத்துடன் கேட்டார்

மதன:—"ஆம் அவனே."

இ. சுந்த:—"ஆகவே அவன் பைத்தியம் பிடித்துத் திரிகிறானென்று நான் கேள்விப்பட்டது கட்டுக்கதையல்ல. இவன் இரத்தினந்தானென்னுஞ் சந்தேகம் நீ சொல்லும்வரை எனக்குண்டாகவில்லை. ஆகா! இவ்வுத்தமமான குடும்பம் இவ்வாறு அழியவேண்டும்? மதனகோபா! இவன் இவ்வாறு கெட்டழிந்ததற்கு நீயேகாரணமென்பதை நான் நன்றாகவறிவேன். ஆனாலும், இத்தகைய ஸ்திதிக்கு வருமென்ற சந்தேகம் சிறிது உண்டாயிருக்குமாயின் முன் சாக்கிரதையாக இருந்திருப்பேன். நீ இவனைத் தீய வழியிற் புகுத்திய விஷயங்கள் எனக்குத் தெரியும். எனினும், இவனே உன் நயவஞ்சகத்தை யுணர்ந்து தன்னைச் சீர்திருத்திக் கொள்வானென்று நம்பியிருந்தேன். கடைசியாக உன் துர்க்குணம் அவனுடைய உயிருக்கே ஹானியை உண்டாக்கிற்று. இவன்போன்ற வாலிபர்களைக் கெடுத்தும், தாசிகளைப் பயமுறுத்தி அவர்களை உன் அடிமைகளாகச் செய்துகொண்டும், துஷ்டர் பலரைச் சிநேகித்துக்கொண்டும் விலைமாதர் வீட்டிற்கு வருவோரை வழிப்பறிசெய்தும், நீ சீவனஞ் செய்து வருகிறாயென்பதை நான் நன்றாக உணர்வேன். நீ எவ்வளவு தந்திரமாக வேலை செய்தாலும் உன் மீது குற்றச்சாட்டை ஏற்படுத்தி அதை நிரூபித்து உன்னைத் தண்டிப்பது எனக்கு ஒரு கடினமான வேலையன்று. இருப்பினும், காலஞ்சென்ற உன் பிதாவின் நற்பெயருக்குப் பங்கம் வரக்கூடாதென்னும் எண்ணத்தால் பொறுத்து வந்தேன். வீரபத்ரபிள்ளையின் குமாரன் சிட்சிக்கப்பட்டு ஜெயிலில் இருக்கிறான் என்னும் வார்த்தை எனக்கே அகௌரவமுண்டாக்குமென்று எண்ணினேன். ஆனால் இனியும் அவ்வாறிருக்க என் மனச்சாட்சி இடந்தராது. ஆதலின் இன்றுமுதல் உன்மீது கொஞ்சம் கண்வைப்பேன். துர்ச்சனர் சகவாசத்தையொழித்து உன் துர்நடவடிக்கைகளை விட்டு நீ சன்மார்க்கத்தில் நடக்கவேண்டும். அல்லது தண்டனைக்குட்பட்டுச் சிறைச்சாலை வாசஞ் செய்யவேண்டும். இவைகளில் ஒன்று உன் பொறுப்பு. மற்றது என் காரியம். இவ்விரண்டில் ஒன்று கண்டிப்பாய் நடந்தேறுமென்பதை உறுதியாய் உன் மனதில் வைத்துக்கொள். உன் தந்தையின் பெயரைக் காப்பது உன் கடமையாகும்.''

மதன:—ஏதோ தங்கள் காதுக்கெட்டின பொய்யான வார்த்தைகளை நிஜமென்று நம்பி இவ்வாறு என்மீது கோபிக்கிறீர்களென்று நினைக்கிறேன்.

இ. சுந்த:—"சீ சீ. வீணாகப்பிதற்றாதே. பகலிற்குப்பின் இரவு வருவது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையாகும் நான் கேள்விப்பட்டவைகள். அவைகளைப் பொய்யென்று கூறிக் குற்றத்தின்மீது குற்றத்தை யேற்றிக் கொள்வதைவிட அதைக் களைந்துவிட வழிதேடுவது சிறந்ததாகும். உன்னிடமிருந்து யாதொரு

விதமான பதிலையும் நான் எதிர்பார்க்கவில்லை. ஆதலின்உடனே இவ்விடத்தைவிட்டு நீ சென்று விடுவது நலம்'' என்று சொல்லி அப்பிரேதத்தைத் தன் சொந்தச் செலவில் அடக்கஞ்செய்து விட்டுத் தன்னிருப்பிடத்திற்குப் போனூர்.

மதனகோபனும் மறுவார்த்தைபாடாமல் தன் நண்பர்களை யழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். நம் வயோதிகன் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லக்கேட்டு ஒருவாறு திருப்தியடைந்தான்.

''இன்ஸ்பெக்டர் வார்த்தையைக்கேட்டு மிகவும் பயந்துவிட்டாப்போலிருக்கிறது'' என்று கோபாலபிள்ளை கேட்டான்.

மதன:—''அவ்வித மொன்றுமில்லை. இவருக்கு நம் சமாசாரம் எவ்விதந்தெரிந்ததென்பது தான் எனக்குப் புலப்படவில்லை.''

கோபா:—''நம்மவர்களில்தான் எவரேனும் அயோக்கியர்கள் தெரிவித்திருப்பார்கள். அல்லது அவரே தன் புத்திக்குத் தோன்றின மாதிரி சொல்லியிருப்பார். அதைப்பற்றி ஏன் யோசிக்க வேண்டும். இவர்மாதிரி பத்து இன்ஸ்பெக்டர்கள் வந்தாலும் நம்மைப் பிடிக்கமுடியாது. இவர்களுக்குப் பயந்து நம் தொழிலையும் நாம் விடப் போகிறதில்லை. ஏன் மாணிக்கம்பிள்ளை? தாம் என்ன சொல்லுகிறீர்?''

மாணி:—''தாம் சொல்வது வாஸ்தவந்தான். இவர் நாம் கேட்கும்பொழுது நமக்கு வேண்டியதை யெல்லாங் கொடுப்பாராயின் நம் தொழிலை விட்டுவிட்டுச் சும்மாவிருக்கலாம்'' என்றான்.

கோபா:—என் மனதிலுள்ளதை நன்றாகச் சொன்னீர். கேட்கும்பொழுதெல்லாம் என்று சொல்லியிருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும். இனி இக்கிழவனை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டியதுதான். நாளை மறுதினம் நம் சுப்பன் வந்துவிடுவான். அவன் முற்றுஞ் சுகமடைந்து விட்டான்.

மதன:—''அப்படியா! மிகவும் சந்தோஷம். இப்பெரியவனை அனுப்பிவிடலாம்'' என்று சொன்னான்.

பதிநான்காம் அத்தியாயம்

இரஞ்சிதமும் இரத்தினமும் சந்தித்தல்

வருஷந்தோறும் மதுரையில் நடைபெறும் சித்திரா பௌர்ணமித் திருவிழாவின் பெருமையையும் சிறப்பையும்பற்றி நம் வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது மிகையாகும். வாசகர் பன்முறை கண்டு களித்திருப்பினும் இவ்வருடமும் நம்முடன் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இன்று ஸ்ரீ மீனாம்பிகையின் திருக்கலியாண மகோத்சவம். இருப்புப்பாதை வண்டி நிற்கும் மேடை, நாற்புறங்களிலிருந்தும் வந்த தனி வண்டிகளினின் றிறங்கின பிரயாணிகள் நிற்பதற்குப் போதிய விசாலமானதாகவில்லை. வண்டியிலிருந்திறங்கினவர்களிற் சத்தங் கொடுத்துவந்தவர் சிலர். கொடாமல் வந்தவர் சிலர். டிக்கட்டுகள் கொடுத்தவர் பலர். கொடுக்க முடியாமல் வந்தவர் பலர். இவ்வாறாக வந்தவர்களில் பலர் நடந்தும் சிலர் வண்டிகளிலேறியும் நகரை நோக்கிச் சென்றனர்.

மங்கம்மாள் சத்திரத்திற்கு எதிரில் நின்று சனத்திரளின் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களில் ஒருவனான கோபாலபிள்ளை, யாரையோ கண்டு திடுக்குற்றுத் தன்னருகிலிருந்த மதனகோபனைத் தட்டி'' அதோ அந்தப் பச்சைவர்ணந் தீட்டின குதிரைவண்டியிற் செல்லும் பெண் யார்?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

மதன:—ஆச்சரியமுற்று ''ஏன், அவள் இரஞ்சிதமே! அதில் யாதொரு சந்தேகமுமில்லை! யாரோ ஒரு கிழவன்கூட உட்கார்ந்து போகிறானே; அவன் யார்?''

கோபா:—''அவன் யாரென்பது எனக்குத் தெரியவில்லை. வண்டி மறைந்துவிட்டது.''

மதன:—''மங்கம்மாளின் புடவையையே இன்னும் கட்டிக்கொண்டிருக்கிறாள். எங்கிருந்து வருகிறாளென்பது தெரியவில்லை. வாரும். எதற்கும் வீட்டிற்குச் சென்று நம் சுப்பனை யனுப்பி விசாரித்துவரச் செய்வோம்.''

பிறகு, இருவரும் அதிவிரைவாகச் சென்று வீடடைந்ததும் சுப்பனையழைத்து ''பக்கத்து வீட்டிற்கு எவரேனும் வண்டியில் வந்து இறங்கினார்களா?'' என்று கேட்டான்.

சுப்பன்:—''கொஞ்சநேரத்திற்கு முன்தான் இரண்டு வண்டிகள் வந்து நின்றன. ஒன்றிலிருந்து ஒரு பெரிய பெட்டியையும் சில சாமான்களையும் எடுத்துக்கொண்டு போனார்கள். மற்ற வண்டியிலிருந்து ஒரு பெரியவரும் முக்காடிட்ட ஒரு பெண்ணும் இறங்கி வீட்டிற்குச் சென்றார்கள்.''

JL 3M24 NO... N20.18.11

மதன:—"அப்பெண் யாவளென்று உனக்குத் தெரிந்ததா?"

சுப்:—"முக்காடிட்டிருந்ததால் எனக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனாலும் இரஞ்சிதத் தம்மாள்போ லிருந்தது."

மதன:—"நீ போய், வந்தவள் இரஞ்சிதந் தானா என்பதையும், அவளுடன் வந்த கிழவன் யாவனென்பதையும் எங்கிருந்து வந்திருக்கிறானென்பதையும் கண்டறிந்துவா" என்று சொல்லி அனுப்பினான்.

சற்று நேரத்திற்குப்பின் இரஞ்சிதத்தின் வீட்டிற்குச் சென்ற சுப்பன் திரும்பிவந்து தன் எஜமானனைப் பார்த்து, இரஞ்சிதத்தம்மாள்தான் வந்திருக்கிறார்கள். என்னைக் கண்டவுடன் சந்தோஷமாக க்ஷேமம் விசாரித்தபின், தனக்குக் கொஞ்சம் வேலையிருப்பதாகவும், தன்னுடன் வந்திருக்கும் அவர் தம் மாமாவுக்குச் சீக்கிரம் சமையல் செய்து போடவேண்டுமென்றும் சாயுங்காலம் வந்தால் சர்வகாசமாகப் பேசலாமென்றுஞ் சொன்னார்கள். வேறொன்றுங் கேட்காமல் திரும்பி வந்துவிட்டேன்."

மதன:—"என்னைப்பற்றி ஏதேனுங் கேட்டாளா?" என்று வினவினான்.

சுப்பன்:—"ஒன்றுங் கேட்கவில்லை. ஆனால் தங்களைச் சத்திரத்தண்டை பார்த்ததாக மட்டும் கூறினார்கள்."

மதன:—"அவ்விதமா? கோபாலபிள்ளை! பார்த்தீரா? நாம் அவளைக் கவனித்ததுபோல் அவளும் நம்மைப் பார்த்திருக்கிறாள். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. அவள் என்னைப்பார்த்தது எனக்கு ஒரு நற்சகுனம்போல் தெரிகிறது. பிறகு இன்னும் ஏதேனும் சொன்னாளோ? அக்கிழவன் யாவனென்பதைக் கவனித்தாயா? அவளுடைய மாமன் என்றுசொன்னாள்? எனக்குத் தெரியாத இவளுக்கு மாமன் யார்" என்று தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

சுப்:—"அப்பெரியவர் நான் சென்ற சமயம் மாடியின் மீதிருந்ததால் நான் அவரைப் பார்க்கவில்லை."

மதன:—"சரி. நீ சென்று உன் வேலையைப் பார்" என்று சொல்லி சுப்பனை அனுப்பிவிட்டு, "இவள் இதுகாறும் எங்குத் தங்கியிருந்திருப்பாள்! இன்று எங்கிருந்து திடீரென்று வந்தாள்! தாம் சந்தேகித்த மாதிரி அவள் இவ்வூரிலிருக்கவில்லை யென்பது மாத்திரம் தெரிகிறது. நானேசென்று நேரில்பார்த்து வரலாமா என்று நினைக்கிறேன். தம்முடைய உத்தேசமெவ்விதம்?"

கோபா:—இப்பொழுது சென்று பார்ப்பது அவ்வளவு உசிதமாக எனக்குத் தோன்றவில்லை. அவள் சாப்பிட்டபின் வேண்டுமானால் போய் வாரும். அப்பொழுது சாவகாசமாகப் பேசலாம். இப்பொழுது போனால் சாப்பாட்டை முன்னிட்டுத் தங்களை உடனே அனுப்பிவிடக்கூடும்."

மதன:—"ஆம் தாம் சொல்வதும் நல்ல போசனைதான். எழுந்திரும்; நாமும் சாப்பிடுவோம்" என்று சொல்லித் தன் சிநேகிதனையழைத்துக்கொண்டு வீட்டிற்குட் சென்றான்.

அன்றுமாலை மதனகோபனின் வீட்டில் கோபாலபிள்ளை, இரஞ்சிதத்தின் வீட்டிற்குச் சென்ற தன் நண்பன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். கடைசியாக மதனகோபனும் முகச்சோர்வுடன் திரும்பிவந் துட்கார்ந்தான்.

கோபா:—"போன காரியம் என்னவாயிற்று! தங்கள் முகவாட்டத்தைக் கவனித்தால் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. விஷயத்தைச் சீக்ரஞ் சொல்லும்."

மதன:—"நான் என்னவென்று சொல்வேன். அவளுடைய அகம்பாவம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. அவளிடமிருந்து ஒரு விஷயத்தையேனும் என்னால் அறிந்து கொள்ளமுடியவில்லை. அவள் சொன்ன விடைகளெல்லாம் ஆச்சரியத்தை விளைக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. நான் அங்குச் சென்றபொழுது மேன்மாடியிலிருந்து கீழிறங்கி வந்தாள். என்னைப் பார்த்தவுடன் 'க்ஷேமந்தானே' என்று கேட்டாள். இவ்வொரு வார்த்தையால் நான் மிகவும் சந்தோஷ மடைந்தவனாய் 'நீ என்னை இவ்வாறு மோசஞ் செய்துவிட்டுப் போகலாமா' என்று கேட்டதற்கு 'நான் செய்தது மோசமன்றென்றாள். பின் என்னவென தமக்கே தெரியும்' என்றாள். 'இதுகாறு மெங்கிருந்தாய்' என்றதற்கு, 'பூலோகத்தில்தானிருந்தேன்' என்றாள். 'உன்னுடன் வந்திருக்கும் கிழ

இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே யேதில ரென்னு மிவ்வூர்.

24384

வன் யார்' என்று கேட்க 'தங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை' என்றாள். 'இரத்தினம் இறந்துவிட்ட சங்கதி தெரியுமா' என்றேன். 'தங்களுக்குத் தெரிந்ததைவிட அதிகமாகவே தெரியும். அதைப்பற்றிச் சந்தோஷமே' என்றாள். 'இப்பொழுது நம் விவாக விஷயத்தைப்பற்றி என்ன சொல்லுகிறாய்' என்று கேட்க, 'முன் சொன்னதைத்தான் திரும்பச் சொல்லவேண்டும். தங்களுடன் உபயோகமற்ற விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. என் மாமாவை யழைத்துக்கொண்டு நான் கோவிலுக்குச் செல்லவேண்டும். தாங்கள் சென்று வரலாம்' என்று சொல்லி மாடிக்குச் சென்று விட்டாள். அவளுடைய கர்வத்தின் பெருக்கைப் பார்த்தீரா. கொஞ்சமேனும் இலட்சியஞ் செய்யமாட்டே னென்கிறாளே. இன்னது செய்வதென்று எனக்கு விளங்குவதாயில்லை. தங்களுடைய அபிப்பிராயமென்ன."

கோபா:—"அவளை வழிகாட்டி யிருந்தும் தாம் அதைத் தெரிந்துகொள்ளாமற் பேசுகின்றீர். அவள் இப்பொழுது கிழவனுடன் கோவிலுக்குப் போகிறாள். ஆலயத்தில் ஏராளமான சனக்கூட்ட மிருக்கிறது. தலைகால் தெரியாமல் ஒருவரை யொருவர் இடித்து விலக்கிக் கொண்டு செல்வார்கள். இக்கூட்டத்தினிடையில் இரஞ்சிதம்" என்று சொல்லி நிறுத்தினான்.

மதன:—எனக்கொன்றும் புலப்படவில்லை. தாங்கள் சொல்வதின் பொருளைக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. வெளிப்படையாகச் சொன்னால்தான் விளங்கும்."

கோபா:—"ஆச்சரியமாகத்தா னிருக்கிறது. கிழவனும் இரஞ்சிதமும் ஆலயத்திற்குட் செல்லும்பொழுது கோபுரவாயிலண்டை இருவரையும் பிரித்து அவளை மூர்ச்சையடையச் செய்து தூக்கி வந்தால் தங்கள் மனோபீஷ்டம் நிறைவேறாதா?"

மதன:—"ஆம். ஆம். இப்பொழுது எனக்கு நன்றாக விளங்குகிறது. இங்கு தூக்கிக்கொண்டு வந்து இன்றிரவே எல்லாக் காரியத்தையும் செய்துவிட வேண்டும். சம்மதத்துடனேனும் அன்றிப் பலவந்தமாகவேனுங் கள்ளத்தாலியைக் கட்டிக் காரியத்தை முடிக்கவேண்டும். நமது கருப்பண்ணனையும் மாயாண்டியையும் அனுப்பினாற் போதுமானது. அவள் புறப்படுவதற்குமுன் நாம் எல்லாம் தயார் செய்யவேண்டும். எழுந்திரும் போவோம்" என்று சொல்லித் தன் சிநேகனை யழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

மாலை சுமார் ஆறரை மணிக்கு மதனகோபனும் கோபால பிள்ளையும் மற்றுமிருவரும் ஸ்ரீ மீனாம்பிகையின் திருவாலயத்திற்குக் கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டு கோவிலுக்கு வரும் சனங்களைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். இவர்களுக்குச் சற்று விலகினாற்போல் இவர்கள் புறம் தன் முதுகைத் திருப்பிக்கொண்டு நாகரிக உடை தரித்த ஒரு வாலிபன் இவர்களைக் கவனியாமல் சனங்கள்மீது தன் நோக்கத்தைச் செலுத்துபவன்போல் தோன்றினும் இவர்களுடைய வார்த்தை ஒவ்வொன்றையும் அதியூக்கமாய்க் கவனித்தவண்ணமாய் நின்றிருந்தான். மதனகோபன் வகையராக்களுக்கும் அவன் தங்கள்மீது நோக்கம் வைத்திருக்கிறானென்ற சந்தேக முண்டாகவில்லை.

அச்சமயம் மதனகோபன் தன்னருகில் நின்றிருந்த ஒருவனைப் பார்த்து "கருப்பண்ணா! இரஞ்சிதத்தை நீ நன்றாகப் பார்த்திருக்கிறாயாதலின் நான் அவளைப்பற்றி உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. அதோ மாயாண்டியும் வருகிறான். ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டும். அவளும் கிழவனும் வருவார்கள். கூட்டத்தில் நெக்கித்தள்ளிக் கிழவனைப் பிரித்து உன் கைக்குட்டையை அவளுடைய மூக்கண்டை வைத்தால் மூர்ச்சையாவாள். சனக்கூட்டத்தில் மூர்ச்சையாகக் கூடியவர்கள் அநேகர். ஆதலின் சந்தேகிக்க இடமிராது. உன் தங்கையென்று சொல்லித் தூக்கிவர வேண்டியதுதான். வெளியில் வண்டி தயாராகக் காத்துக்கொண்டிருக்கும். நேராக நம் வீட்டிற்கு ஓட்டிக்கொண்டு வர வேண்டியது பத்திரம்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டுக் கோபால பிள்ளையைப் பார்த்து, "அவர்கள் வரும் நேரமாகிவிட்டது. நாமிங்கிருப்பதைப் பார்த்தால் அவள் சந்தேகிக்கக்கூடும். ஆதலின் நாம் வீட்டிற்குச் செல்வோம்" என்றுரைத்து மற்றொருவனை மாணிக்கம் பிள்ளையை நோக்கி "தாம் வண்டியண்டை சென்றிருக்க வேண்டியது. சந்தடி செய்யாமல் காரியத்தை முடிக்கவேண்டும்," என்று மெதுவாக உத்தரவளித்துவிட்டுத் தன் நண்பனை யழைத்துக்கொண்டு சென்றான்.

உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ ரேதில ரென்னு மிவ்வூர்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

ஸ்ரீ கிருஷ்ணவதாரம்

SRI KRISHNAVATHARAM

பூமியில் அஸுராம்சமாய்ப் பிறந்துள்ள கம்ஸன் முதலானோரின் கொடுங்கோன்மை அதிகரித்து, தர்மம் குலைந்து, ஸாது ஜனங்கள் வருந்தித் தவிக்கும்படி நேரிட்டக்கால், ஹரியானவர், துவாபரயுக முடிவில் ஸ்ரீகிருஷ்ணனாய் அவதரித்து, துஷ்டர்களை அழித்துப் பூபாரத்தை நிவர்த்தி செய்துவைத்தார். ஸ்ரீ ராமாவதாரத்தில், பகவான் மனுஷ்யன்போல் நடித்து, நாம் அனுஷ்டிக்க வேண்டிய சாமான்ய விசேஷ தர்மங்களைக் காட்டியுள்ளார். ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில், பகவானே தேவகிக்குக் கூறியபடி, மானுஷ பாவமும், பரம புருஷத்தன்மையும் கலந்து காட்டப்பட்டிருக்கின்றன. திருமாலின் ஸௌலப்யாதி கல்யாண குணங்கள் கண்ணனது சரித்திரத்தில் ஆங்காங்கே விளங்குகின்றன. பகவானது மாயையால் மோகமடைந்து, அவரது நிஜஸ்வரூபம் அறியாத துரியோதனாதி மூடர்கள் அவரை அவமதித்து நாசமடைந்ததும்கவனிக்கத் தக்கது. கோகுலத்திலுள்ள இடையர்கள், கோபிகைகளும், பாண்டவாதிகளும் கண்ணபிரானிடம் அளவற்ற ஸ்நேகம் பாராட்டி, பக்திபரவசர்களாய்ப் பஜித்து நற்கதி யடைந்தனர். இதனால், பகவான் 'பக்தவத்ஸலன்'; 'எவ்வளவு பெருமானாயினும், அடியாருக்கு அடியானாய்த் தொண்டு செய்யும் சுலபத் தன்மையுடையவன்' என்பது நன்கு விளங்கும். இந்த அவதாரத்தின் மற்றைய நற்போதங்களையும் ஆங்காங்கே கண்டு கொள்ளலாம்.

யமுனா நதியின் வலது கரையில் மதுராபுரி (Modern Mutra) என்னுமோர் பூர்விக நகரமுண்டு. பலவகைச் சிறப்புகளும் பொருந்திய அம்மாநகரில் உக்கிரசேனன் எனும் அரசன் போஜ குலத் தலைவனாய் செங்கோல் செலுத்தி வந்தான். அவனது புத்திரர் பதின்மருள், மூத்தவனான கம்ஸன் மிக்க பலமும், தீய ஒழுக்கமும் உள்ளவன்; அஸுராம்சமாய்ப் பிறந்தவன்; தன்போன்ற, துஷ்டர்களான அகன் முஷ்டிகன், அரிஷ்டன், பாணன், நரகன், ஜராஸந்தன் முதலானோருடைய ஸகாய மடைந்து, அதர்ம வழியில் நடந்து, ஸாதுக்களை வருத்திவந்தான். உக்கிரசேனனது தம்பியான தேவகனது புத்திரிகளுள், தேவகி எனும் அருமைப் புதல்வி உக்கிரசேனனால் வெகு செல்வமாய் வளர்க்கப் பட்டுவந்தாள்.

பூர்வம் மதுரையில் அரசுபுரிந்துவந்த யது குலச்சிரேஷ்டனான சூரஸேனன் என்பவனுக்கு வஸுதேவர் என்னும் உத்தம குமாரனுண்டானார். இவர் தேவகியை மணந்துகொண்டார். உக்கிரசேனன் விவாக மஹோற்சவத்தை விசேஷமாய்க் கொண்டாடி, தேவகிக்கு ஏராளமான ஸ்திரீதன மளித்தார்; திருமணம் முடிந்ததும், வஸுதேவர் தேவகியுடன் திவ்விய ரதத்திலேறி, தம்மிருப்பிடம் நோக்கிப் புறப்பட்டார். அச்சமயம் கம்ஸன், தனதருமைச் சகோதரியிடமுள்ள அன்பினால், குதிரைகளின் கடிவாளங்களைக் கையிலேந்தித் தானே சாரத்தியம் செய்யலுற்றான். அப்போது, 'அடே கம்ஸனே! நீ மிகப் புத்தியீனன். செல்லத் தங்கையென்று நீ நினைத்துள்ள தேவகியின் எட்டாவது புத்திரன் உன்னை ஸம்ஹரிக்கப் போகின்றான்' என்றோர் ஆகாயவாணி பிறந்தது. இதைக்கேட்ட கம்ஸன் திடுக்கிட்டான். அவன் அவளிடம் பாராட்டிய அன்பானது 'சூரியனைக்கண்ட பனிபோல்' அக்கணமே நீங்கிற்று; அவன் தன் வாளை உருவி, அவளைக் கொல்லக் கருதினான். உடனே வஸுதேவர் அவனை நோக்கி, 'மகாசூரனே, நீ ஆகாயவாணியை நம்பி, இவ்வித ஸ்திரீவதை செய்யத் துணிவது உனது பராக்கிரமத்திற்கும், குலத்திற்கும் தகாது. இவ்வுலகில் பிறப்பும், மரணமும் நிவர்த்திக்க முடியாதவை. விதியால் ஏற்பட்ட காலத்தில் இவை சம்பவித்தே தீரும். கொடிய செயல்களால் மரணகாலத்தை மாற்ற முடியாது. ஆகையால், இப்பாவ காரியம் செய்யாது அவளை விட்டுவிடுவாயாக!' என்று புத்தி கூறினார். இவ்வுபதேசம் அவன் செவியில் ஏறாதது கண்டு, வஸுதேவர், 'சுத்தவீரனே, தேவகியிடமிருந்து உனக்கு யாதொரு பயமுமில்லையே. அவளது புத்திரனிடமிருந்துதானே உனக்கு ஆபத்து ஏற்படக்கூடியது. அவளுக்குக் குழந்தைகள் பிறக்கப் பிறக்க, அவற்றை உனது கையில் கொடுத்துவிடுகிறேன்' என்று சொன்னதும், கம்ஸன் மகிழ்வடைந்து, அவ

ளைக் கொல்லாது விட்டுவிட்டான். வஸுதேவர் தேவகியுடன் தமது கிருகமடைந்தார்.

காலத்தில் தேவகி கர்ப்பந்தரித்து, கீர்த்திமான் என்ற புத்திரனைப் பெற்றாள். உடனே வஸுதேவர் அச் சிசுவைக் கம்ஸனிடம் சமர்ப்பிக்கவே, அவன் அவர் வாக்குறுதியை மெச்சி, அதை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டான். இவ்வாறே, பின்னர் பிறந்த ஐந்து புத்திரர்களையும் கம்ஸன் உபத்திரவியாமல் விட்டுவிட்டான்.

இவ்வாறிருக்கையில், மூவுலகுகளிலும் ஸஞ்சரித்து, ஆங்காங்குள்ள தகவல்களறிந்து, தக்க உபாயங்களைக்கொண்டு, துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம் இவை ஈடேறுவதற்காகப் பாடுபட்டு உழைத்துவரும் நாரதமகரிஷி கம்ஸனிடம் வந்தார். சற்றும் சுயநலம் கருதாது, உலக ஹிதத்தையே தேட முயன்றுவரும் முக்தரும் உத்தம ஞானியுமான நாரதரின் செய்கைகளின் இரகசியமறியாது, 'நாரதர் கலகப்பிரியர்; மித்திரபேதம் செய்பவர்' என்று பாமர ஜனங்கள் பழி கூறுகின்றனர். கம்ஸன் அவரை நல்வரவேற்று உபசரித்தான். பின்னர் அவர், "அரசனே, நீயும் உன்னைச்சார்ந்த அகன், சாணூரன் முதலானோரும் அஸுராம்சமாய்ப் பிறந்தவர்கள். நந்த கோகுலத்தோரும், வஸுதேவாதிகளும் தேவாம்சங்கள். உங்களைச் சங்கரித்து, தேவர் முதலானோரை ரக்ஷித்து, தர்மத்தை நிலைநாட்டுவதற்காக, ஹரியானவர் தேவகியின் கர்ப்பத்தில் அவதரிக்கப்போகிறார். இனி உன் உயிரைக் காத்துக்கொள்ள வழி தேடுவாயாக" என்று கூறி மறைந்தார்.

இதைக்கேட்டு, கம்ஸன் பெரும் நடுக்கமுற்றான்; 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதுபோல், எச் சிசுவைக் கண்டாலும் அது தனக்கு நமனாயிருக்குமோவென்று அஞ்சித் தவித்தான். ஆதலால் அவன் தன் தந்தையைச் சிறையிலிட்டு, தானே அரசனாகி, சூரஸேனனது இராஜ்யங்களைக் கைப்பற்றி கொடுங்கோல் செலுத்திவந்தான். வஸுதேவர், தேவகி இவர்களை வரவழைத்து, விலங்கிட்டுக் காவலில் வைத்தான்; அவர்களது ஆறு பிள்ளைகளையும் கொன்றான். விஷ்ணுவின்மீது பெரும்பகை பாராட்டி, பசுக்கள், அந்தணர், யாதவர்கள் முதலானோரை இம்சிக்கத் தொடங்கினான். இந்த உபத்திரவம் பொறுக்க முடியாமல், பல மன்னர்களும் ஜனங்களும், குரு பாஞ்சாலம், விதர்ப்பம், விதேகம் முதலிய அயல்நாடு சென்று ஜீவிக்கலாயினர்.

வஸுதேவர் அவனுக்குப் பயந்து, தமது மற்றைய பத்தினிகளை வெவ்வேறிடங்களி லிருக்கச் செய்தார். ரோகிணி என்பவள் கோகுலாதிபதியான நந்தகோபர் வீட்டிலிருந்து வந்தாள்.

தேவகி ஏழாவது கர்ப்பந்தரித்தாள். அச்சமயம், திருமால் தமது யோகமாயையை நோக்கி, 'மங்களஸ்வரூபியே! இப்போது தேவகியின் கர்ப்பத்திலுள்ள ஆதிசேஷ ரூபியான சிசுவை எடுத்துப்போய், ரோகிணி வயிற்றில் வைத்து விடுவாயாக! நீயும் நந்தகோபருடைய பத்தினியான யசோதாப் பிராட்டியாரிடத்தில் உற்பவிக்கக்கடவாய்! நான் தேவகிக்குப் புத்திரனாய் அவதரித்து, பூபாரத்தை நீக்கப் போகிறேன்.' என ஆஞ்ஞாபித்தார். யோக மாயையும் அவ்வாறே செய்தாள். இவ்வாறு ரோகிணிக்குப் பிறந்த குமாரன், பலராமன் என்றும், ஸங்கர்ஷணன் என்றும் பெயர்பெற்று விளங்கினான்.

இவ்விவரமறியாத ஜனங்கள், பாவி கம்ஸனிடமுள்ள பயத்தால் தேவகியின் கர்ப்பம் கலைந்துவிட்டதென்று நினைத்து, அவன்மீது பழி கூறினர். பின்னர் அவளது கர்ப்பத்தில் பரமபுருஷன் அவதாரமாக, அவள் எப்போதுமில்லா விசேஷ காந்தியுடன் விளங்கலானாள்.

இதைக் கண்ட கம்ஸன் அவளைக் கொல்லலாமா என்று யோசித்தான். நல்ல வேளையாய், கர்ப்பிணியான தங்கையைக் கொல்வது மிகவும் பாவமென்று அவன் மனதில் தோன்றி, அவன் அவளைக் கொல்லாது விடுத்து, தனக்கு நமனாய் ஏற்பட்டுள்ள சிசுவின் ஜனனத்தை பிரதிக்ஷணமும் எதிர்பார்த்துக் கவலையுற்றிருந்தான்.

ஸ்ரீ கிருஷ்ண ஜனனம் — பகவான் அவதரிக்கும் தருணம் நெருங்கியது. பிரமாதி தேவர்கள், நாரதர் முதலான ரிஷிகள், தேவகி, வஸுதேவர்களுக்கு மாத்திரம் பிரஸன்னர்களாய் கைகுவித்து நின்று, அவள் கர்ப்பத்திலுள்ள பரமபுருஷனது பெருமையைப் பலவாறுதுதித்தனர், துஷ்டர்களை யழித்து, ஸாதுக்களை ஸம்ரக்ஷிக்குமாறு வேண்டினர். பின்னர், அவர்கள் தேவகியை நோக்கி, "ஸர்வேசுரனைப் புத்திரனாக அடையப்போகிற உனது பாக்கியமே பாக்கியம்! உன்னால் உலகிலுள்ள ஸாதுக்களுக்கு மங்

களம் ஏற்படப் போகிறது" என்று கூறிப் புகழ்ந்து மறைந்தனர். கண்ணன் பிறக்கும் புண்ணிய தினம் வந்தது. ஆவணி மாதம் கிருஷ்ண பக்ஷ அஷ்டமிதிதி, ரோகிணி நக்ஷத்திரம். இச் சுபதினத்தில் நடுநிசி வேளையில் தேவகி ஓர் அற்

ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்

புத ரூபலாவண்யமுள்ள குழந்தையைப் பெற்றாள். அச் சிசுவானது, விஷ்ணுவுக்குரிய சதுர்ப்புஜங்கள், சங்கம், சக்கரம், கதை முதலான ஆயுதங்கள் இவை பொருந்தியதாயும், நீலமேகம் போன்ற திருமேனி வர்ணமுடையதாயும் விளங்கிற்று. சிரசில் நவரத்தின கசிதமான கிரீடமும், கண்டத்தில் கௌஸ்துப மணியும், மற்றைய ஸ்தானங்களில் தக்க ஆபரணங்களுமணிந்து, அரையில் பீதாம்பரமும் தரித்திருந்தது. கண்களோ விசாலமாயும், தாமரைப் புஷ்பத்தைப் பழிக்கக்கூடியவையாயு மிருந்தன. அணிகளின் ஒளியால் பூசப்பட்டுள்ள கூந்தல்களின் அழகு வர்ணிக்க வொண்ணாது. அதன் சோபையால் சூதிகா கிருகமெல்லாம் ஒரே தேஜோமயமா யிருந்தது. அச் சமயம் தேவர், கின்னரர் முதலானோர் திவ்விய வாத்தியங்கள் முழக்கி, மங்களகீதம் பாடி, புஷ்பமாரி பொழிந்தனர். தத்ஸமயம் ஜலங்கள் தெளிந்தன. குளிர்ந்த காற்று வீசிற்று. இவ்விதக் குழந்தையைக் கண்டு, வஸுதேவர் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவராய், அவரது அடையாளங்களால் பரம புருஷன் என்று அறிந்து, பலவாறு துதித்தார். பின்னர், கம்ஸன் அவரைக் கொல்லக் காத்துக்கொண்டிருப்பதை நினைத்துத் துக்கத்தி லாழ்ந்தார். தேவகியும் பகவானது ஸ்வரூபமறிந்து, இன்னுமதிகமாய்த் துதித்தாள். மகாப் பிரளயகாலத்தில் ஓர் ஆலிலைமேற் பள்ளிகொண்டு, ஸர்வப் பிரம்மாண்டங்களையும் தமது குக்ஷியில் அடக்கிக் காக்கும் ஆதிபுருஷன் தன் வயிற்றில் பிறக்கும்படி தான் எவ்வளவுபாக்கியம் பெற்றிருக்கவேண்டுமென்று கூறி மகிழ்ந்தாள். அவர் அவ்வித ரூபத்துடனிருந்தால், கம்ஸனது சந்தேகம் ஸ்திரப்பட்டு, அதனால் ஆபத்து நேரிடும் என்றும், சாதாரண மனுஷ்ய ரூபத்துடன் விளங்குமாறும் அவரைப் பிரார்த்தித்தாள்.

இதுகேட்ட பகவான், 'தாயே, நீயும் உனது பர்த்தாவும் பூர்வ ஜன்மங்களில் என்னைக் குறித்துப் பெருந் தவஞ்செய்து, என்னைப் புத்திரனாக வரித்தீர்கள். அதை அனுசரித்து, உங்களது முன்னிரண்டு ஜன்மங்களில், நான் ப்ருச்னி கர்ப்பன் என்றும், உபேந்திரன் (வாமனன்) என்றும் அவதாரங்கள் எடுத்து, உங்கள் புத்திரராய்ப் பிறந்துள்ளேன். உங்களுக்கு முன் ஜன்மங்களின் ஞாபகம் வரும்பொருட்டே, இந்த அவதாரத்திலும் நான் இவ்வித ரூபத்துடன் பிறந்தேன். என்னை நீங்கள் சிலசமயம் சாதாரணமான புத்திரன் என்றும், வேறு சமயங்களில் ஸர்வேசுரன் என்றும் பாவித்து நடந்து, இறுதியில் மோக்ஷமடைவீர்கள். கம்ஸனிடமிருந்து சற்றும் அஞ்சாதீர்கள். கோகுலத்தில் யசோதைக்கு ஒரு பெண் பிறந்திருக்கிறது. வஸுதேவர் என்னை எடுத்துப்போய் அங்கு விட்டுவிட்டு, ஒருவருமறியாமல் அச் சிசுவை இங்குக் கொண்டுவரவேண்டும். இது விஷயமாய் ஏற்பட்டுள்ள விக்கினங்கள் தாமே விலகிவிடும். பயப்படாதீர்கள்' என்றுகூறி, தேவகி வஸுதேவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, ஒரு சாதாரணச் சிசுவாக விளங்கலானார்.

நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன் காமுற்றா ரேறு மடல்.

வஸுதேவர் அக்குழந்தையை எவ்வாறு கோகுலம் எடுத்துச்செல்வது என்று மயங்கினர். அவர் காலில் விலங்கிடப்பட்டிருந்தது. நடுநிசி

வடபத்ர சாயீ.

வேளை! எங்குப் பார்த்தாலும் ஒரே இருட்டு. வானம் இடித்து, மழை பெய்துகொண்டிருந்தது; என்றாலும், வஸுதேவர் தமது குழந்தையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். என்னே விந்தை! யோக மாயையின் பலத்தால், அவரது கால்விலங்குகள் கழன்றன. சிறைச்சாலையின் கதவுகளும், பூட்டுகளும், தாழ்களும் தாமே திறந்தன. காவலாளிகள் மெய்ம்மறந்து அயர்ந்து தூங்கினர். அச்சிசுவின்மேல் மழைத்துளி விழாமலிருக்குமாறு ஆதிசேஷன் தனது பணாமுடிகளால் குடைபிடித்துக் கொண்டு சென்றான். பயங்கரமான அலைகளுடன் பூரணமாய்ப் பிரவகித்துக்கொண்டிருந்த யமுனா நதியானது, ஸ்ரீராமாவதாரத்தில் சாகரம் அணை போட வழிவிட்டதுபோல், வஸுதேவருக்கு வழி விட்டது. அவர் கோகுலஞ் சென்று கோபிகைகள் அயர்ந்து தூங்குவதைக் கண்டார்; தமது சிசுவை யசோதை பக்கத்தில் விட்டுவிட்டு, அப்போதுதான் அவளுக்குப் பிறந்துள்ள பெண்குழந்தையை ஒருவருக்குந் தெரியாமல் எடுத்து வந்து, தேவகியின் பக்கலில் படுக்கவிட்டார். உடனே அவர் காலில் விலங்குகள் ஏற்பட்டன. கதவுகள் முதலியன தாமே மூடுண்டன.

காவலர் விழித்துக் கொண்டனர். அவர்கள் குழந்தையின் அழுகைச் சப்தம் கேட்டு, விரைந்தோடிக் கம்ஸனிடம் தெரிவித்தனர். தக்ஷணமே அவன் படுக்கையைவிட்டுத் திடுக்கிட்டெழுந்து, அலங்கோலமாய்த் தேவகியிடம் ஓடி, அவள் கையிலுள்ள சிசுவைப் பலாத்காரமாய்ப் பிடுங்க ஆரம்பித்தான். தேவகி நடுநடுங்கி, 'அண்ணா, இது ஆணல்ல; பெண் குழந்தை. எனது புத்திரனல்லவோ உமக்குப் பயமுண்டாகும் என்று அசரீரி வாக்குண்டாயிற்று. இதைக் கொல்லாது விடுப்பீராக' என்று பலவாறு மன்றாடிக் கேட்டாள். கம்ஸனோ அதைச் சற்றும் கவனியாது, அச்சிசுவைக் கைப்பற்றி, அதன் கால்களைப் பிடித்துச் சுழற்றி, அருகிலுள்ள ஒரு கற்பாறைமீது ஓங்கி யடிக்க முயன்றான். ஆச்சரியம் என்னே! அப்போது அந்தக் குழந்தை அவன் கையில் நின்றும் நழுவி, உயரக் கிளம்பி, திவ்விய ஆடை ஆபரணங்கள் அணிந்த ஒரு ஸ்திரீ ரூபந்தரித்து, கம்ஸனை நோக்கி, 'அடே மூடா! என்னைக்கொல்ல உன்னால் ஆகுமோ? உன்னை மாய்க்கத்தக்க சத்துரு பிறந்து வேறிடத்தில் வளர்கிறான். அவனைத் தேடிக் கொல்லாவிடில், உனக்குச் சீக்கிரம் மரணம் ஏற்படும்' என்று சொல்லி மறைந்தது.

இதைச் செவியுற்ற கம்ஸன் "இஃதென்ன மாயம்! என்ன விந்தை! எனது சத்துரு வேறெங்கேயோ பிறந்திருக்கிறானாமே!" என்று திகைத்தான். தான் தேவகி வஸுதேவர்களை வீணாய் உபத்திரவித்து, அவர்களது குழந்தைகளை அழித்தது பற்றிப் பச்சாத்தாப முற்று வருந்தினான்; அவர்களைச் சிறையினின்றும் விடுவித்து, சாந்த வசனங்கள் கூறி, தனது அபராதத்தைப் பொறுத்தருளும்படி வேண்டினான். அவர்களும், தங்கள் விதியால் நேர்ந்ததுபற்றி அவன்மீது கோபிக்க நியாயமில்லை என்று கூறி,

காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு நல்லாண்மை யென்னும் புணை.

அவனை உற்சாகப்படுத்தி, ஒருவாறு களிப்புற்று, தமது கிருகம் சென்றனர்.

கம்ஸனுக்கு உதித்த நற்புத்தி நீடித்து நிற்கவில்லை. அவன் தனது துஷ்டமந்திரிகளை வரவழைத்து, யோகமாயை மொழிந்ததைத் தெரிவித்தான். அதுகேட்டு, அவர்கள் விஷ்ணுவின் பலத்துக்கும், பெருமைக்கும் ஆதாரமாயுள்ள பசு, விப்பிரர், யாகம், தவம் முதலியவற்றை தாங்கள் அழித்தும், கோகுலம் முதலான இடங்களிற் சென்று குழந்தைகளை யெல்லாம் கொன்றும் அவன் கவலை நீங்கச்செய்வதாய்க் கூறி உற்சாகப் படுத்தினார்கள். விதிவசத்தால், அவன் அவர்களது அபிப்பிராயத்துக் கிணங்கினன். துஷ்டர்கள் பலர் வெளிக்கிளம்பி, பசுக்களையும் ஸாதுக்களையும் இம்சித்து, குழந்தைகளைக் காரணமின்றி வதைசெய்து வந்தனர்.

கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனது லீலைகள்

கோகுலத்தில் யசோதைக்கு ஆண் குழந்தை பிறந்ததும், நந்தகோபர் ஆனந்தக் கடலில் மூழ்கினவராய், சாஸ்திர விதிப்படி தானாதிகள் செய்து, உத்ஸவங் கொண்டாடினர். ஆயர்பாடியிலுள்ளோர் அனைவரும் களிப்புற்று, பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றைக் காணிக்கையாய்ச் சமர்ப்பித்தனர். ஊர் முழுவதும் விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டு எங்கும் குதூகலமாயிருந்தது. கண்ணன் பிறந்ததுமுதல் கோகுலத்தில் எல்லாச் சம்பத்துக்களும் பெருகலாயின. பசுக்கள் விருத்தியடைந்து, குடங் குடமாய்ப்பால் கறந்தன. கிருஷ்ணன் வெகு சீராட்டுடன் வளர்க்கப்பட்டுவந்தார்.

இங்கு இவ்வாறிருக்க, கம்ஸன் தனது சத்துருவாய்ப் பிறந்துள்ள சிசுவைக் கண்டுபிடித்துக்கொல்வதற்கான வழிகளைத் தேடலுற்றான். பூதனை என்னும் கொடிய ராக்ஷஸியை ஏவி, ஆங்காங்குள்ள குழந்தைகளைக் கொன்று வரும்படி நியமித்தான். அவள் ஓர் அழகிய ஸ்திரீ ரூபமெடுத்து, உயர்ந்த ஆடையாபரணங்களணிந்து, உத்தமிபோல் நடித்து, அநேக சிசுக்களைக் கொன்றுவிட்டு, கோகுல மடைந்து நந்தகோபரது வீட்டில் நுழைந்தாள்; தொட்டிலில் கண்வளரும் கார்வண்ணனைத் தாலாட்டி, வாரியெடுத்து, உச்சிமோந்து, பால் கொடுப்பது போல் பாசாங்கு செய்து, அரைக் கொல்ல யத்தனித்தாள். இந்தப் பாதகியின் வஞ்சகமறிந்த மாயோன், பாலுடன் அவளது ஆவியையும் உரிய ஆரம்பித்தார். தன் பிராணனுக்கே ஹானி வருமென்று பயந்து, பூதனை 'பால் குடித்தது போதும், போதும்' என்று கூவினள். கண்ணன் அதைச் சிறிதும் கவனியாது, அவள் உயிரை முற்றிலும் உறிஞ்சிவிட்டார். உடனே அவள் தன் நிஜரூபத்துடன் விழுந்து மாண்டாள். இச்செய்தி கேள்வியுற்ற யசோதை முதலானோர் குழந்தை பயந்திருக்குமென்று நினைத்து,

யசோதை கிருஷ்ணன்

அதற்குத் திருஷ்டி கழித்து, ரக்ஷை கட்டினர்கள்.

பூதனை மாண்டதைச் செவியுற்ற கம்ஸன் சினங்கொண்டு, நந்தகோபரது புதல்வனைக் கொன்று வரும்படி சகடாசுரன், திருணாவர்த்தன் எனும் அரக்கர்களை ஏவியனுப்பினன். ஒரு சமயம், யசோதை முதலானோர் கண்ணனது ஜன்மநக்ஷத்திர தினத்தில் விசேஷ உற்சவம் கொண்டாடிக் கொண்டிருக்கையில், சகடாஸு-

தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு மாலை யுழக்குந் துயர்.

ரன் ஒரு வண்டி யுருக்கொண்டு, குழந்தை உறங்கும் தொட்டிலருகில் வந்தான். கண்ணன், தாமரை இதழ்போன்ற திருவடிகளால் அதை உதைத்தார். அவ்வேகம் தாங்கமுடியாது அச்சகடம் உரத்த சப்தத்துடன் முறிந்து விழுந்தது. உடனே எல்லோரும் ஓடிவந்து, குழந்தை பிழைத்ததுபற்றி சந்தோஷமுற்று, அதற்குச் சாந்தி கழித்தனர் அந்தோ! மாயையின் மோகம்! ஜகத்பதியின் பிரபாவம் அப்பொழுதும் அவர்களுக்கு விளங்கவில்லை!

சகடாஸுரன் மாண்டதைக் கேள்வியுற்ற திருணுவர்த்தன் சுழற்காற்று ரூபமெடுத்து, கோகுலத்திலுள்ளோர் கண்விழித்துப் பாராவண்ணம் மண்ணைவாரித் தூவி, அச் சமயம் கீழே படுக்கவிடப்பட்டிருந்த பாலகிருஷ்ணனை எடுத்துச் சென்றான். அக்குழந்தை வரவர ஒரு மலைபோல் பளுவாக ஆயிற்று. அவன் அதைத் தாங்கமுடியாது, கீழேவிட யத்தனித்ததும், அது அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு இறுக்கிற்று. அவன் கழுத்து நெறிந்து, கண்கள் பிதுங்கின; அவன் தன் அசுர ரூபத்துடன் ஒரு கற்பாறையின்மீது விழுந்து, உயிர் துறந்தான்.

யாதவர்களின் குலகுருவாகிய கர்க்காசாரியர், வஸுதேவரது வேண்டுகோளுக்கிணங்கி, இரகசியமாய்க் கோகுலஞ் சென்று, ரோகிணியின் குழந்தைக்குப் பலராமன் என்றும், வஸுதேவரது புதல்வனுக்கு கிருஷ்ணன், வாஸுதேவன் என்றும் நாமகரணம் செய்தார். மேலும், கிருஷ்ணனுக்கு அநந்தமான புண்ணிய நாமதேயங்களுண்டு என்றும், அவற்றுள் எதையாவது சொல்லி அக்குழந்தையைப் பூஜிப்பவன் இம்மையிலும், மறுமையிலும் பரமசுக மனுபவிப்பான் என்றும் பகவானது மகிமையை கூறிச் சென்றார்.

ஸ்ரீ கிருஷ்ணன் பலவித பாலலீலைகள் செய்து வந்தார். செந்தாமரைப் புஷ்பம்போன்ற திருவடிகளில் அணியப்பட்ட தண்டை, சதங்கை முதலிய ஆபரணங்கள் சப்திக்க, தெருவில் போகிறவர்பின் தொடர்ந்து போவார். சில சமயம் மாட்டுக்கொட்டிலிற் பிரவேசித்துக் கன்றுகளின் வாலைப் பிடித்திழுக்க, அவை அவரையும் கூட இழுத்துக்கொண்டு ஓடும்; சில சமயம் பூனையின் வாயில் கையை விடுவார்; பாம்பின் வாலைப் பிடித்திழுப்பார். நடக்கும் பருவம் வந்தது; ராமகிருஷ்ணர்கள் இடைச்சிறுவர்களுடன் கோபிகைகள் வீடுசென்று, தயிர், பால், வெண்ணெய் முதலியவற்றைத் தாங்கள் அபகரித்து உண்ணுவதுடன், தம்முடன் வந்த பூனை, குரங்குகளுக்கும் கொடுத்து கைதட்டிக் கூத்தாடிக்கொண்டு வெளிவருவார்கள். சில வீடுகளில் கன்றுகளை அவிழ்த்து, வெளியில் துரத்தி, மாடுகளைக் கதறச் செய்வார்கள். பால், தயிர் திருடிச் சாப்பிடும் சமயத்தில், வீட்டுக்குரிய கோபஸ்திரீ வந்து கேட்டால்

கிருஷ்ணன் வாய்திறக்க பிரமாண்டம் காணப்படுதல்

அவள் கண்களில் தாம் புஜித்த மீதியைத் துப்பி நகைப்பார்கள். ஒரு சமயம் கோபிகைகள் கிருஷ்ணனைக் கையுங்களவுமாய்ப் பிடித்துக்கொண்டு, யசோதையிடம் குறைகூறப் போகுந் தருணத்தில், பகவான் அவள் மடியில் படுத்துப் பாலுண்டுவருவதை நோக்கி, 'இஃதென்ன விந்தை!!' எனத் திகைத்துத் திரும்புவார்கள். கண்ணன் ஒரு சமயம் மண்ணைத்தின்றுவிட்டதாகக் கேள்வியுற்ற யசோதையானவள் அவரை அதட்டிக் கேட்க பகவான் பயந்தவர்போல் நடித்து, தாம்

மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற படலொல்லா பேதைக்கென் கண்.

அவ்வாறு செய்யவில்லை யென்று கூறி, தமது வாயையும் திறந்து காட்டினர். ஆச்சரியம் என்னே! 'சகலப் பிரம்மாண்டங்களும், சமுத்திரங்களும், தேவர், அசுரர் முதலானோரும், யாதவர்களும், கோகுலத்திலுள்ளோரும், யசோதை, பலராமன், கிருஷ்ணன் இவர்களும், மற்றைய சராசர வஸ்துக்களும் அதிற் காணப்பட்டன!'

இதுகண்டு, யசோதை திகைத்து, அவரைப் பராபரவஸ்துவென நினைத்து, பலவாறு துதித்து வாழ்த்தினள். உடனே அவரது மாயையால் அவரது பிரம்மஸ்வரூபத்தை மறந்து, தன் அருமைப் புதல்வன் என நினைத்து அவரைச் சீராட்டலுற்றாள்.

ஒரு சமயம் கிருஷ்ணன் தம் வீட்டிலுள்ள தயிர் பாண்டத்தை யுடைத்து தயிரேடுகளைப் புஜிக்கலானர். யசோதை அவரை ஓரிடத்தில் உரலில் கட்டி வைக்கக் கருதி, அநேகம் கயிறுகள், தும்புகள் கொண்டுவந்து கட்டினள். எவ்வளவு கொண்டு வந்தாலும், கொஞ்சம் நீளம் போதாமலே இருந்தது. 'இதென்ன மாயம்! இச்சிறிய இடுப்புக்கு இத்தனை கயிறுகளும் போதாமலிருப்பானேன்?' என்று திகைத்தாள். அப்போது பகவான் அவளிடம் அன்பு பாட்டி, உடனே கட்டுண்டார். பிறகு அவர் அவ்வுரலை இழுத்துக்கொண்டு, வீட்டுப் பின்புறத் தோட்டத்திலுள்ள இரண்டு மருத மரங்களுக்கு நடுவே செல்ல, உரல் அவற்றிற் சிக்கிக் கொண்டது. பகவான் அதை வேகமாய் இழுக்க, அம்மரங்கள் கீழே விழுந்தன. ஆச்சரியம்! நாரத சாபத்தால் அவ்வுருக் கொண்டிருந்த குபேர புத்திரர்கள், கார்வண்ணனது பாதஸ்பரிசம் பட்டதும், சாபம் நீங்கி, தங்கள் திவ்வியஸ்வரூபம் பெற்றவர்களாய், அவரைப் புகழ்ந்து சென்றனர். இன்னும் மற்றைய விளையாடல்களிலும் இடைச்சிறுவர்களுக்குத் தமது மகிமையை ஆங்காங்கே காண்பித்தும் வந்துளார். இவற்றையெல்லாம் கண்டும் கூட, ஆயர்பாடியிலுள்ளோர் அவரது பரப்பிரம ஸ்வரூபத்தை நன்கு அறியவில்லை! மாயையின் மோஹம் என்னே!

கண்ணனுக்கு ஐந்து வயதாயிற்று. பூதனை முதலானோரால் நேர்ந்த ஆபத்துக்களை நினைந்து, நந்தகோபர்கள் கூடி ஆலோசித்து, கோகுலம் விட்டுச்சென்று, பிருந்தாவனத்தில் குடியேறி வசிப்பதே நலமென்று தீர்மானித்தனர். உடனே அவர்கள் தங்கள் சாமக்கிரியைகளை அநேகம் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு, பசுக்கூட்டங்களுடன் புறப்பட்டுச்சென்று, பிருந்தாவனம் அடைந்து, அங்கு அர்த்தசந்திரரூபமாய் ஓர் ஆயர்பாடி ஏற்படுத்திக்கொண்டனர். கோவர்த்தன பர்வதம், அழகிய வனங்கள், யமுனாநதியின் மணற்குன்றுகள் இவைகளில் ராமகிருஷ்ணர்கள் இடைச்சிறுவர்களுடன் மாடுமேய்த்து விளையாடிச் சுகமாய்க் காலங்கழித்து வந்தனர். கண்ணன் புல்லாங்குழலூதி இனியகானத்தால், பசு, பக்ஷி, மிருகங்களையும் களிப்புறச் செய்வார். அவரது கீதம்

ஸ்ரீ கிருஷ்ணன் வேணுகானம்

கேட்டு, மயில்கள் தோகை விரித்து ஆட ஆரம்பிக்கும். மாடு கன்றுகள் புல்மேய்வதை விட்டு, படத்தில் வரைந்துள்ள பிரதிமைகள் நின்று, உற்றுக் கேட்டு ஆனந்தானுபவம் செய்யும். இடைச் சிறுவர்கள் ஆனந்த பரவசராவார்கள்.

கோகுலத்தோர் பிருந்தாவனம் வந்தும், கம்ஸனு லுண்டாகக்கூடிய இடர்கள் ஒயவில்லை.

கண்ணன் முதலானோர் கன்றுகள் மேய்த்துக் கொண்டிருக்கையில், கம்ஸனால் ஏவப்பட்ட வத்ஸன் என்னும் அரக்கன் ஒரு கன்றுருவங் கொண்டு, கன்றுக் கூட்டத்தோடு கலந்து சென்று, ஸ்ரீராம கிருஷ்ணர்களைக் கொல்லச் சமயம் பார்த்து வந்தான். இதையறிந்த பகவான், அவன் பின்கால்களையும், வாலையும் பிடித்துச் சுழற்றி, ஒரு விளாமரத்தின்மீது ஓங்கி எறிந்தார். உதிர்ந்து விழுந்த விளாங்கனிகளுடன், அவ்வரக்கனும் மாண்டு விழுந்தான். மற்றொரு சமயம் இடைச் சிறுவர்கள் நதிக்கரையில் மாடுகளுக்கு நீர் காட்டி, தாங்களும் புசித்து ஜலம் பருகச் சென்றனர். அப்போது பகாஸுரன் என்பவன் பர்வத சிருங்கம் போன்ற ஒரு கொக்கு வடிவங்கொண்டு, கிருஷ்ணனை கவ்விப் பிடித்ததைக் கண்ணுற்ற இடைச் சிறுவர்கள் “ஹா, ஹா” என்று கதறி, யாது செய்வதென்று தெரியாது தவித்தனர். பகவான் அக்கொக்கின் தொண்டையில் சென்றதும், மழுப்போல் தகிக்க ஆரம்பித்தார். உடனே அந்த அஸுரன் அவரைக் கீழே கக்கி, தன் மூக்கினால் கொத்த ஆரம்பித்தான். அப்போது கண்ணன் அவனது மூக்கைப் பிடித்துக் கிழித்து, அவனை மாய்த்தார். இது செவியுற்ற நந்தகோபர் முதலானோர் கண்ணனது பெருமையைக் கொண்டாடிப் புகழ்ந்தனர்.

பகாஸுரனுக்கு அகாசுரன் என்ற தம்பியிருந்தான். பகன் இறந்ததைக் கேட்டு, அகன் சினங்கொண்டு, ஒரு மலைப் பாம்பினுருவமெடுத்து, கோபாலர்கள் மாடு கன்றுகளை ஓட்டி வரும் வழியில், ஒரு பெருங் குகைபோல் வாயைத் திறந்துகொண்டிருந்தான். மாடு கன்றுகளும், இடையர்களும், அதன் விவரமறியாது, அதன் வாயில் புகுந்து தவித்தனர். கண்ணன் பிரவேசித்ததும், அவன் தன் வாயை மூடி, எல்லோரையும் ஏககாலத்தில் அழிக்கக் கருதி யிருந்தான். அப்போது பகவான் அவன் வாயில் நுழைந்து, தமது தேகத்தை மிகப் பெரிதாக வளரச் செய்தார். இதனால் அவன் நெஞ்சடைபட்டு, சுவாஸம் விடமுடியாமல் தவித்து, விழிகள் பிதுங்க, நாக்கை நீட்டிக்கொண்டு, உயிர் துறந்தான்.

யமுனையாற்றின் ஓர் ஆழ்ந்த மடிவில் காளியன் என்னும் நாகராஜன் தன் பரிவாரத்துடன் வசித்து வந்தான். அவற்றின் விஷாக்கினியால், அங்குவரும் சகலரும் மடிந்து வந்தனர். இதையறிந்த பகவான் ஒரு சமயம் தம்தோழர்களுடன அங்கு மாடு மேய்த்துவருகையில், அம்மடுவிற் குதித்து காளியனது பணாமுடிகளை மிதித்து நர்த்தனஞ்செய்து, அவனது பலம் குன்றச்செய்தார். அவரது வேகம் தாங்கமுடியாமல் அவன் கதறினான். அவனது பத்தினிகள் கண்ணனைச்சரணமடைந்து, அவனை மாய்க்காம லிருக்கும்படி வேண்டினர். அவரும் கிருபை கூர்ந்து, அவனைக்



காளிங்க மர்த்தனம்.

கொல்லாது விடுத்து, அவன் குடும்பசகிதம் அம்மடுவை விட்டுச் சமுத்திரத்திற்குப் போகும்படி நியமித்தார். பின்னர், ஒருநாள் காளிந்தி மடுவுக்கருகாமையில் உண்டான காட்டுத்தீயை கார்வண்ணன் உட்கொண்டு, பசுக்கள், கோபாலர்கள் முதலானோர் அத்தீயிலகப்பட்டு அழியாமற் காப்பாற்றினர்.

கம்ஸாதி அஸுரர்கள் மாத்திரமல்ல; பிரம்மதேவன், இந்திரன் முதலானோரும் ஒரு ஸமயம்

நிறையரியர் மன்னளிய ரென்னாது காம மறையிறந்து மன்று படும்.

மதிமயங்கி, பகவானது பிரபாவம் தெரியாமல் காரியங்களைச் செய்து அவமான மடைந்தனர். ஒருநாள் ஸ்ரீகிருஷ்ணன் தமது நேயர்களான இடைச் சிறுவர்களோடு யமுனாநதியின் மணற் றிட்டில் போஜனஞ் செய்து கொண்டிருந்தார். அப்போது பிரம்மதேவர் அங்கு மேய்ந்துகொண் டிருந்த கன்றுக்கூட்டங்களை ஓட்டிச் சென்று ஓரிடத்தில் மறைத்துவைத்துவிட்டார்; பகவான் தம் தோழர்களுக்குத் தைரியஞ் சொல்லி, கையுங் கபளமுமாய்ப் புறப்பட்டு, கன்றுகளைத் தேடிச் சென்றார். திரும்பிவந்து பார்க்கையில், அச் சிறு வர்களும் அங்குக்காணப்படவில்லை. இதெல்லாம் பிரம்மனது சூழ்ச்சி என்றுணர்ந்த பகவான், தாமே அவ்வளவு கன்றுகளாகவும், இடைப் பாலகர்களாகவும் உருக்கொண்டு, அவை தத்தம் வீடுபோய்ச் சேரும்படிக்கும், ஒவ்வொரு நாளும் அவை புல்மேய்ந்து வருமாறும் செய்தார். இவ் வாறு ஒரு வருஷம் நடந்தது. பிறகு பிரம்மதே வர் இதுகண்டு ஆச்சரியமடைந்து, கண்ணன் முன் தோன்றி, தமது அபராதத்தைப் பொறுத்தருளும்படி வேண்டி, கன்றுகளையும் கோபாலர்களையும் கொண்டுவந்து கொடுத்தார். பகவானும் அவருக்குப் புத்தி கூறி, க்ஷமித்தரு ளினர்.

காலத்தில் மழை பெய்து, புற்கள் முளைத்து பசுக்கள் விருத்தியடைவதற்கும், தங்கள் செல் வம் பெருகுவதற்கும், கோபாலர்கள் வருஷந் தோறும் தேவேந்திரனைப் பூஜித்து பலியிடுவது வழக்கம். பகவான் அதை நிறுத்தி, கோவர்த்தன கிரிக்குப் பூஜை செய்யும்படி நியமித்தார். அவ் வாறு அதற்கு நிவேதனம் செய்யப்பட்ட எல் லாப் பதார்த்தங்களையும் தாமே புஜித்தார். 'திரி லோகாதிபதியான தனக்கு நிகரில்லை' என்று மகா கர்வங்கொண்டிருந்த தேவேந்திரன் சினங் கொண்டு, சப்த மேகங்களையும் ஏககாலத்தில் வருஷிக்கச் செய்தான். பகவான் அப்பர்வதத் தைப் பெயர்த்து எடுத்துத் தாங்கி, கோபாலர் தங்கள் பந்து மித்திரர்களுடனும், பசுக்கூட்டங் களுடன், தனதானியங்கள்முதலியவற்றுடனும், அதன் குகையில் நுழைந்து சுகமாய் வசிக்கும் படி செய்தார். இவ்வாறு ஏழுநாள் அப் பர்வ தத்தை அவர் தமது விரலால் ஒரு குடைபோல் பிடித்து நின்றார். இந்திரனும் வியப்புற்று, பக வானது மகிமையறிந்து, அவரைச் சரணம டைந்து, மோகத்தால் தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினன். பின்னர் அவனும், காமதேனுவும் ஸகலவைபவங்களுடன் பகவானுக்குக் கோவிந்த பட்டாபிஷேகம் செய்து, அவரது பெருமையைக் கொண்டாடித் துதித்தனர்.

பின்னர், ஒரு ராத்திரி வேளையில் கோபிகள் கண்ணனது இனிய புல்லாங்குழல் கீதத்தைக் கேட்டு ஆனந்தித்துக்கொண் டிருக்கையில், குபேரனது அனுசரனை சங்கசூடன் என்னு மோர் அசுரன், திடீரெனக் கோபிகைகளைத் தகைந்து, தமது மாயபலத்தால் அவர்களை வடக்கே இழுத்துச் சென்றான். அவர்கள் திகி லடைந்து கதற ஆரம்பித்தனர். உடனே பக வான் அவனைத் தொடர்ந்து சென்று, தமது முஷ்டியால் அவனை மாய்த்து, அவன் சிரத்தி லுள்ள உத்தம ரத்தினத்தை எடுத்து வந்து பலராமனிடம் சமர்ப்பித்தார்.

சின்னாள் கழிந்ததும், அரிஷ்டன் என்னுமரக் கன் ஒரு பெருங் காளை உருக்கொண்டு, கோகு லத்தோரை இம்சித்துவந்தான். ஒருநாள் பக வான் அவனைக் கோபமுறச் செய்து, சண்டைக் கழைத்து, அவனது கொம்புகளைப் பிடித்து இழுத்துத் துன்புறுத்தினர்; தமது காலால் உதைத்துக் கீழே தள்ளி நசுக்கவே, அக்கொடி யோனும் இரத்தம் கக்கி உயிர் துறந்தான்.

மற்றொரு சமயம், மாயாவியும் பலவானுமான வியோமாசுரன் என்பவன், ஒரு இடைச்சிறு வன் உருக்கொண்டு, கோபாலர்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் அவர்களுடன் கலந்து, அச் சிறுவர்களை ஒவ்வொருவனைக் கொண்டுபோய், ஒரு மலைக்குகையில் ஒளித்துவைத்து, ஒரு பெரும்பாறையால் அதன் வாயையை மூடிவிட் டான். இதெல்லாம் தெரியாததுபோ லிருந்து கவனித்துவந்த பகவான், அவனது சாமர்த்திய மான திருட்டுத்தனத்தை மெச்சிக்கொண்டே அவனது கண்டத்தைப் பிடித்து நெரித்தார். அவன் மூச்சுவிட முடியாமல் தவித்து, கண்கள் பிதுங்கி, தன் சுய ரூபத்துடன் 'ஐயோ' என் றலறிக்கொண்டு, பிராணனை விட்டான். இது கண்ட தேவர்கள் முதலானோர் பகவானைத் துதித்து மங்களம் பாடினர். உடனே பகவான் அப்பாறையை எடுத்துவிட்டு, கோபாலர்கள் வெளிவருமாறு செய்தார்.

இவ்வாறு கார்வண்ணன் கோகுலத்தோருக்கு ஏற்பட்ட உபத்திரவங்களை நீக்கிக் காத்தருளி

ஞர். இதனால் அங்குள்ள ஆண், பெண் அனை வரும் களிப்புற்று, அவரிடம் அளவற்ற அன்பு பாராட்டிவந்தனர்.

கம்ஸவதம்:—கம்ஸன் தான் ஏவியனுப்பிய அரக்கர் முதலானோ இறந்ததுபற்றித் துக்கிக்க லானான். அச்சமயம் நாரத மகரிஷி ஆங்கு எழுந்தருளி, யோகமாயை, பலராமன், கிருஷ் ணன் இவர்களது பிறப்பின் விவரத்தையும், அகன், பகன், முதலானோர் கிருஷ்ணனாலேயே அடிபட்டு மாண்டனர் என்பதையும் எடுத்துக் கூறினர். இதுகேட்ட கம்ஸன் பெருஞ் சினங் கொண்டு, தேவகி வஸுதேவர்களை மீண்டும் இருப்புச் சங்கிலிகளாற் கட்டிச் சிறையிடும்படி ஆஞ்ஞாபித்தான். பின்னர், அவன் தன் துர் மந்திரிகளோடு ஆலோசித்து, ராம கிருஷ்ணர் களை மதுரைக்கு வரவழைத்து, குவலயா பீடம் என்னும் தனது பட்டத்து யானையைக் கொண்டோ, அல்லது முஷ்டிகன், சாணூரன் என்ற பிரசித்தமான மல்லவீரர்களைக் கொண் டோ கொன்று அழிப்பதாய்த் தீர்மானித்தான். உடனே அவன் தன் நேயரான அக்ரூரரை வர வழைத்து, தனது துரெண்ணத்தை வெளி யிட்டு, அவரை பிருந்தாவனஞ் சென்று ராமகிரு ஷ்ணாதிகளை மதுரைக்கு அழைத்து வரும்படி வேண்டினன். உயர்குணமுள்ள அக்ரூரரும், கம்ஸனது துரெண்ணத்தைக் குறித்து துக் கித்தார். ஆனல், பகவானது தரிசனம் தமக் குக் கிடைப்பதுபற்றிக் களிப்புற்றார். இதற் குள், கம்ஸனால் ஏவப்பட்ட கேசி எனும் அஸு ரன் குதிரை உருவமெடுத்து, பிருந்தாவனத்தி லுள்ளோரைப் பலவிதமாய்த் துன்புறுத்தி வந் தான். அவர்கள் கண்ணனிடம் முறையிட்ட னர். பகவான் அவனைக்கண்டு அலட்சியமாய்ப் பேச, அவனும் பெருங் களிப்புடன், வாயைத் திறந்துகொண்டு அவரை விழுங்க வந்தான். அப்போது கண்ணன் அவனுடைய வாயில் தமது கையைவிட்டு, அவன் திக்குமுக்காடித் தவிக்குமாறு செய்தார். அவன் வாய் கிழிந்து பூமியில் விழுந்து மாண்டான். இவ்வாறு கேசி இறந்தது கண்டு எல்லோரும் களித்திருக்கை யில், அக்ரூரர் அங்குச் சென்றார்; நந்தகோபா திகளால் நல்வரவேற்கப் பெற்றார். பிறகு, தாம் வந்த செய்தியைத் தெரிவித்து, ராம கிருஷ்ணர் களை அழைத்துக்கொண்டு மதுராபுரி வந்து சேர்ந்தார். ராம கிருஷ்ணர்கள் அரண்மனைக் குப் போகும் வழியில், கம்ஸனுக்குக் கொண்டு போகப்பட்ட சந்தனம், புஷ்ப மாலை, வண்ணான் வெளுத்த வஸ்திரங்கள் இவற்றை வாங்கித் தரித்துக்கொண்டனர்.

ராமனும் கிருஷ்ணனும் வரும் விவரமறிந்த கம்ஸன் யானைப்பாகனைக் கூப்பிட்டு, குவலயா பீடத்தை அரண்மனை வாயிலில் நிறுத்தி வைத்து, ராமகிருஷ்ணர்கள் வந்ததும், அதை அவர்கள்மீது துரத்திக் கொன்றுவிடும்படி ஏவி னன். அவர்கள் வந்ததும், அவனும் அவ்வாறே செய்தான். தங்களைக் கொல்லவந்த அவ்யானையை அவர்கள் பிடித்து, தந்தங்களை உடைத்து, அவற்றால் அதன் வயிற்றைக் கிழிக்கவே, அது வும் பெருங்கூச்சலிட்டு உயிர்துறந்து விழுந் தது. தனது எண்ணம் இவ்வாறு வீணானது கேட்ட கம்ஸன் சினங்கொண்டு, அரண்மனைக் குள் வந்துகொண்டிருந்த ராமகிருஷ்ணர்களைக் கேவலமாய் இகழ்ந்து பேசி, தனது மல்லர்களு டன் யுத்தஞ் செய்யுமாறு நியமித்தான். அவர்க ளும் முஷ்டிகன், சாணூரன் என்னும் மல்லர்க ளுடன் போராடி அவர்களைக் கொன்றனர். இது கண்ட கம்ஸன் சினந்து, தனது வீரர்களை நோக்கி, ராமகிருஷ்ணர்களை அடித்துத் துரத் தும்படி ஏவினன். இதுகேட்ட கண்ணபிரான் அவன்மீது சிங்கக்குட்டிபோற் பாய்ந்து, அவ னைச் சிங்காதனத்திலிருந்து கீழேதள்ளி, அவன் மார்புமீது ஏறி, ஓங்கிக் குத்தினர்; அவன் உயிர் துறந்தான். பகவானது கரஸ்பரிஸம் பெற்று இறந்தமையால் அவன் மோக்ஷமடைந்தான். கொடுங்கோன் மன்னனாகிய கம்ஸன் ஒழிந்த தும் உலகமே களித்ததுபோலும்! தேவர் முத லானோர் பகவானை மெச்சி, மலர்மாரி பொழிந்து, மங்கள வாத்தியங்கள் முழக்கினர். உடனே பக வான், உக்கிரசேனன், தேவகி வஸுதேவர்களை யும், கம்ஸனால் சிறையிடப்பட்டுள்ள மன்னர் கள் முதலானோரையும் சிறையினின்று விடுவித் தருளினர். வஸுதேவர், தேவகி, ரோகிணி இவர்கள் ராமகிருஷ்ணர்களுடன் மதுராபுரியிற் சுகமாய்க் காலங்கழித்துவந்தனர்.

கண்ணபிரானுக்கு இப்போது வயது பதினொ ன்று. ராமனும் கிருஷ்ணனும் உபநயனம் செய் விக்கப்பெற்று, அவந்தி தேசத்திலுள்ள ஸாந்தீ பினி முனிவரிடம் வித்தியாப்பியாஸம் செய்து முடித்தனர்; அவருக்கு யாது குருதக்ஷிணை வேண்டுமெனக் கேட்டனர். அவர், முன்னர் பிர

பாசதீர்த்தத்தில் விழுந்து இறந்துபோன தமது புத்திரனை மீண்டும் உயிருடன் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டார் அவர்கள் இதுகேட்டு வருணலோகஞ் சென்று, அக்குழந்தையைக் கொன்றவன் சங்குருவாயுள்ள பஞ்சஜன் என்ற அஸுரன் என அறிந்தனர். பகவான் அவ்வசுரனைக்கொன்று, அவனுடைய சரீரத்தை 'பாஞ்சஜன்யம்' என்ற நிகரற்ற சங்கமாகக் கொண்டார். பின்னர் அவர் யமலோகஞ் சென்று, முனிபுத்திரனை உயிருடன் அழைத்து வந்து, தமது குருவிடம் சமர்ப்பித்தார். அவரும் மனமகிழ்ந்து உத்தம சிஷ்யர்களான அவர்களை பனமாற வாழ்த்தினர்.

கம்ஸன் இறந்தவிவரமறிந்து அவன்மாமனும், மகததேசத்தரசனுமான ஜராஸந்தன் பகவான் மீது பெரும் பகை பாராட்டி, போராடத் தீர்மானித்தான். இவன் மகா பராக்கிரமசாலி; பெருஞ்சேனை யுள்ளவன். இவன் பதினேழுதரம் மதுரையைச் சூழ்ந்துப் போராடவந்தான் ராமகிருஷ்ணர்களும் ஒவ்வொரு தடவையும் அவனது சைநியங்களை அழித்து, அவன் உயிர் தப்பி ஓடும்படி செய்தனர். ஜராஸந்தன் பதினெட்டாவது தடவை முற்றுகைபோட யத்தனித்தான். இதேசமயத்தில், மிலேச்சதேசாதிபதியான காலயவனன் என்பவன், தனது மூன்று கோடி சேனைகளுடன் மதுராபுரியைச் சூழ்ந்து தகைந்தான். இதனால் பிரஜைகளுக்கு வெகு அநர்த்தம் விளையுமென்று அறிந்த பகவான், விசுவகர்மாவைக் கொண்டு மேற்கு சமுத்திரக்கரையில் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் முதலியன நிறைந்துள்ள துவாரகை என்னுமோர் சிறந்த நகரம் நிர்மாணிக்கச் செய்தார். மதுரையிலுள்ள தமது பந்துஜனங்கள் யாவரையும் அங்குப்போகச் செய்தார். பின்னர், தாம் மதுரையைவிட்டு வெளிக்கிளம்பி, கால்நடையாய் வந்தார். நாரதரிடமிருந்து பகவானது ஸ்வரூபம் கேட்டறிந்துள்ள காலயவனன் அவரைச் சண்டைக்கு அழைத்தான். அவர் பயந்தவர் போல் ஓடினர். அவன் பின்தொடர்ந்தான். இவ்வாறு பகவான் அவனை வெகு தூரம் அழைத்துப் போய், ஒரு குகைக்குள் நுழைந்து மறைந்து கொண்டார். அங்கே சூரிய வம்சத்தரசனான முசுகுந்த சக்கரவர்த்தியானவன் வெகுகாலமாய் அயர்ந்து நித்திரை செய்துவந்தான். காலயவனன், கிருஷ்ணனே அவ்வாறு படுத்துத் தூங்குபவன் போல் பாசாங்கு செய்கிறான் என்று நினைத்து, முசுகுந்தனைத் தனது காலால் உதைத்தான். முசுகுந்தன் திடுக்கிட்டு, கண்ணை விழித்து, காலயவனனை நோக்கலுற்றான். தேவர்கள் அவனுக்கு அளித்துள்ள வரபலத்தால், அவனது ஜாடராக்கினியால் காலயவனன் தகிக்கப்பட்டுச் சாம்பராயினன். முசுகுந்தனும் பகவானால் அனுக்கிரகிக்கப்பட்டு, பதரிகாசிரமம் சென்று தவத்திலாழ்ந்தான்.

பிறகு கிருஷ்ணன் மதுரை சென்று, காலயவனனது சேனைகளை யழித்தார். பிறகு ஜராஸந்தன் 23 அக்ஷௌஹிணி சேனைகளுடன் அந்நகரை முற்றுகை போட்டான். அப்போது ராமகிருஷ்ணர்கள் பயந்தவர்கள்போல், கோமந்த பர்வதத்துக்கோடி, அங்கு ஒளித்துக்கொண்டனர் ஜராஸந்தன் அவர்களைப் பரிகசித்துக்கூறி, அவர்களைத் தேடிக்காணமல், அம்மலையில் தீ மூட்டி



ஸ்ரீ கிருஷ்ணன் ருக்மணியைத் தேரிலேற்றிச் செல்லல்

அலரெழ வாருயிர் நிற்கு மதனைப் டலரறியார் பாக்கியத் தால்.

எரித்தான். அச்சமயம் அவர்கள் ஆகாய மார்க்கமாய் வெளிக்கிளம்பி, அவனது சேனைகளை யழித்து, துவாரகைக்குச் சென்றனர். ஜராஸந்தன் அவர்கள் இறந்ததாக எண்ணித் திரும்பி வந்து, தனது சேனைகள் மாண்டழிந்ததைக் கண்டு விசனித்து, தன் நகரம் போய்ச் சேர்ந்தான். பின்னர், தர்மபுத்திரர் ராஜஸூய யாகம் செய்தக்கால், பகவான் பீமனைக்கொண்டு ஜராஸந்தனை மாய்க்கச் செய்தார்.

நரகாஸுர வதம்.—பூர்வம் வராக அவதார காலத்தில், திருமாலின் அனுக்கிரகத்தால், பூமிதேவிக்கு நரகாசுரன் என்ற புதல்வன் பிறந்தான். இவன் வெகு பராக்கிரமசாலி. ப்ராக்ஜோதிஷமென்ற நகரில் அரசுபுரிந்துவந்தான். இவன் இந்திராதி திக்பாலர்களையும், பூலோக மன்னர்களையும் வெகுவாறு இம்சித்துத் துன்புறுத்தி வந்தான். இந்திரனது வேண்டுகோளுக்கிணங்கி, பகவான் நரகனது நகரமடைந்து, கோட்டைகளை அழித்து, அவனுடைய மந்திரியான வீரனைக் கொன்று, பிறகு அவனையும் ஸம்ஹரித்தார். அவன் சிறையிட்டு வைத்திருந்த ஆயிரக்கணக்கான ராஜகன்னிகைகளை விடுவித்து, அவர்களது விருப்பத்துக்கேற்ப அவர்களைத் தாமே மணந்துகொண்டார். நரகாசுரன் இறந்த காலமான ஐப்பசிமீ கிருஷ்ண பட்சத்தில் விடியற்காலம் வரும் சதுர்த்தசி தினத்தை, நாம் இப்போதும் தீபாவளிப் பண்டிகையாகக் கொண்டாடி வருகிறோம். இது நரகாசுரன் வேண்டுகோளின்படி பகவான் அனுக்கிரகித்துள்ள புண்ணிய காலமாகும்.

கீதோபதேசம்

பகவானது விவாகம்:—பகவான் தமது வீரச் செயல்களால் ருக்மிணி, ஸத்தியபாமை முதலான பிரதான பத்தினிகளை யடைந்தார். விதர்ப்பாதிபதியான பீஷ்மனுக்கு ருக்மணி எனும் அருமைப் புதல்வி இருந்தாள். அவன் அவளைக் கண்ணனுக்கு விவாகஞ் செய்யக் கருதினன். ருக்மி என்னும் அவனது மூத்த குமாரன், கிருஷ்ணனைப்பற்றி இகழ்ந்து கூறி, அவளைச் சேதி தேசாதிபதியான சிசுபாலனுக்கு மணம் புரிவிக்கக் கருதினன். ருக்மிணி பகவானுக்கு இரகசியமாய்த் தகவலனுப்பி, எவ்விதமாயாவது அவர் தன்னை மணந்து கொள்ளவேண்டுமென்று

பிரார்த்தித்தாள். இதை அனுஸரித்து, பகவான் அங்குஎழுந்தருளி, அவள் அம்பிகாலயத்திற்குப் போகும் சமயத்தில், எல்லா அரசர்கள் முன்னிலையில் அவளைத் தமது ரதத்திலேற்றிக்கொண்டு சென்றார். பின் தொடர்ந்து போராடினவரைத் தோற்கடித்தார். ருக்மியைப் பிடித்து, மானபங்கப்படுத்திக் கொல்லாது விடுத்து, துவாரகை வந்து விவாக மகோற்சவம் கொண்டாடினார்.

ஸத்ராஜித் என்பவனிடம் ஸ்யமந்தக மணி யென்று ஓர் உத்தம ரத்தினமிருந்தது. அதைப் பகவான் கேட்டும், அதை அவன் கொடுக்கவில்லை. பின்னர் அந்த ரத்தினத்தை அவனது தம்பியான ப்ரஸேனன் இழக்க நேர்ந்தது. ஸத்ராஜித், பகவான்தான் அதை அபகரித்துள்ளார் என்று பழி கூறினன். இதைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டு, பகவான் அதைத் தேடிச் சென்று, ஜாம்பவானுடன் 18 நாள் போராடி, அதை வாங்கிவந்து ஸத்ராஜித்தினிடம் கொடுத்தார். அவன் மனமகிழ்ந்து, ஸத்தியபாமை என்னும் தன் அழகிய புதல்வியை அவருக்கு மணஞ்செய்வித்தான். பகவானும் இவளிடம் மிக்க மோகங்கொண்டவரா யிருந்துவந்தார். ஒரு ஸமயம், இவளைத் திருப்தி செய்விப்பதற்காக, தேவலோகத்திலுள்ள பாரிஜாத விருக்ஷத்தைப் பிடுங்கிக்கொண்டு வந்து, இவளது கிருகத்தில் வளரச் செய்தார். இவ்வாறே பகவான் மற்றைய மனைவிகளையும் பெற்று மகிழ்ந்துவந்தார்.

பகவான் பாண்டவருக்குதவுதல்:—தர்மாத்மாக்களும், அந்தரங்க பக்தி விசுவாஸமுள்ள பாண்டவர்களிடத்தில் பகவான் வெகு அன்பு பாராட்டி, ஆபத்துக் காலங்களில் அவர்களுக்கு உதவி புரிந்து வந்தார். துரியோதனுதிகள் திரௌபதியைச் சபையில் மானபங்கப் படுத்திய காலத்தில், கண்ணன் அவளைக் காத்தருளினர். பிறகு அவர்களது வனவாஸ காலத்தில், துர்வாஸரால் உபத்திரவம் நேரிட்டபோதும், அவர் வந்து அதைத் தீர்த்துவைத்தார். பாரதப்போர் ஆரம்பத்தில், அர்ஜுனனுக்குக் கீதை உபதேசம் செய்தும், யுத்தகாலங்களில் பலவாறு அவர்களுக்கு நேரிட்ட ஆபத்துக்களைத் தீர்த்தும் காப்பாற்றினர். பார்த்தனுக்குச் சாரதியாயிருந்து தொண்டு செய்த ஸௌலப்யம் என்னே! யுத்தம் முடியுங் காலத்தில், அசுவத்தாமனது, 'அபாண்டவாஸ்திரப் பிரயோகத்தில், அடிபட்டு மாண்டுள்ள உத்தரையின் கர்ப்பத்திலுள்ள சிசுவை, அது செத்துப்பிறந்ததும், பகவான் ஸ்பரிசித்து உயிர்ப்பித்தருளினர். இப் புத்திரன்தான் பரிக்ஷீத் என்னும் பிரசித்த அரசனுகி, பாகவதோத்தமன்' எனப் பெயர் பெற்று விளங்கினன்.

சிசுபாலாதி வதம்:—இப்போது, உலுகிலுள்ள பரம துஷ்டர்களுள், சிசுபாலனும், தந்தவக்கிரனும் நிக்கிரகிக்க வேண்டியுள்ளவராயினர்.

தர்மபுத்திரர் செய்த ராஜஸூய யாக முடிவில், அக்கிர தாம்பூலம் கொடுக்க வேண்டியிருந்தது. அதைப் பகவானுக்கே அளிக்க வேண்டுமென்று பீஷ்மாதிகள் கூற, அவ்வாறே செய்யப்பட்டது. அப்போது, சேதிதேசராஜனை சிசுபாலன், பகவானை இடையன் என்றும், பூஜிக்கத்தக்கவன் இல்லையென்றும் வாயில் வந்தபடி யெல்லாம் இகழ்ந்து கூறினன். பகவான் பொறுத்தும், அவன் மேன்மேல் தூஷித்தான். உடனே அவர் தமது சக்கராயுதத்தை விடுத்து,

க்ஷீராப்தி சயனம்.

அவன் சிரத்தை அறுத்துத் தள்ளினர். இது கண்டு அவரை எதிர்த்த தந்திவக்கிரனையும் ஸம்ஹரித்தார். இவர்கள் தேகத்திலிருந்து திவ்விய தேஜஸ் கிளம்பி உயரச்சென்றது. இவர்கள் முன்னர் ஏற்பட்ட நரஸிம்ம அவதாரத்தில் ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷனாகவும், ஸ்ரீராமாவதாரத்தில் ராவண கும்பகர்ணர்களாயும் இருந்து, ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் பகவானல் ஸம்ஹரிக்கப்பட்டு, சாபம் நீங்கினவர்களாய், வைகுண்டம் சென்று, திருமாலின் பாரிஷதர்களாகிப் பரமாநந்தம் பெற்றனர்.

பின்னர், பூபாரம் தீர்ந்து, பகவான் பரஞ்சோதிக்கு எழுந்தருளும் காலம் கிட்டியது. துஷ்டர்களான யாதவர்கள் ஒருவரோடொருவர் கலகமிட்டு, அடித்துக்கொண்டு மாண்டனர். ஆதிசேஷரூபியான பலராமன் கானகம் சென்று யோகத்திலாழ்ந்து உயிர்துறந்தார். பகவானும், காடுகளில் ஸஞ்சரித்து, களைத்துப் படுத்திருக்கையில், ஒரு வேடனாலடிப்பட்டு விண்ணுலகம் ஏகினர்.

மண்ணுலகில் தருமத்தை ஸ்தாபித்து, தமது விண்ணுலகம் வந்த பரந்தாமனை வானோர் பலவாறு போற்றிப் புகழ்ந்தனர். ஸனகாதிகள், ஆதிசேஷ சயனத்தில் பள்ளிகொள்ளும் பத்மநாபனை பரம புருஷனைக் கண்ணாரக் கண்டு ஸேவித்து, பரமானந்தானுபவம் செய்யலாயினர்.

வர்த்தமானக் குறிப்புகள்
NEWS AND NOTES

மான்டேக்-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள்:— இந்திய அரசாங்க விஷயமாய் இச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டது முதல், 1926ஞு நவம்பர்மீ 8வ சென்னை மாகாணத்தில் நடந்தேறிய தேர்தல் மூன்றாவது முறை ஆகும். இம்மாகாணத்தின் பல இடங்களில் நடைபெற்ற தேர்தல்கள் அமரிக்கையாயும், துக்ககரமான விசேஷ ஸம்பவங்கள் இல்லாமலும் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தக்கவாறு செய்யப்பட்டு, இவை சரிவர நடந்தேறியதுபற்றிச் சந்தோஷப் படுகிறோம். முந்திய இரண்டு தேர்தல்களைக் காட்டிலும், இப்பொழுது நடந்த தேர்தலில் அதிக வோட்டர்கள் வோட்டுக் கொடுத்திருக்கின்றனர். பலவிதக் கட்சியார்களும் தத்தம் அரசியல் நோக்கங்களைப் பத்திரிகைகள் மூலமாகவும் ஜனக் கூட்டங்களில் உபந்யாசங்கள் மூலமாயும், தெரியப் படுத்தி, அரசாங்க சம்பந்தமான விஷயங்களில் ஜனங்களின் கவனிப்பையும், உற்சாகத்தையும் அதிகப்படுத்தியுள்ளார். டில்லி சட்டசபைக்கும், சென்னை மாகாண சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு நமது மனப்பூர்வமான மனமகிழ்ச்சியைத் தெரிவிக்கிறோம். அவர்கள், சுயநலம் பாராட்டாமலும், கட்சி பேதத்தாலுண்டாகிய அபிப்பிராயங்களைப் பெரிது படுத்தாமலும், ஸ்வதேசாபிமானத்துடன் ஒத்துழைத்து, நமது நாட்டின் க்ஷேமத்தையும் மேன்மையையும் ஸ்தாபித்து, ஜனங்களின் மனதார்ந்த வந்தனத்துக்கும் புகழ்ச்சிக்கும் பாத்திரமாவார்கள் என நம்புகிறோம்.

சென்னையிலிருந்து இந்தியா சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தொகை 16: சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் தொகை 98. இந்தியா சட்டசபை மெம்பர்களில் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தவர் 11, (ஜஸ்டிஸ் கக்ஷியினர் கிடையாது) சுயேச்சைக் கக்ஷியினர் 3, இதரர்கள் 2. ஆகமொத்தம் 14. சென்னை சட்டசபைக்கு காங்கிரஸ் கக்ஷியைச் சார்ந்தவர் 47; ஜஸ்டிஸ் கக்ஷியினர் 17; சுயேச்சை வாதிகள் 27 ; இதரர்கள் 7 ஆக மொத்தம் 98.

* * *

சந்தா நேயர்களுக்கு:—இத்தொகுதி ஆரம்பம் முதல் பிரசுரமாகி வரும் நாவல் இரஞ்சிதத்தையும், சிறுத்தொண்டர் நாடகத்தையும் இத்தொகுதி முடிவதற்குள்ளாக முடிக்க வேண்டி, இவைகளுக்கு ஜாஸ்தி இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

* * *

விவேகபோதினி:—இதன் வருஷ சந்தாவை உள்நாடுகளுக்கு ரூ. 5-லிருந்து ரூ. 3-8-0க்கும், வெளி நாடுகளுக்கு ரூ. 6-லிருந்து ரூ.4-8-0க்கும் குறைத்து விட்டோம். சந்தாதார்கள் தங்கள் சந்தா பாக்கியை அனுப்பி வழக்கம்போல் பத்திரிகையை ஆதரிக்க வேண்டுகிறோம்.

N26,18 11
D18384.

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ **0—2—0**; டஜன் ரூ. **1—4—0**; **100** ரூ. **9—12—0.**

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ. **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதா ஞ்சனம்

ஸர்வ் நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணு பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும். இரண்டு தடவை உபயோகித்தவுடன், எவ்வித படையும் போய்விடும்.

விலை டப்பி ஒன்றுக்கு அணு ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். டப்பி ஒன்று அணு 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார் :—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1	0	0	வி. பி. தபால் செலவு ரூ.	0	5	0	பிரத்தியேகம்
4—புட்டிகள் ,,	2	10	0	,, ,, ,,	0	14	0	,,

☞ எச்சரிக்கை :—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினுல், அவர்கள் முயற்சிக்கு ஏமாருமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by The Alliance Company, "Shanmuga Vilas" Mylapore, Madras.